

இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் மாத நாவல்
க்ரைம் நாவல்
டிசம்பர்-2009
252
ரூ.10
ஆப்பிள் பெண்ணே! நீ யாரோ?
ராஜேஷ்குமார்

## கோயமுத்தூரிலிருந்து செல்போன் சிணுங்குகிறது...

அன்பான வாசக உள்ளங்களுக்கு!

வணக்கம். இன்றுள்ள நாட்டு நடப்பை உற்று கவனிக்கும்போது ஒரு விஷயம் தீர்க்கமாய் புலனாகிறது. இன்றைக்கு எல்லாமே டாப் கியரில் போய்க் கொண்டு இருக்கிறது.

வெய்யில் அடித்தால் 110 டிகிரி. மழை பெய்தால் ஒரே நாளில் 80 செ.மீ. பருப்பு விலையோ கிலோ 100 ரூபாய். ஒரு கிராம் வெள்ளியின் விலை 30 ரூபாய். ஒரு சவரன் தங்கம் கிட்டத்தட்ட 13 ஆயிரம் ரூபாய்.

கடந்த 90 ஆண்டுகளில் தங்கத்தின் விலையில் ஏற்பட்ட உயர்வை கவனிக்கும்போது இருதயத்தின் மையத்தில் சின்னதாய் ஒரு பூகம்பம். கடந்த 1920ஆம் ஆண்டில் ஒரு பவுன் தங்கத்தின் விலை வெறும் 21 ரூபாயாக இருந்தது. 1961-ம் ஆண்டில் அது 100 ரூபாயைத் தாண்டியது. 1978 ஆம் ஆண்டு 400 ரூபாயைத் தாண்டியது. 2006-ம் ஆண்டு 6 ஆயிரம் ரூபாயைத் தாண்டியது. 2006-ம் ஆண்டுக்குப் பிறகு தங்கத்தின் விலை ராக்கெட் வேகத்தில் ஏறியது. 3 ஆண்டுகளில் தங்கத்தின் விலை கிட்டத்தட்ட இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் மக்களுக்கு தங்கத்தின் மீதுள்ள மோகம்தான். தங்கத்தை தங்களுடைய அந்தஸ்தின் அடையாளச் சின்னமாகவே வைத்துள்ளார்கள். அணிந்து இருக்கும் தங்கத்தை வைத்தே ஒரு பெண்ணின் மதிப்பும் மரியாதையும் நிர்ணயம் செய்யப்படுகிறது. பலர் கூடும் திருமணம் போன்ற விழாக்களில் ஒரு பெண்ணின் பார்வை இன்னொரு பெண்ணின் கழுத்து, காது, மூக்கு, கைகளுக்குப் போய் அங்கே ஆபரணங்களாக உள்ள தங்கத்தை எடை போட்டுப் பார்க்கிறது.



தற்போது தங்கத்தின் விலை 12 ஆயிரம் ரூபாயைத் தாண்டி விட்டது. இதுவே நடுத்தர குடும்பங்களுக்கும், ஏழை மக்களுக்கும் தாங்க முடியாத விலை ஏற்றமாகும். அடுத்த ஆண்டு அதாவது 2010 - வது ஆண்டின் துவக்கத்தில் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ 16 ஆயிரமாக உயரும் என்றும் ஓர் அதிர்ச்சித் தகவல் தெரிவிக்கிறது. இது பற்றி 'பொருளாதார நிபுணர்களிடம் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமோ?

''முன்பு போல் இல்லாமல் தற்போது சர்வ தேச விலை நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை நிர்ணயிக்கப்படுகிறது. எனவே டாலர் மதிப்பு உயரும்போது தங்கத்தின் விலையும் உயர்கிறது. இது தவிர பங்குச் சந்தையில் முதலீடு செய்து வந்தவர்கள் தங்கத்தின் விலை அதிகரிப்பதை உணர்ந்து தங்கத்தில் முதலீடு செய்யத் தொடங்கியுள்ளனர். இதனால் இனிவரும் வாரங்களில் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ 16 ஆயிரம் வரை உயர வாய்ப்பு இருக்கிறது. அதாவது ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ 2000 ஆகிவிடும். இதே நிலைமை தொடர்ந்து நீடித்துக் கொண்டே போனால் தங்கம் என்பது ஒரு அரிதான பொருளாக மாறி விடக்கூடிய அபாயம் உண்டாகிவிடும். இதனால் ஓரளவு வசதி படைத்த மக்களே கூட தங்கம் வாங்குவது வெறும் கனவாக-கைக்கு எட்டாத ஒன்றாக மாறிவிடும். விலை இப்படி கடுமையாக உயர்ந்து இருந்தாலும் கூட தங்கத்தை பயன்படுத்துவதில் இந்தியாதான் நெம்பர் 1 நாடாக இன்றைக்கும் விளங்கிக் கொண்டு இருக்கிறது. தற்போதைய சர்வே படி உலகத்தில் 1.75 லட்சம் டன் தங்கம் உள்ளது. இதில் இந்தியாவில் மட்டும் 13 ஆயிரம் டன் தங்கம் உள்ளது.

தங்கத்தின் விலையை நிர்ணயம் செய்வது லண்டனில் உள்ள ஒரு அமைப்பு. இந்த அமைப்பின் பெயர் **'லண்டன் கோல்டு பூல்'** என்பதாகும். இதன் தலைவரும் 5 உறுப்பினர்களும் கூடி விலையை நிர்ணயம் செய்கிறார்கள். இவர்கள் அனைவரும்

லண்டன் தங்கம், வெள்ளி மார்க்கெட் சங்க உறுப்பினர்களாவர். அதாவது முன்னணி நகை வியாபாரிகள். தலைவராக இருப்பவர் ஒரு விலையைக் கூற அதன் 5 உறுப்பினர்களும் மற்ற நகை வியாபாரிகளும் அந்த விலைக்கு எவ்வளவு தங்கத்தை விற்கவோ வாங்கவோ தயாராக இருக்கிறார்கள் என்று கேட்டுத் தெரிந்து அதன் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. லண்டன் நேரப்படி காலை 10.30 மணி, பிற்பகல் 3 மணி என்று தினமும் இரு முறை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

''ஸார்..! தங்கத்தின் விலை எவ்வளவுதான் ஏறி உச்சாணிக் கொம்புக்குப் போனாலும் கொஞ்சமாவது தங்கம் வாங்கும் போது உண்டாகிற சந்தோஷமே தனிதான் ஸார்...!''

''செல்போன்ல கூட க்ராஸ்டாக்கா..! யாரது?''

''ஸார்... நான்தான் சுரேஷ் பாபு...''

''நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் மேல் நிலைப் பள்ளியில் முதுகலை இயற்பியல் ஆசிரியராய் பணிபுரிகிற M.சுரேஷ் பாபு தானே...?''

''ஆஹா... ஃபுல் அட்ரஸையே சொல்லிட்டீங்களே ஸார்?''

''பெரும்பாலான வாசகர்களோட முழு அட்ரஸும் எனக்கு மனப்பாடம் சுரேஷ்.... அதிலும் நீங்கள் ஒரு பள்ளியின் ஆசிரியர். அட்ரஸை மறக்க முடியுமா...?''

''ரொம்ப நன்றி ஸார்...! நான் ஸ்கூலுக்கு கிளம்பற நேரம். அடுத்த மாத க்ரைம் நாவலுக்கான தலைப்பைச் சொல்லிடறீங்களா ஸார்?''

''இதோ டைட்டில்! பிடிங்க... வித்தியாசமான டைட்டில்!''

''சொல்லுங்க ஸார்...''

**''மரணத்தை வரைந்தவன்!''**

''சூப்பர் ஸார்.''

டொக்.

மிக்க அன்புடன்

**ராஜேஷ்குமார்**



# ராஜேஷ்குமாரிடம்

★ பிரார்த்தனை செய்வதன் மூலம் பலன் கிடைக்குமா?

(எம். ஜெயசீலன், காட்டுமன்னார் கோயில்)

★★பிரார்த்தனை என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் அவசியம் இடம் பெற வேண்டிய அத்தியாவசியமான ஒன்று. வாழ்க்கையின் உயிர்நாடி என்று சொன்னாலும் தப்பில்லை. நம்மைப் படைத்த இறைவனை நினைத்து நாம் வேண்டிக் கொள்வதே பிரார்த்தனையாகும். பிரார்த்தனை என்பது 'எனக்கு பணத்தைக் கொடு. நான் பெரிய வீட்டைக் கட்டிக் கொள்ள வேண்டும். கார் வாங்க வேண்டும். என் எதிரிகள் அழிந்து போக வேண்டும்.' இப்படிப்பட்ட வேண்டுகோள்களை இறைவனின் முன்னால் வைப்பது பிரார்த்தனை அல்ல.

அதே போல் 'கடவுளே! நீ எனக்கு இந்த உதவியைச் செய்து கொடு. நான் உனக்கு நூறு தேங்காய் உடைக்கிறேன், பாலாபிஷேகம் செய்கிறேன்' என்று, வேண்டிக் கொள்வதும் பிரார்த்தனை அல்ல. இறைவனிடம் செய்யப்படும் பிரார்த்தனையானது ஆத்மாவை தூய்மைப்படுத்தும் படியும், அந்த ஆத்மாவைப் பற்றியுள்ள அறியாமையையும், வேண்டாத எண்ணங்களையும் களையும்படியாகவும் இருக்க வேண்டும்.

பிரார்த்தனை செய்யும் ஒருவனுக்கு அலங்கார சொற்கள் வேண்டியது இல்லை. இறைவனும் அதை விரும்புவது இல்லை. அதே போல் அர்த்தம் புரியாத மந்திரங்களை திரும்பத் திரும்பக் கூறி இறைவனை வணங்குவதும் பிரார்த்தனையல்ல. பிரார்த்தனை என்பது நம் உள்ளத்தின் உள்ளே உறைந்து கிடக்கும் தெய்வத்தன்மையை விழிப்படைய வைக்கும் படியாக அமைய வேண்டும். இறைவனிடம் பேரம்

# கேளுங்கள்!





பேசுவது ஒரு போதும் பிரார்த்தனையாகாது. நம்மில் பல பேர் அதைத்தான் இப்போது பிரார்த்தனை என்று சொல்லிக் கொண்டும், செய்து கொண்டும் இருக்கிறார்கள். யாரையும் வஞ்சிக்காத ஒருவன், ஆழ்ந்த நம்பிக்கையுடன் கடவுளை வழிபடும் ஒருவன் ஆகியோர் செய்யும் பிரார்த்தனை ஒரு உயிர் சக்தியாக மாறுகிறது. அந்த சக்தியின் காரணமாக அவர்கள் சொல்லும் வார்த்தைகள் பலித்து விடுகின்றன. ஆத்திரத்தில், கோபத்தில் சொல்லப் படும் வார்த்தைகள் மட்டுமின்றி இயற்கையாக வந்து விழும் வார்த்தைகளும் பலித்துவிடுகின்றன. எல்லா வற்றுக்கும் தெய்வநம்பிக்கையோடு செய்யப்படும் பிரார்த்தனைதான் காரணம். (முனிவர்கள் சாபம் இட்டால் பலிப்பது ஏன் என்று இப்போது புரிந்து இருக்குமே!)

★ நான் புகழோடும் செல்வத்தோடும் ஒரு வி.ஐ.பி.யாக வலம் வர என்ன வழி..?

**(ரா. தேவேந்திரன், சென்னை - 7)**

★★ புகழ், செல்வம் இருந்தால்தான் ஒரு வி.ஐ.பியாக வலம் வர முடியும் என்று உங்களுக்கு யார் சொன்னது..? பணத்தை ஒரு பொருட்டாக நினைக்காத பல பேர் அவர்கள் மறைந்த பின்னும் மக்கள் மனதில் வி.ஐ.பி.க்களாக அரியணை போட்டு அமர்ந்து இருக்கிறார்கள். ஒருவர் செய்யும் நற்செயல்களே அதற்குக் காரணம். இன்னொரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா? பொம்மைகளை வைத்து விளையாடும் குழந்தை தாய் வந்தவுடன் பொம்மைகளை வீசிவிட்டு 'அம்மா' என்று அழைத்துக் கொண்டு தாயை நோக்கி ஓடுகிறது. அது போல் மக்கள், பெயர், புகழ், செல்வம் என்னும் பொம்மைகளை வைத்து விளையாடுகின்றனர். ஒரு கட்டத்தில் இறைவனை தரிசித்ததும் அவர்களுக்கு அந்த பெயர், புகழ், செல்வம் போன்றவை மகிழ்ச்சி யைக் கொடுப்பது இல்லை. அவற்றைத் தூர எறிந்து விட்டு இறைவனை நோக்கி ஓடி விடுகின்றனர்.

★ நடிகைகள் பற்றிய அவதூறு செய்தியை ஒரு நாளேடு வெளியிட்டது சரியா... தவறா..?

**(எம். பொன்வண்ணன், கரூர்.)**

★★ சரி என்று ஒரு பிரிவினரும், தவறு என்று ஒரு பிரிவினரும் வாதம் செய்து கொண்டிருக்கும்



போது 'வின் எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு பத்திரிகை **'நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கோ!'** என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளது. அதில் நடிகைகளைப் பார்த்து சொல்லப்பட்ட ஒரு கருத்து இதோ..!

'சினிமா நடிகைகளைப் பற்றிய அவதூறு செய்தி என்பது எது..? தமிழ் சினிமா நடிகைகளில் ஒரே கணவனுடன் வாழ்க்கை நடத்தும் நடிகைகள் எத்தனை பேர் உள்ளார்கள்? பம்பாயிலிருந்தும் வட மாநிலத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட நடிகைகளின் கற்பு விளக்கப் பேச்சை உங்களால் கூட ஏற்க முடியவில்லையே! அந்த அளவுக்கு தாம் தாழ்ந்த வாழ்க்கையை ஏற்றிருக்கும் நடிகைகளைப் பற்றி பொதுமக்களுக்கு எதுவுமே தெரியாது என்பது போலவும் பத்திரிகைகள் மூலமாக மட்டுமே நடிகைகளின் வாழ்க்கை வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டு விட்டதாகவும் கூக்குரலிடுவது ஏன்? 'நீங்கள் எல்லாம் அக்கா தங்கைகளோடு பிறக்கவில்லையா?' என்று பத்திரிகையாளர்களைப் பார்த்து கேள்வி கேட்கும் நீங்கள் 90% உடம்பைக் காட்டி குத்தாட்டம் போடுவதைப் பார்த்து உங்களுடைய தந்தையும், சகோதரர்களும், ஏன் மகன்கள் கூட உங்களை மெச்சிக் கொள்கிறார்களா? கலாச்சார சீரழிவு என்பது எங்கிருந்து வந்தது? உங்கள் நடிப்பில் மட்டும் அல்ல, உங்கள் வாழ்க்கையே கலாச்சார சீரழிவு என்று மாறிவிட்ட பிறகு பத்திரிகைகளின் மீது பாய்வது எந்த விதத்தில் சரி? (இந்த பத்திரிகையோட கருத்தைப்பற்றி நீங்க என்ன நினைக்கறீங்க பொன்வண்ணன்?')

## பரிசுக்குரிய கேள்வி

★ நான் எவ்வளவுதான் திட்டம் போட்டு பணிகளைச் செயல்படுத்தினாலும் அது தோல்வி யில் முடிகிறது. என்னிடம் என்ன குறைபாடு உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா?

**(ஜி. செல்வமணி, திண்டுக்கல்.)**

★★ முடிகிறது. உங்களுடைய கையெழுத்து என்னால் புரிந்து கொள்ள முடியாத அளவு கோழிக்கிறுக்கலாக இருப்பதை வைத்தே நீ





ஒரு டென்ஷன் பேர்வழி என்பதை என்னால் புரிந்து
கொள்ள முடிகிறது. மற்றவர்களுக்கு இந்த எழுத்து
புரியவேண்டுமே என்ற அக்கறை இல்லாமல் ஒரு
தபால் கார்டில் எழுதி அனுப்பியிருக்கிறீர்கள். நீங்கள்
ஒரு டென்ஷன் பார்ட்டி என்று நான் கணித்தது உண்
மையாய் இருக்கும் பட்சத்தில் நீங்கள் திட்டமிடும்
எந்த ஒரு செயலும் வெற்றி பெறுவது சந்தேகமே!

ஏனென்றால் டென்ஷன் இல்லாமல் நிதானமாய்
சிந்தித்து ரசித்து முழு ஈடுபாட்டுடன் திட்டங்களை
செயல்படுத்தினால்தான் அந்தத் திட்டங்கள்
வெற்றியின் எல்லைக்கோட்டினைத் தொட்டுத்
திரும்பும். மூளையும் அப்போதுதான் உங்கள்
திட்டத்தோடு தானும் ஒரு பார்ட்னராய் சேர்ந்து
கொண்டு திறமையாய் செயலாற்றும். நீங்களே
கவனித்துப் பாருங்கள், விளையாட்டில் கூட
வெற்றியை நினைத்து அதிக படபடப்புடன் விளை
யாடும் குழுதான் பெரும்பாலும் தோற்றுப் போகும்.

டென்ஷன் படாமல் நிதானமாய் விளையாட்டை
அனுபவித்து ஆடும் அணிதான் இறுதியில் வெற்றி
பெறும். வெற்றி வேண்டும் என்று நினைப்பதில்
தவறு இல்லை. ஆனால் அதை அடைவதற்காக
அளவுக்கு மீறி ஆர்வப்படும்போதுதான் டென்ஷன்
என்ற ஒரு வேண்டாத நோய் தொற்றிக் கொள்கிறது.

மரத்தடியில் ஓய்வாய் உட்கார்ந்து இருந்த
போதுதான் ஆப்பிள் விழுவதை கவனித்தார்
நியூட்டன். உடனே புவிஈர்ப்பு பற்றிய விதியைக்
கண்டுபிடித்தார். குளியல் தொட்டியில் நிதானமாய்
குளித்துக் கொண்டிருந்த போதுதான் மிதப்பது
பற்றிய விதிகளைக் கண்டு உணர்ந்து உலகுக்குத்
தெரியப்படுத்தினார் ஆர்க்கிமிடீஸ். எந்த ஒன்றை
யுமே நிதானமாக செயல்படுத்திப் பார்த்தால்தான்
வெற்றியை ருசிக்க முடியும். (முதலில் உங்களு
டைய கையெழுத்தை அழகாக்குங்கள். எல்லாமே
அழகாகும்.)

★ எந்த ஒரு செய்தியையாவது படித்துவிட்டு
'இது கொடுமையிலும் கொடுமை' என்று
நினைத்து வருத்தப்பட்டது உண்டா?

**(-வி. பழனியப்பன், காரைக்குடி**

★★ 'இந்தக் கொடுமையை யாரிடம் போய்



சொல்ல' என்று நான் திகைத்து திணறி திண்டாடிக்
கொண்டு இருந்தபோது நல்ல வேளையாய் இப்படி
ஒரு கேள்வியைக் காரைக்குடியிலிருந்து டெலி
போன் மூலமாய்க் கேட்ட உங்களுக்கு நன்றி. அந்த
கொடுமையைச் சொல்கிறேன். நீங்களும் கேளுங்க.
பாலிவுட்டின் பிரபல நடிகரான சல்மான்கான்
(மான்களை வேட்டையாடிக் கொன்ற அதே
சல்மான்கான்தான்) பயன்படுத்திய மஞ்சள் நிறத்
துண்டு ஒன்று சில நாட்களுக்கு முன்பு ஏலத்துக்கு
வந்தது.

சல்மான்கான் 'ஜீனே கி ஹெய்ன் சார் தின்' என்ற
பாடல்காட்சியில் நடித்த போது பயன்படுத்திய
அந்தத் துண்டு ஸ்டார் ப்ளஸ் தொலைக்காட்சி
நிகழ்ச்சியின் போது ஏலம் விடப்பட்டது. ஏலம்
விடப்பட்ட ஒரு வாரத்தில் அதிக பட்சமாக 1.50
லட்ச ரூபாய் வரை ஏலம் கேட்டிருக்கிறார்கள்.
இன்னும் அதிகத் தொகைக்கு அந்தத் துண்டு ஏலம்
போகும் என்பதால் தொடர்கிறது ஏலம்.
அடி(மான்களைக் கொன்ற அந்த மகானுக்கு நம்
நாட்டு மக்கள் கொடுக்கும் மதிப்பையும் மரியாதை
யையும் பார்க்கும் போது உடம்பில் ஒரு இடம்
பாக்கியில்லாமல் புல்லரிக்கிறது போங்கள்.)

★ எல்லா மனிதர்களிடமும் காணப்படும் குறை
எது என்று கேட்டால் நீங்கள் எதைச் சொல்வீர்கள்?

**(- பி. செல்வி பாண்டியன், பவானி.)**

★★ எல்லா மனிதர்களிடமும் உள்ள மிகப் பெரிய
குறை, பிறரைக் குறை கூறுவதுதான்.

★ முல்லைப் பெரியாறு பிரச்னையாகட்டும்,
காவிரி நீர் பிரச்னையாகட்டும், பாலாறு பிரச்னை
யாகட்டும் எதையும் தீர்வுக்கு கொண்டு வராமல்
கண்டு கொள்ளாமல் மத்திய அரசு இருப்பது ஏன்?

**(த. ஜெயகாந்தன், புன்செய்புளியம்பட்டி)**

★★ இந்த விஷயங்களில் மத்திய அரசு ஒரு
ஊமைச்சாமியார். அந்த ஊமைச்சாமியார் மௌன
விரதமும் இருந்தால் எப்படி தீர்வு கிடைக்கும்?
ஆளும் காங்கிரஸ் கட்சி, தமிழ்நாடு, கேரளா,
கர்நாடகா இந்த மூன்று மாநிலங்களிலும் வெற்றி
பெற வேண்டுமானால் இப்படி ஒரு மௌன
விரதத்தைக் கடைப்பிடித்தேயாக வேண்டும்.

★ உலகத்தில் உள்ள கவிஞர்களில் யார் சொன்ன வாசகம் உங்கள் மனதைத் தொட்டது என்று சொல்ல முடியுமா?

**(டி. தேவன், ஊட்டி.)**

★★ ஒரு சீனக் கவிஞர் சொன்னது இன்னமும் என் மனசுக்குள் பசுமையாய் உள்ளது. அவர் சொன்னதை உங்களுக்கும் சொல்கிறேன். கவனமாய்க் கேளுங்க.

சிங்கிலியோ ச்சுவா ச்சுவா சாங்க்லோமா
யுவான் யுவான் சுவாங்... சுவாங்

(என்னமா.... ஃபீல் பண்ணி சொல்லியிருக்கார் பார்த்தீங்களா தேவன்?)

★ அண்மையில் படித்த ஒரு நல்ல தமிழ் ஹைக்கூ கவிதை ப்ளீஸ்!

**(எஸ். அமுதகுமார், துடியலூர், கோவை)**

★ இது கேள்வி!
இதோ... அந்த ஹைக்கூ கவிதை:

தோளுக்கு மேல் வளர்ந்தவனைக்
கையால் அடிப்பதே தவறு.
கோடாரியால் வெட்டலாமா?

**இப்படிக்கு, மரங்கள்.**

**இந்தப் பகுதிக்கு கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:-**

## ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,**
**சென்னை - 5.**

# அர்த்தமுள்ள அரட்டை

விவேக் காலை பிரேக்பாஸ்ட்டுக்காக டைனிங் டேபிளுக்கு வந்த போது ரூபலா தட்டை எடுத்து வைத்துக் கொண்டே கேட்டாள்.

''என்னங்க... இந்த கேரளா கவர்ன்மெண்ட் சொல்ற மாதிரி முல்லைப் பெரியாறு அணை ரொம்ப பழசோ...? அவங்க பேசறதைப் பார்த்தா என்னமோ நாளைக்கே அணை உடைஞ்சுடறது மாதிரி இருக்கு.''

விவேக் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான். ''ரூபி...! அந்த அணை ரொம்பப் பழசுங்கிறது உண்மைதான். அணையோட இப்போதைய வயசு 114. இவ்வளவு பழமையான அணை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லைன்னு சொல்லலாம்.''

தட்டில் இரண்டு இட்லிகளை வைத்து அவைகளின் தலைகள் மேல் சாம்பாரை ஊற்றிக் கொண்டே ரூபலா கேட்டாள்.

''அந்த அணையைக் கட்டினது யாரு...?''

''இந்தியா ஆங்கிலேயர்களுக்கு அடிமைப் பட்டுக் கிடந்த போது கட்டப்பட்ட அணை இது. இந்த அணை கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போதே ஏகப்பட்ட பிரச்னைகள். இதனோட கட்டுமானப் பணியே 100 ஆண்டுகளாக விட்டு விட்டு பலவிதமான இடையூறுகளைத் தாண்டி கடைசியில் எப்படியோ 1895 - ல் கட்டி முடிக்கப்பட்டது.

''அப்படியென்ன இடையூறு...?''

''இந்த அணையைக் கட்டிகிட்டு இருக்கும் போதே அதுக்காக ஒதுக்கப்பட்ட நிதி உதவியை அன்னிக்கு இருந்த ஆங்கிலேய அரசு திடீர்னு நிறுத்தியது. அப்படி நிறுத்தியதால் அணையைக் கட்டிகிட்டு இருந்த பிரிட்டிஷ் அரசு பொறியாளராய் பணியாற்றிக் கொண்டிருந்த 'ஜான் பென்னி குயிக்' என்பவர் அரசாங்கத்தோடு சண்டை போட்டார்.

**- ராஜேஷ்குமார் -**

அணையைக் கட்டியே தீரணும்ன்னு பிடிவாதம் பிடிச்சார். பிரிட்டிஷ் அரசு ஒத்துக்காமே போகவே அவர் லண்டனுக்குப் போய் தன்னோட சொத்துக்களை வித்து பணமாக்கிக் கொண்டு வந்து தன் சொந்தப் பொறுப்பில் அணையைக் கட்டி முடிச்சார்.''

''பரவாயில்லையே...! இப்படியும் ஒரு ஆங்கில பொறியாளரா? நம்ப முடியலை... அவர்க்கு ஒரு பிக் சல்யூட்''

''திமிர் பிடிச்ச ஆங்கிலேய அதிகாரிகளுக்கு மத்தியில் இப்படி 'ஜான் பென்னி குயிக்' மாதிரியான நல்ல அதிகாரிகளும் இருந்திருக்காங்க.''

''சரி... அது என்ன முல்லைப் பெரியாறு?''

''நீ நினைக்கிற மாதிரி அது ஒரே ஆறு கிடையாது. ரெண்டு ஆறுகள். ஒன்னு முல்லை ஆறு. இன்னொன்னு பெரியாறு. அணை கட்டறதுக்கு முந்தி அதாவது 1886-ல் திருவாங்கூர் சமஸ்தானத்தின் எல்லைக்குள் முல்லை ஆறும், பெரிய ஆறும் ஓடியதாலே திருவாங்கூர் மகாராஜாவுக்கும் சென்னை மாகாணத்தை ஆட்சி பண்ணிக்கிட்டு இருந்த ஆங்கிலேய அரசுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அந்த ஒப்பந்தத்தோட அடிப்படையில் அணைக்கட்டுத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தோட மொத்த காலம் எவ்வளவு தெரியுமா?''

''எவ்வளவு?''

''999 வருஷம்''

''அடேங்கப்பா..! ஒரு பெரிய நீண்டகால ஒப்பந்தம்தான். அந்த 999 வருஷங்கல்ல இப்போ 114 வருஷம்தானே முடிஞ்சிருக்கு''

''ஆமா... இன்னும் எத்தனையோ வருஷம் பாக்கியிருக்க-பிரச்னை இப்பவே ஆரம்பமாயிடுச்சு. இந்த அணையிலிருந்து மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள விவசாய பூமிகளுக்கு பாசன நீரும், அம்மக்களுக்கு குடி நீரும் கிடைக்க இத்திட்டத்தால் வழியேற்பட்டது. 1956 - ல் இந்தியா மொழிவாரி மாநிலங்களாய் பிரிக்கப்பட்ட போது கேரளா, தமிழ்நாடு மாநிலங்கள் உருவாயிற்று; பிரச்னையும் உருவாயிற்று. பிரிக்கப்பட்ட கேரள மாநிலம் மலை



சார்ந்த மேட்டுப் பகுதியாகவும், தமிழ்நாடு மாநிலம் தாழ்வுப் பகுதியாகவும் இயற்கையாகவே அமைந்துள்ளது. கேரளத்தின் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்கிற மழை நீர் அரபிக்கடலை நோக்கியும் தமிழ்நாட்டை ஊடுருவிக் கொண்டு வங்கக் கடலை நோக்கியும் வருகிறது. வங்கக் கடலை நோக்கி வரும் நீரை இராமநாதபுரம் வரை வறண்டு கிடக்கும் பூமிகளில் பயன்படுத்த விவசாயிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''சரி... இப்ப என்ன பிரச்னை?''

''முல்லைப் பெரியாறு அணைக்கு வயதாகி விட்டதாக கேரள அரசு சொல்கிறது. கேரளாவின் எதிர்க்கட்சிகளும் சொல்கிறது. சாதாரண பாமர கேரள விவசாயி கூட சொல்கிறான். இந்தக் குரலில் ஜாதி மத வேறுபாடு இல்லை. முல்லைப் பெரியாறு அணையின் நீரை நம் தமிழ்நாட்டுக்குத் தராமல் சாமர்த்தியமாக தாங்களே பயன்படுத்திக் கொள்ள கேரளா திட்டமிடுகிறது. இதுதான் உண்மை. இராமநாதபுரத்தின் வறட்சியைப் போக்க முல்லைப் பெரியாறு அணைக்கட்டை 152 அடி வரை உயர்த்த வேண்டும் என்ற ஒரு கோரிக்கை தமிழக அரசின் சார்பில் வைக்கப்பட்டது. கேரள அரசு அதற்கு ஆட்சேபணை செய்தது. உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. அந்த வழக்கில் தற்போதுள்ள 136 அடி உயரத்தை 142 அடிவரை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் 152 அடி வரை உயர்த்த வேண்டாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

''பரவாயில்லையே...''

''என்ன பரவாயில்லை... கோர்ட் உத்தரவைத் தான் எந்த ஒரு மாநில அரசும் மதிக்கிறது கிடையாதே? கேரளா அரசு மட்டும் மதிக்குமா என்ன..? அந்த தீர்ப்புக்குப் பிறகு 'முல்லைப் பெரியாறு அணை கட்டி முடித்து 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால் எந்த நேரத்திலும் உடைந்து கேரளாவில் உள்ள பல மாவட்டங்கள் நீரில் மூழ்கிவிடும்' என்ற ஒரு புதிய கண்டுபிடிப்பை கேரள அரசு வாதமாக வைத்தது. அணைக்கட்டு உண்மையிலேயே பலவீனமாக உள்ளதா என்று ஆராய மேலும் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. அதன்படி அதனை ஆராய ஒரு

அமைக்கப்பட்டு அந்தக் குழுவும் நீதிமன்றத்திடம் ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் கேரள அரசு சொல்லியது போல் அணை பலவீனமாக இல்லையென்றும், வலுவான நிலையில் உள்ளது என்றும் சொல்லப் பட்டிருக்கவே கேரள அரசு அதிர்ந்து போயிற்று. கோர்ட் உத்தரவை நிறைவேற்றாமல் இருக்க என்ன வழியென்று யோசித்தது. இறுதியில் கேரள அரசு சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உச்ச நீதிமன்றத்தை- அது அளித்த தீர்ப்பை மறு பரிசீலனை செய்யும்படி அதிகப் பிரசங்கித்தனத்தோடு வேண்டுகோள் விடுத்தது. உச்சநீதி மன்றம் அந்த வேண்டுகோளைக் கண்டு கொள்ளாமல் போகவே கேரள அரசு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கையில் ஒரு புதிய ஆயுதத்தை எடுத்துக் கொண்டது. அந்த ஆயுதத்தின் பெயர்தான் புதிய அணை.''

ரூபலா குறுக்கிட்டு சொன்னாள்.

''புதிய அணை கட்டினா நல்லதுதானே?''

''சூபி! புரியாமே பேசாதே... கேரள அரசு புதிய அணை கட்டப் போறோம் என்கிற போர்வையில் பழைய முல்லைப் பெரியாறு அணைக்கு மூடுவிழா நடத்திவிட்டு தண்ணீரைப் பூராவும் கேரளாவுக்குக் கொண்டு போக ஒரு சதித்திட்டம் தீட்டியுள்ளது.''

''என்னது...' சதித்திட்டமா?''

''சதித்திட்டம்தான்...! இப்போது இருக்கும் பழைய அணைக்கு கொஞ்சம் தள்ளி ஒரு பெரிய தாழ்வான சமவெளிப் பரப்பில் ஒரு புதிய அணைக் கட்டை உருவாக்குவது. அப்படி உருவாக்கினால் முல்லைப் பெரியாறு நீர் தாழ்வான புதிய அணைக் கட்டுக்குள் சென்று விடும். பழைய அணைக்கட்டில் படிப்படியாக நீர் குறைந்து சில ஆண்டுகளில் அணைக்கட்டே வற்றிப் போன குளம்போல ஆகிவிடலாம். இதுதான் கேரள அரசின் சாதுர்யமான சதி. இதில் முல்லைப் பெரியாறு அணைக்கட்டு மூடுவிழா செய்வதற்கான முயற்சியில் தமிழ் நாட்டை வஞ்சிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் உள்ளது.''

''இதில் மத்திய அரசு தலையிடலாமே?''

''மத்திய அரசு இந்த விஷயத்தில் பாலுக்கும்



காவல்; பூனைக்கும் தோழன். ஒரு மாநிலத்துக்கு ஆதரவு தெரிவிப்பதின் மூலம் இன்னொரு மாநிலத்தின் பகையை அது சம்பாதித்துக் கொள்ள முன்வராது. அப்படி ஆதரவு தெரிவித்தால் இரு மாநில மக்களின் இன உணர்வுகள் தூண்டி விடப்பட்டு ஒரு அபாயகரமான கலவரம் உருவாகக் கூடிய சூழல் தோன்றிவிடும்.''

ரூபலா பெருமூச்சொன்றை வெளியேற்றினாள்.

''சரி...! இந்த பிரச்னையைத் தீர்க்க வேற என்னதான் வழி..?''

''இந்தப் பிரச்னையில் தெளிவுபடுத்த வேண்டிய ஒரே அம்சம் உண்மையிலேயே முல்லைப் பெரியாறு அணை பழமையாகி பலவீனமடைந்துள்ளதா என்பதுதான். அதனை ஆய்வு செய்து சொன்ன வல்லுநர்களின் அறிக்கையை கேரள அரசு நம்பவில்லை. அந்த அறிக்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்ற தீர்ப்பையும் கேரள அரசு ஏற்க மறுத்துவிட்டது. வேண்டுமானால் இந்த விஷயத்தில் மத்திய அரசு வேறு ஒரு வழியைப் பின்பற்றலாம். அதாவது அமெரிக்கா, ஜெர்மனி, ரஷ்யா, சீனா முதலிய நாடுகளிலிருந்து பொறியியல் துறையில் மேதைகளாக இருப்பவர்களைத் தேர்ந்து எடுத்து ஒரு குழுவாக அமைத்து, முல்லைப் பெரியாறு அணையை முழுமையாக ஆய்வு செய்து அறிக்கை தரும்படி கேட்கலாம். தமிழ்நாடு அரசு இந்த யோசனைக்கு ஒப்புக் கொள்ளும். ஆனால் கேரள அரசு இந்த யோசனைக்கு ஒப்புக் கொள்ளாது. காரணம் அணை வலுவாக உள்ளது என்று கேரள அரசுக்குத் தெரியும். தூங்குபவனை ஒரு தட்டு தட்டி எழுப்பிவிடலாம். ஆனால் தூங்குவது போல் பாசாங்கு செய்பவனை எப்படி எழுப்புவது..? முல்லைப் பெரியாறின் எல்லா நீர்வளத்தையும் அபகரித்துக் கொள்வது ஒன்றுதான் கேரள அரசின் இப்போதைய எண்ணம். அதைத்தான் தமிழ்நாடு இப்போது முழு மூச்சாய் எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. எந்த ஒரு பிரச்சனையையும் பல முறை ஒன்றுகூடி பேசி பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும். பரம்பிக் குளம் ஆழியாறு அணை கட்டும் போதும் இப்படி ஒரு

-94ம் பக்கம் தொடர்கிறது

# ஆப்பிள் பெண்ணே! நீ யாரோ?



## ராஜேஷ்குமார்

### செல்போன் கவிதை -1

கருவறையில் நான் இருந்தவரை
வெளிச்சத்தைக் கண்டதில்லை.
பிறந்த பிறகும் நான்
கருவறையில்தான் வாழ்கிறேன்.

-பார்வையற்ற ஒரு
சிறுமியின் கவிதை.

இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன், சப் - இன்ஸ்பெக்டர் தமிழரசனோடும் இரண்டு கான்ஸ்டபிள்களோடும் கோவை ரயில்வே ஸ்டேஷன் வந்து, ஜீப்பில் இறங்கிய போது ராத்திரி மணி 11.45. டிசம்பர் மாத கோவை, எலும்புக்குள் குளிரைப் பாய்ச்சிக் கொண்டிருக்க, ஏதோ ஒரு பொருட்காட்சி மைதானம்போல் வெளிச்சமாய் தெரிந்த ஸ்டேஷனில் நள்ளிரவு ரயில்களைப் பிடிக்க ஒரு கும்பல் டிக்கெட் கௌண்ட்டர்க்கு முன்பாய் காத்திருந்தது. நியான் போர்டுகளில் ஜவுளிக்கடைகளும், நகைக்கடைகளும் மக்களை வற்புறுத்தி கூப்பிட்டன. இரண்டு போர்ட்டர்கள் குடிபோதையில் நடைபாதையோரம் உட்கார்ந்து 2011 - ல் ஆட்சியைப் பிடிப்பது யார் என்று தீர்க்க தரிசனத்தோடு பேச, அங்கே ஒரு கைகலப்பு உருவாகும் சூழ்நிலை ஸ்பஷ்டமாய் தெரிந்தது.



ரிசர்வேஷன் ஹாலில் பயணிகள் கிடைத்த இடங்களில் எல்லாம் படுத்து தூங்கிக் கொண்டிருக்க, இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன், தமிழரசனோடு பேசிக் கொண்டே நடந்தார். நடையில் பதட்டம்; பேச்சில் வேகம்.

"எத்தனையாவது ப்ளாட்ஃபாரம்?"

"ரெண்டாவது ஸார்..."

"போன் பண்ணினது யார்?"

"ஸ்டேஷன் மாஸ்டர்!" எஸ்.ஐ. சொல்லிக் கொண்டிருக்கும் போதே டிகார்டன் எக்ஸ்பிரஸ்ஸைப் பிடிக்க ஒரு குடும்பம் குழந்தை குட்டிகளோடு ஓடி வந்து கொண்டிருக்க, நித்யானந்தன் அவர்களுக்கு வழிவிட்டு- பி

நடையைத் தொடர்ந்தார்.

''எந்த கம்பார்ட்மெண்ட்?''

''டி11 ஸார்''

சப்-வே-யில் நடையை முடித்துக் கொண்டு படிகளில் ஏறினார் நித்தியானந்தன்.

''அந்த பொண்ணுக்கு எத்தனை வயசு இருக்கும்னு ஸ்டேஷன் மாஸ்டர் ஏதாவது சொன்னாரா?''

''ஏஜ் க்ரூப் என்னான்னு தெரியலை ஸார்!''

''சரி... இண்டர்சிட்டி ட்ரெய்ன் இன்னிக்கு ஏன் இவ்வளவு லேட்..?''

''ஜோலார்பேட்டைக்குப் பக்கத்தில் ஏதோ ஒரு கூட்ஸ் ரயில் டீரெய்லட் ஆயிருக்கு ஸார்... அதான் ஒரு மணிநேரம் லேட்...''

படிகளை ஏறி முடித்து இரண்டாவது ப்ளாட் பாரத்துக்குள் நுழைந்தார்கள். ஹிக்கின் பாதம்ஸ் அந்த நேரத்திலும் புத்தக விற்பனையில் சூடாய் இருந்தது.

பயணிகளை இறக்கிவிட்ட நிம்மதியோடு இண்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் இரண்டாவது ப்ளாட்பாரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்க கடைசியில் இருந்த டி11 • கம்பார்மெண்ட்டை நோக்கிப் போனார் நித்தியானந்தன். கம்பார்ட்மெண்ட்டுக்கு வெளியே அந்த வழுக்கைத்தலை ஸ்டேஷன் மாஸ்டர் யூனிபார்மில் நின்றிருக்க, அவரைச் சுற்றி சில பெண்கள் கவலையாய் தெரிந்தார்கள்.

நித்தியானந்தத்தைப் பார்த்ததும் ஸ்டேஷன் மாஸ்டர் அந்தப் பெண்களை விட்டு விலகி வந்தார்.

''ஸார்... அ'யாம் சொக்கலிங்கம். ஸ்டேஷன் மாஸ்டர். போன் பண்ணினது நான்தான்...''

கைகுலுக்கிக் கொண்டார்கள்.

''என்ன பிரச்னை...? சொல்லுங்க...''

''ஸார்... இந்த டி11 கம்பார்மெண்ட்டில் சென்னையிலிருந்து கோவைக்கு டிக்கெட் எடுத்துக்கிட்டு ஒரு பொண்ணு ட்ராவல் பண்ணியிருக்கா. பொண்ணோட பேர் முழுமதி. ஈரோட்டிலிருந்து வண்டி புறப்பட்டு திருப்பூரை நோக்கி வந்திட்டிருக்கும்போது முழுமதி டாய்லட்டுக்குப் போறேன்னு போயிருக்கா... போனவ வரவேயில்லை. அவ எங்கே போனா... என்ன ஆனான்னு தெரியலை..''

''அந்தப் பொண்ணு காணோம்னு



உங்களுக்குத் தகவல் கொடுத்தது யாரு?''

ஸ்டேஷன் மாஸ்டர் சொக்கலிங்கம், பக்கத்தில் இருந்த பெண்களைக் காட்டினார். ''தகவல் கொடுத்தது இவங்கதான் ஸார். ஜர்னி டயத்துல அந்த முழுமதி இவங்க கூடத்தான் பேசி சிரிச்சு அரட்டையடிச்சுட்டு வந்திருக்கா.''

நித்தியானந்தத்தின் பார்வை அந்தப் பெண்கள் பக்கமாய்ப் போயிற்று. மொத்தம் ஏழு பெண்கள். வயது 25 லிருந்து 30 க்குள் அடங்கி பளிச்சென்று தோற்றம் காட்டினார்கள்.

நித்தியானந்தன் அந்தப் பெண்களை பொதுப்படையாய் ஒரு பார்வை பார்த்தபடி கேட்டார்.

''என்ன நடந்தது..?... சொல்லுங்க!''

அந்த ஏழு பேரில் ஒரு பெண் முன்னால் வந்தாள். ''என் பேர் ராதிகா...ஸார்..! நாங்க ஏழு பேரும் **'ரெயின்போ'** என்கிற சமூக நல மேம்பாட்டு அமைப்பைச் சேர்ந்தவங்க. நாங்க இன்னிக்கு மத்தியானம் சென்னையிலிருந்து கோவைக்கு இண்டர்சிட்டியில் புறப்பட்டோம். எங்க கம்பார்ட்மெண்ட்டில் கூட்டம் அவ்வளவாக இல்லை. நாங்க சிரிச்சுப் பேசி சந்தோஷமாய் ஜர்னி பண்ணிட்டிருந்தோம். ட்ரெய்ன் அரக்கோணத்தை நெருங்கிட்டிருக்கும்போதே ஒரு பொண்ணு பயந்த பார்வையோடும் நடுக்கம் பரவிய உடம்போடும் எங்களுக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்தா. 'கோவை வர்ற வரைக்கும் நான் உங்ககூட சேர்ந்து ட்ராவல் பண்ணலாமா?'ன்னு கேட்டா. 'தாராளமாய் ட்ராவல் பண்ணலாம்'ன்னு சொல்லிட்டு, 'உன்னைப் பார்த்தா யார்க்கோ பயப்படற மாதிரி தெரியுது. என்ன விஷயம்?'னு கேட்டேன். அதுக்கு அந்தப் பொண்ணு, 'டாய்லட் கிட்டே நின்னுட்டிருக்கிற ஒருத்தன் பெரிசா மீசை வெச்சுகிட்டு- என்னையே பார்த்துட்டிருக்கான். அவனால எனக்கு ஏதாவது பிரச்னை வருமோன்னு பயம். அதனாலதான் உங்க பக்கத்துல வந்து உட்கார்ந்துட்டேன்.' -அந்தப் பொண்ணு அப்படி சொன்னதும், நாங்க ஏழு பேரும் டாய்லட் பக்கம் திரும்பிப் பார்த்தோம். பெரிசா மீசை வெச்ச ஒரு இளைஞன் பார்வைக்குக் கிடைச்சான். டீஸண்டாய் ட்ரஸ் பண்ணியிருந்தான். கையில் புத்தகம் ஒண்ணு இருந்தது. நாங்க அவ[illegible] முறைச்சுப் பார்த்ததுமே ஆள் காதுக்கு வாக்மே[illegible]

மாட்டிகிட்டு மெல்ல நழுவி அடுத்த கம்பார்ட்மெண்டுக்குப் போய்ட்டான். அதுக்கப்புறம் அவனை நாங்க பார்க்கலை. அந்தப் பொண்ணும் பயம் தெளிஞ்சவளாய் எங்க கூடவே ட்ராவல் பண்ணினா. ஒண்ணா ஸ்நாக்ஸ் சாப்பிட்டோம். ட்ரெய்ன் ஈரோடு ஸ்டேஷனில் ஒரு பத்து நிமிஷம் நின்னுட்டு புறப்பட்டதும் முழுமதி டாய்லெட்டுக்குப் போறேன்னு சொல்லிட்டு கிளம்பிப் போனா. போனவ ரொம்ப நேரமாய் வரலை. அரைமணி நேரம் வெயிட் பண்ணிப் பார்த்துட்டு நான் பாத்ரூம் பக்கமாய்ப் போய்ப் பார்த்தேன். உள்ளே யாரும் இருக்கிற மாதிரி தெரியலை. அடுத்த கம்பார்ட்மெண்டுக்குப் போயிருப்பாளோன்னு நினைச்சு அங்கேயும் போய்ப் பார்த்தேன். முழுமதி இல்லை. அதுக்குள்ளே ட்ரெய்ன் திருப்பூர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. நானும் என் கூட வந்தவங்களும் ஒவ்வொரு பெட்டியாய் போய்ப் பார்த்தோம். முழுமதி எங்கேயும் இல்லை. அந்த மீசைக்கார இளைஞனும் பார்வைக்கு கிடைக்கலை."

"ட்ரெய்ன் ரன்னிங்கில் இருக்கும்போதுதானே முழுமதி டாய்லட்டுக்குப் போனாள்?" - இன்ஸ்பெக்டர் கேட்க, ராதிகா தலையாட்டினாள்.

"ஆமா...ஸார்..."

"ஈரோட்டுக்கும் திருப்பூர்க்கும் இடையில் உள்ள எந்த ஒரு ஸ்டேஷனிலாவது ட்ரெய்ன் நின்னதா?"

"இல்ல ஸார்..."

"முழுமதி லக்கேஜ் கொண்டு வந்தாளா?"

"ஒரே ஒரு கைப்பை கொண்டு வந்தா. அந்த பைக்குள்ளே கொஞ்சம் பணமும் ஒரு செல்போனும் இருந்தது ஸார்."

"எங்கே அந்த செல்போன்?"

அந்தப் பெண் ராதிகா கைப்பையில் பத்திரப்படுத்தி வைத்து இருந்த செல்போனை எடுத்து நித்தியானந்தத்திடம் கொடுத்தாள்.

அவர் அதை வாங்கிப் பார்த்தார்.

அது ஒரு லேட்டஸ்ட் செல்போன். 'ஆப்பிள்' கம்பெனியின் தயாரிப்பில் உருவான அந்த ஐ - செல்போன் எப்படியும் 25 ஆயிரங்களை விழுங்கியிருக்கும் போல் தோன்றியது. டச் ஸ்க்ரீன் தொழில்நுட்பத்தோடு பளபளத்தது.

நித்தியானந்தன் அந்த செல்போனை உயிர்ப்



பித்து முழுமதி கடைசியாய் யார்க்கு டயல் செய்தாள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக ஸ்க்ரீன் டச் செய்த விநாடி - ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த இன்னொரு பெண் "ஸார்" என்று குரலை குறுக்கே நுழைத்தாள்.

நித்தியானந்தன் நிமிர்ந்தார்.

"எஸ்..."

"ஸார்... அந்த செல்போனை தரோவா செக் பண்ணிப் பார்த்துட்டேன். 'Call Register' ல் இருந்த மிஸ்டு கால்ஸ், ரிசீவ்ட் கால்ஸ், டயல்ட் நெம்பர்ஸ் எல்லாமே டெலிட் பண்ணப்பட்டு இருக்கு. அதேபோல் காண்டாக்ட் நெம்பர்ஸ் எல்லாமே டெலிட் செய்யப்பட்டு ஸ்க்ரீன் சுத்தமாய் இருக்கு. மெமரி பாக்ஸில் மட்டும் சில கவிதைகள் எடிட் செய்யப்பட்டு இருந்தது."

"காண்டாக்ட் பண்ற மாதிரி எந்த ஒரு செல்போன் நெம்பரும் இந்த செல்போனில் கிடைக்கலை..?"

"இல்லை ஸார்..!"

"முழுமதிக்கு அந்த மீசைக்கார இளைஞனாலே ஏதாவது ஆபத்து ஏற்பட்டு இருக்கும்னு நினைக்கறீங்களா?"

"கண்டிப்பாய்..! அதுல எந்த சந்தேகமும் இல்லை ஸார்... அவன்தான் முழுமதியை ஏதாவது பண்ணியிருக்கணும்."

"ஓடற ட்ரெய்னில் எப்படி..?"

"ராத்திரி நேரம்... கூட்டம் அதிகம் இல்லாத கம்பார்ட்மெண்ட். பாஸஞ்சர்ஸ்ல பாதி பேர் தூங்கிட்டு இருந்தாங்க. நாங்க கூட லேசாய் கண்ணயர்ந்துட்டோம். அந்த சமயத்துல டாய்லட்டுக்குப் போன முழுமதியை அந்த மீசைக்கார இளைஞன் ஒரு நொடிப் பொழுதில் கீழே தள்ளி விட்டு இருக்கலாமே?"

"நோ... நோ..!" ஸ்டேஷன் மாஸ்டர் இரண்டு கைகளையும் ஆட்டி மறுத்தார். "அப்படி தள்ளி விட்டிருந்தா இந்நேரம் தகவல் வந்து இருக்கும்."

ராதிகா கோபமாய் குறுக்கிட்டாள். "ஸார்! இது பகல் நேரமில்லை. ராத்திரி நேரம். ரயில் வர்ற ட்ராக்கில் ஒரு பொட்டு வெளிச்சம் கிடையாது. முழுமதி ஏதாவது ஒரு அடர்த்தியான புதர்க்குள்ளே விழுந்து இருந்தா அது யாரோட கண்ணுக்கும் படப்போறதில்லை. அந்த மீசைக்கார யூத் தா

அவளை ஏதோ பண்ணிட்டான்."

"அந்த மீசைக்கார இளைஞனை நீங்க ஒரு தடவை பார்த்ததோடு சரி... அதுக்கப்புறம் பார்க்கலையா?"

"பார்க்கலை ஸார்..."

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் கொஞ்சம் தள்ளி நின்றிருந்த டி.டி.ஈ. கிறிஸ்டோபர் மெல்ல இன்ஸ்பெக்டர்க்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

"ஸார்... என்னோட கெஸ் ஒர்க்கை சொல்லலாமா..?"

"சொல்லுங்க..."

"அந்தப் பெண் முழுமதி ரிசர்வேஷன் டிக்கட்ல ட்ராவல் பண்ணலை. ஓப்பன் டிக்கட் எடுத்துட்டு வந்து டி11 ரிசர்வேஷன் கம்பார்ட்மெண்ட்டில் ஏறி உட்கார்ந்து இருந்தா. நான் அவளோட டிக்கெட்டை செக் பண்ணிப் பார்த்துட்டு ஜெனரல் கம்பார்ட்மெண்ட்டுக்கு போகச் சொன்னேன். அதுக்கு அந்தப் பொண்ணு 'நான் ரிசர்வேஷன் அமௌண்ட்டைக் கட்டிடறேன். இந்த கம்பார்ட் மெண்டிலேயே எனக்கு சீட் குடுங்க'ன்னு சொன்னா. நானும் ஒரு சீட்டை ஒதுக்கிக் கொடுத்து எக்ஸ்ட்ரா தொகையை வாங்கிகிட்டு ரசீது கொடுத்தேன். நான் மறுபடியும் முழுமதியை- ஈரோடு ஸ்டேஷன்ல வண்டி நிற்கும் போது பார்த்தேன். அந்தப் பொண்ணு இந்தப் பொண்ணுகளோடு சேர்ந்து உட்கார்ந்து சிரிச்சு பேசிக்கிட்டு இருந்தது. ஈரோடு ஸ்டேஷனைவிட்டு வண்டி கிளம்பிய கொஞ்ச நேரத்துக்குள்ளே முழுமதி டாய்லட்டுக்குப் போயிருக்கா. போனவ வரவேயில்லை. அந்த சமயத்தில்தான் முழுமதிக்கு ஏதோ நேர்ந்திருக்கு. என்ன நேர்ந்து இருக்கும்ன்னு என்னால கெஸ் பண்ண முடியுது..."

நித்யானந்தன் லேசாய் பதட்டப்பட்டார்.

"உங்களோட கெஸ் வொர்க் என்ன..? சொல்லுங்க ஸார்..."

"ட்ரெய்ன் ஈரோட்டிலிருந்து ஊத்துக்குளி வர்றவரைக்கும் கொஞ்சம் ஸ்லோவாத்தான் வந்தது. ட்ராக்குக்கு ரெண்டுபக்கமும் கல்லுக்குழிகள் அதிகம். அந்த கல்லுக்குழிக்குள்ளே ஆட்கள் யாராவது தவறி விழுந்துட்டா வெளியுலகத்துக்கு அது தெரிய வாய்ப்பில்லை. கொலையாளின்னு நீங்க சந்தேகப்படற அந்த மீசைக்கார இளைஞன்



முழுமதியைத் தீர்த்துக் கட்டியிருந்தா அந்த கல்லுக்குழி இடத்தைத்தான் தேர்வு பண்ணியிருக்கணும். ராத்திரி வேளை. இருட்டு. கம்பார்ட்மெண்ட்ல இருந்த மொத்த பேரும் கண்ணயர்ந்த நேரம் டாய்லெட்டை விட்டு வெளியே வந்த முழுமதியை கொலையாளி பின்னாலிருந்து வாயைப் பொத்தி கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ளே வெளியே தள்ளியிருக்கலாம். அப்படி தள்ளப்பட்டவள் ஒரு கல்லுக்குழிக்குள்ளே போய் விழுந்து இருக்கலாம். கொலையாளி உடனே அந்த இடத்தை விட்டு நழுவி வேற கம்பார்ட் மெண்ட்டுக்குப் போய், ட்ரெய்ன் திருப்பூரைத் தொட்டதும் நல்ல பிள்ளையாய் இறங்கிப் போயிருக்கலாம். இந்த இண்டர்சிட்டி ட்ரெய்னில் ஒரு கம்பார்ட்மெண்ட்டில் ஏறிட்டா எல்லா கம்பார்ட் மெண்ட்டுகளுக்கும் போகக்கூடிய வசதி இருக்கிறது கொலையாளிக்கு வசதியாய் போய்விட்டது..."

ராதிகா குறுக்கிட்டாள்.

"ஸார்..! அந்த மீசைக்காரனை நாங்க அரக் கோணத்துல பார்த்ததோடு சரி- அதுக்கப்புறம் பார்க்கவேயில்லை..."

"அவன் உங்க கண்ணில் படாமல் இருந்து இருக்கலாமே..?"

"அவன் முழுமதியைக் கொலை செய்யற எண்ணத்தோடு வந்து இருப்பான்னு நாங்க கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை. ஏதோ அவளை டீஸ் பண்றான்னு நினைச்சோம்..."

டி.டி.ஈ. கிறிஸ்டோபர் கையமர்த்தினார்.

"வெயிட்...வெயிட்..! முழுமதியை அந்த மீசைக்கார பேர்வழி கொலை பண்ணியிருக்க லாம்ங்கிறது என்னோட கெஸ் ஒர்க்தான். இது தப்பாக இருக்கவும் வாய்ப்பு இருக்கு..."

"இல்ல ஸார்..! அவன்தான் ஏதாவது பண்ணியி ருக்கணும்... நாங்க முழுமதி விஷயத்துல கொஞ்சம் அஜாக்ரதையாய் இருந்துட்டோம். டாய்லெட்டுக்கு அவ போன போது எங்கள்ல யாராவது ஒருத்தர் கூடவே போயிருக்கணும்..: தப்பு பண்ணிட்டோம்."

நித்தியானந்தன் பெருமூச்சொன்றை வெளி யேற்றி விட்டு ராதிகாவை ஏறிட்டார். "இனிமே அதைப்பத்தி பேசி எந்த பிரயோஜனமும் இல்லை. இப்போ நமக்கு தெரிய வேண்டிய விஷயங்க

அவளை மோப்பம் இதுதான். அந்த முழுமதி யார்...? பிடித்துக் கொண்டு வந்த அந்த மீசைக்கார பேர்வழி யார்...? முழுமதி கொலை செய்யப்பட்டு இருந்தா அதுக்கு என்ன காரணம்..? ஒரு வேளை அவள் கொலை செய்யப்பட்டு இருக்காத பட்சத்தில் ரன்னிங் ட்ரெய்னிலிருந்து எப்படி காணாமல் போனாள்?''

ராதிகா இடைமறித்தாள். ''ஸார்..! நாங்க முழுமதி யோடு ரொம்ப நேரம் பேசிட்டிருந்தோம். அப்ப அவளைப் பத்தி விசாரித்சோம்.''

''என்ன சொன்னா..?''

''தான் ஒரு டீச்சர்ன்னு சொன்னா. சென்னையில் உள்ள 'ஷைனிங் ஸ்டார்ஸ்' என்கிற மெட்ரிகுலேஷன் ஸ்கூலில் மேத்ஸ் டீச்சராய் வேலை பார்க்கிறதாக வும். பள்ளிக்கரணையில் வீடு எடுத்து தங்கியிருக் கிறதாகவும் சொன்னா. 'கோயமுத்தூர்க்கு எதுக்காக போயிட்டு இருக்கே'ன்னு கேட்டபோது 'ஒரு கேஸ் விஷயமாய் வக்கீலை பார்த்து பேசணும். என் ஃப்ரண்ட் ஒருத்தி அதுக்கான ஏற்பாடுகளை பண்ணி யிருக்கா.. இன்னிக்கு ராத்திரி அந்த ஃப்ரண்ட் வீட்லதான் தங்கப் போறேன்'னு சொன்னா.''

''அந்த ஃப்ரண்ட் யார்ன்னு சொன்னாளா?''

''சொல்லலை...''

''சரி... முழுமதி ஜர்னியில், இருக்கும்போது அவளுக்கு யாராவது போன் பண்ணினாங்களா...?''

''இல்லை. அவளுக்கு போன் வரலை. அவளும் யார்க்கும் போன் பண்ணலை.''

நித்தியானந்தன் தனக்குப் பக்கத்தில் நின்றி ருந்த எஸ்.ஐ. தமிழரசனிடம் திரும்பினார்.

''தமிழ்...''

''ஸார்...'' தமிழரசன் அட்டென்ஷனுக்கு வந்தார்.

''இந்த ஆப்பிள் கம்பெனியின் செல்போன் ரொம்பவும் லேட்டஸ்ட். செல்போனுக்குள்ளே சிம் கார்டும் இருக்கு. இந்த சிம்கார்டுக்குப் பின்னாடி இருக்கிற சீரியல் நெம்பரை வெச்சு இந்தப் போன் யாரோடதுங்கிற உண்மையைக் கண்டுபிடிச்சுட லாம். இந்தாங்க செல்போன். எனக்கு இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ளே தகவல்கள் வேணும்... உங்களால கலெக்ட் பண்ணிக் கொடுக்க முடியுமா..?''

''ஷ்யூர் ஸார்...'' சப் - இன்ஸ்பெக்டர் தமிழரசன் செல்போனோடு நகர்ந்து போக, நித்தியானந்தன்



ராதிகாவிடம் திரும்பினார். ''முழுமதி எப்படி இருந்தான்னு சொல்ல முடியுமா?''

ராதிகா லேசாய் தயங்கினாள்.

''ஸ...ஸார்...அது...வந்து...''

''என்ன தயக்கம்...?''

''முழுமதின்னு பேர்தான் அழகாய் இருக்கே தவிர அந்தப் பெண் அவ்வளவு அழகாய் இல்லை ஸார். தூக்கலான பல் வரிசை, மேடு தட்டின நெற்றி, அப்நார்மல் சைஸ் மூக்கு...''

''நீங்க சொல்றதைப் பார்த்தா முழுமதிக்கும் அழகு என்கிற வார்த்தைக்கும் நிறைய தூரம் இருக்கும் போலிருக்கே...?''

''ஆமா... ஸார்... முழுமதியை எந்த ஆணுக்கும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது அந்த மீசைக்கார இளைஞன் என்ன காரணத்துக்காக இவளைப்போய் பார்த்துட்டிருந்தான்னு தெரியலை.'' ராதிகா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவளுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. தன் கைப்பையிலிருந்து செல்போனை எடுத்து அழைப்பது யார் என்று பார்த்துவிட்டு காதுக்குப் பொருத்தினாள்.

''மிஸஸ் சத்தியவதி..! நானே உங்களுக்கு போன் பண்ணணும்ன்னு இருந்தேன். அதுக்குள்ளே நீங்களே போன் பண்ணிட்டீங்க. நாங்க இப்போ ஸ்டேஷன்லதான் இருக்கோம். ரயிலை விட்டு இறங்கியதுமே உடனே புறப்பட்டு வெளியே வர முடியலை. காரணம்- சக பயணி ஒருத்தரால ஏற்பட்ட பிரச்னை..''

மறுமுனையில் அந்த சத்தியவதி பதட்டப் பட்டாள். ''பிரச்னையா... என்ன பிரச்னை..?''

''நாங்க ட்ராவல் பண்ணின கம்பார்ட்மெண்ட்ல இருந்து ஒரு பொண்ணு திடீர்ன்னு காணாமே போயிட்டா. அந்தப் பொண்ணு ஈரோடு வரைக்கும் எங்க கூட நல்லபடியா பேசிட்டு வந்த பொண்ணு. கம்பார்ட்மெண்ட்ல இருக்கிற டாய்லெட்டுக்கு போனவ... ரொம்ப நேரமாகியும் திரும்பி வரலை. கடந்த ரெண்டு மணி நேரமாய் தேடிப் பார்த்துட்டோம். அந்தப் பொண்ணு என்ன ஆனா... எங்கே போனான்னு தெரியலை. கோயமுத்தூர் ஸ்டேஷனுக்கு ட்ரெய்ன் வந்ததும் போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணினோம். அவங்க வந்து







இருங்காங்க."
என்கொயர் பண்ணிட்டு இருங்காங்க."
''நான் வேணும்னா ஸ்டேஷனுக்கு வரட்டுமா..?''
''வேண்டாம். என்கொய்ரி முடிஞ்சது.. அந்தப்
பொண்ணு வெச்சிருந்த செல்போனை போலீஸ்ல
கொடுத்துட்டோம். போலீஸும் இன்வெஸ்டி
கேஷனை ஸ்டார்ட் பண்ணிட்டாங்க. எப்படியும்
விடியறதுக்குள்ளே அந்தப் பொண்ணை
ட்ரேஸ் அவுட் பண்ணிடுவாங்க."
''போலீஸ் உங்களுக்கு ஏதாவது தொந்தரவு
தர்றாங்களா..? விசாரணை என்கிற பேர்ல டார்ச்சர்
...றாங்களா?''
நோ... நோ... அப்படியெல்லாம் எதுவுமில்லை
...ஸஸ் சத்தியவதி. ஒரு பெண் காணாமே போயிருக்
கிற விஷயத்துல போலீஸுக்கு நாங்கதான் வாலண்ட
ரியா ஒத்துழைப்பு கொடுத்துட்டு இருக்கோம்."
''நீங்க யாரு... உங்க அமைப்போட பேரு... உங்க
அமைப்பைப்பற்றின விபரங்கள்... இதையெல்லாம்
போலீஸ் கிட்டே சொன்னீங்களா..?''
''இல்லை...''
''மொதல்ல அதைச் சொல்லியிருக்க
வேண்டாமோ?''
''அமைப்போட பேரை மட்டும் சொன்னேன்.
டீடெய்லா எதுவும் சொல்லலை...''
''பக்கத்துல இன்ஸ்பெக்டர் இருக்காரா?''
''இருக்கார்''
''அவர் கிட்டே உங்க செல்போனைக் குடுங்க...''
''எதுக்கு..?''
''மொதல்ல குடுங்க சொல்றேன்'' மறுமுனையில்
சத்தியவதி அதட்டலாய் சொன்னதும் ராதிகா தன்
கையில் இருந்த செல்போனை இன்ஸ்பெக்டரிடம்
நீட்டினாள்.
''மிஸஸ் சத்தியவதி உங்ககிட்டே பேசணுமாம்!''
நித்தியானந்தன் புருவங்களை மேலேற்றினார்.
''யார் அவங்க..?''
''பெண் அரிமா சங்கத்தோட தலைவி..''
''ஓ... அந்த சத்தியவதியா..? நிறையவே கேள்விப்
பட்டு இருக்கேன்...'' செல்போனை பவ்யமாய் வாங்கி
காதுக்கு ஒற்றினார்.
''வணக்கம்... மேடம்...''
''வணக்கம் இன்ஸ்பெக்டர்... நான் சத்தியவதி...
பெண் அரிமா சங்கத்தோட பிரஸிடெண்ட்...''



''தெரியும் மேடம்... உங்களோட போட்டோக்
களை பத்திரிகைகளில் பார்த்து இருக்கேன். நேர்ல
பார்த்தது இல்லை. அவ்வளவுதான். சொல்லுங்க
மேடம்..!''
''இன்ஸ்பெக்டர்..! ட்ரெய்னில் வந்த ஒரு
பொண்ணு காணாமல் போன விஷயமாய் 'ரெயின்போ'
என்கிற அமைப்பைச் சேர்ந்த பெண்கள்கிட்டே
என்கொய்ரி பண்றதாய் கேள்விப்பட்டேன். கூட வந்த
ஒரு பொண்ணு காணாமே போனதுக்காக அவங்க
என்ன பண்ணுவாங்க... இன்ஸ்பெக்டர்..?
ஏற்கெனவே ட்ரெய்ன் லேட். இப்போ மணி மிட்நைட்
டுவெல்வோ க்ளாக். இனியும் விசாரணை என்கிற
பேர்ல எதுக்காக டார்ச்சர் தர்றீங்க?''
''ஸாரி மேடம்...! நீங்க நினைக்கிற மாதிரி நாங்க
எந்த டார்ச்சரையும் அவங்களுக்குத் தரலை...
இன்னும் சொல்லப்போனா காணாமல் போன அந்தப்
பெண்களைக் கண்டு பிடிக்கிற விஷயத்தில்
எங்களைக் காட்டிலும் அவங்கதான் துடிப்பாவும்
முனைப்பாவும் இருக்காங்க...''
''அது அந்த அமைப்போட இயல்பு இன்ஸ்பெக்டர்.
உங்களுக்கு அந்த 'ரெயின்போ' என்கிற அமைப்
பைப்பற்றி தெரியாதுன்னு நினைக்கிறேன்...''
''ஸாரி மேடம்..! எனக்குத் தெரியலை..''
'' 'ரெயின்போ' என்கிற அந்த அமைப்பு 2005ல்
சென்னையில்- சுனாமி என்கிற பேரழிவுக்குப் பின்
ஏற்பட்ட ஒரு அமைப்பு. அந்த அமைப்பில் மொத்தம்
ஏழு பெண்கள். அந்த ஏழு பெண்களும் அநாதைப்
பெண்கள். இவங்க ஒரு குழுவாய் செயல்பட்டு
சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை நேரில்
போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லி, அவங்களுக்குத்
தேவைப்பட்ட உதவிகளை அரசு மூலம் வாங்கிக்
கொடுத்து அதன் மூலமாய் 'சர்வதேச சுனாமி நல
கமிட்டி'யின் கவனத்தை ஈர்த்தவங்க. போன மாதம்
சிங்கப்பூரில் நடந்த ஒரு பன்னாட்டு விழாவில் அந்த
ஏழு பேர்க்கும் **யுனெஸ்கோ விருது** கொடுக்கப்
பட்டது... எல்லா மீடியாக்களிலும் இந்த செய்தி
வந்தது. நீங்க பார்க்கலையா...?''
''ஸாரி... மேடம்...! நான் ஒரு ரெகுலர் டி.வி.
வாட்ச்சர் கிடையாது. பேப்பர் படிக்கிறதும் நுனிப்புல்
மேயற மாதிரிதான்! அதனால எனக்குத் தெரியலை...''

''நான் சொல்றேன்...! அந்த அமைப்பைப்பற்றி இனியாவது தெரிஞ்சுக்குங்க... இதுவரை சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பங்களுக்கு அந்த அமைப்பு உதவி பண்ணியிருக்கு. தாயையும் தந்தையையும் இழந்த நூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கு இந்த ஏழு பேரும்தான் தாய்கள்.''

''க்ரேட்...மேடம்!''

''இந்த அமைப்புக்கு ஏன் 'ரெயின்போ'ன்னு பேர் தெரியுமா?''

''தெரியலை மேடம்...''

''அந்தக் கடவுளே கொடுத்த பேர்தான் இது!''

''கடவுள் கொடுத்த பேரா...?''

''எஸ்... 'RAINBOW' என்கிற ஆங்கில வார்த்தையில் மொத்தம் ஏழு எழுத்துக்கள். அமைப்பில் இருக்கிற பெண்களும் ஏழு பேர். அந்த ஏழு பேரோட பெயர்கள், ராதிகா, ஆர்த்தி, இன்பா, நீரஜா, பூமா, ஓமனா, வஹிதா. இந்தப் பெயர்களில் உள்ள முதல் எழுத்துக்களை அதாவது ஆங்கில எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒண்ணாய் சேர்த்துப் பாருங்க...''

நித்தியானந்தன் மனசுக்குள்ளேயே சேர்த்துப் பார்த்தார்.

'ராதிகாவுக்கு R. ஆர்த்திக்கு A. இன்பாவுக்கு I. நீரஜாவுக்கு N. பூமாவுக்கு B. ஓமனாவுக்கு O. வஹிதாவுக்கு W.'

''எக்ஸலண்ட் மேடம்..! இப்படிக்கூட ஒரு பெயர் பொருத்தம் அமையுமா என்ன..?''

''காட்ஸ் கிரேஸ்...! அந்த ஏழு பெண்களுக்கும் நாளைக்கு கோவையில் கொடீசியா வளாகத்தில் பெரிய அளவில் அரிமா சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா ஒண்ணை நடத்தப் போறோம். அதுக்காகத் தான் அவங்க சென்னையிலிருந்து புறப்பட்டு வந்து இருக்காங்க... ஃப்ளைட்ல டிக்கெட் புக் பண்ணினோம். வேண்டாம்ன்னு சொல்லிட்டு ட்ரெய்ன்ல Non - A.c. போதும்னு ஜார்னி பண்ணி வந்து இருக்காங்க... ஸோ அவங்களை விசாரணை என்கிற பேரில் ரொம்ப நேரத்துக்கு இழுத்தடிக்காமே அனுப்பி வையுங்க. ரேஸ்கோர்ஸில் இருக்கிற ஹோட்டல் மான்செஸ்டரில் அவங்க தங்கறதுக்காக அறைகள் ஏற்பாடு பண்ணப்பட்டு இருக்கு.''

''இதோ... இப்பவே... இந்த நிமிஷமே அவங்களை அனுப்பிடறேன் மேடம்...''



''ப்ளீஸ்..! ஸ்டேஷன் வாசலில் அவங்களை ரிஸீவ் பண்ணி ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போக இன்னோவா, டொயோட்டா காத்துட்டிருக்கு...!''

''ஓ.கே.. மேடம்..! இன்னும் ஒரு பதினஞ்சு நிமிஷத்துல அவங்க ஹோட்டல்ல இருப்பாங்க''

''தேங்க்யூ இன்ஸ்பெக்டர்!'' மறுமுனையில் செல்போனை சத்தியவதி அணைக்க, நித்தியானந்தன் தன்னிடம் இருந்த ராதிகாவின் செல்போனை அவளிடம் கொடுத்தபடி ''ஸாரி மேடம்!'' என்றார்.

ராதிகா திகைத்தாள்.

''என்ன ஸார்... திடீர்ன்னு... மேடம்ன்னு என்னைச் சொல்றீங்க..?''

''உங்க 'ரெயின்போ' அமைப்பைப்பற்றி அரிமா சங்க பிரஸிடெண்ட் சத்தியவதி சொன்னதிலிருந்து உங்களைப் பத்தின இமேஜ் என் மனசுக்குள்ள ஒரு எவரெஸ்ட் சிகர ரேஞ்சுக்கு போயிடுச்சு...''

ராதிகா புன்னகைத்தாள்.

''சத்தியவதி எல்லாத்தையும் சொல்லிட்டாங்களா..?''

''ம்... உங்களுக்கும் உங்க அமைப்பைச் சேர்ந்தவங்களுக்கும் நாளைக்கு கொடீசியா வளாகத்தில் அரிமா சங்க சார்பில் பாராட்டு விழாவாமே?''

''ஏதோ அவங்க பிரியத்துக்காக...''

''இனி இந்த முழுமதி பிரச்னையை நான் ஹேண்டில் பண்ணிக்கறேன்... நீங்க புறப்படுங்க மேடம்..! இனிமே உங்ககிட்டே எந்த விசாரணையும் கிடையாது... ஸ்டேஷன் வாசல்ல உங்களுக்காக வெகிகிள்ஸ் வெயிட் பண்ணிட்டிருக்கு. முடிஞ்சா நாளைக்கு நானும் உங்க பாராட்டு விழாவுக்கு வர்றேன்..!''

''அதைவிட எனக்கு முக்கியம்... முழுமதி! அவளைக் கண்டுபிடிச்சதும் எனக்கு உடனடியாய் போன் பண்ணுங்க...''

''ஷ்யூர்... ஷ்யூர்..! முதல் போன்... உங்களுக்குத் தான்..!''

ராதிகாவும் மற்ற ஆறுபேரும் லக்கேஜ்களோடு புறப்பட்டுப் போக, ஸ்டேஷன் மாஸ்டர், நித்தியானந்தனை ஏறிட்டார்.

''ஸார்... இந்த ட்ரெயினை நாலாவது ப்ளாட் பாரத்துக்கு கொண்டு போகணும்...''

"கொண்டு போயிருங்க... என்கொய்ரி ஓவர். இனி சர்ச்சிங் மட்டும்தான்... அந்தப் பொண்ணை எப்படியும் கண்டுபிடிச்சுடலாம்..."

"தேங்க்யூ ஸார்..." ஸ்டேஷன் மாஸ்டரும் டி.டி.ஈ.யும் ஜோடியாய் நகர்ந்து போய்விட கொஞ்சம் தொலைவில் சப் இன்ஸ்பெக்டர் தமிழரசன் தெரிந்தார். வேக வேகமாய் வந்து கொண்டிருந்தார்.

நடையில் பதட்டம். பக்கத்தில் வந்தார்.

"என்ன தமிழ்..?"

"ஸார்... அந்த ஆப்பிள் மேக் செல்போன் யாரோடதுன்னு தெரிஞ்சுருச்சு ஸார்."

"யாரோடது..?"

"ஸார்... அது... வந்து..." என்றவர் சட்டென்று குரலைத் தாழ்த்திக் கொண்டார்.

"அந்த செல்போன் ஒரு வி.ஐ.பி.க்கு சொந்தமானது ஸார்"

"யார்..! அந்த வி.ஐ.பி..?"

"பெண் அரிமா சங்கத்து பிரஸிடெண்ட் சத்தியவதி ஸார்."

**செல்போன் கவிதை -2**

யாரிடமும் விவாதம் செய்யாதே!
அதில் நீ தோற்றால்
ஒரு நண்பனை இழப்பாய்.
ஜெயித்தால்
ஒரு எதிரியைப் பெறுவாய்!

**ச**த்தியவதி நைட் கவுனை தரித்துக் கொண்டு படுக்கையறையில் நுழைய, டி.வி-யில் நியூஸ் சானல் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய கணவர் நரசிம்மன் தன்னுடைய வழுக்கைத் தலையை இரண்டு கைகளாலும் வாரிக் கொண்டே கேட்டார்.



"என்ன சத்யா... வால் கிளாக்கைப் பார்த்தியா? மணி பனிரெண்டரை. இனியாவது தூங்கலாமா வேண்டாமா..? இல்லை இன்னும் சமூக சேவை ஏதாவது பாக்கியிருக்கா?"

சத்தியவதி பொய்க் கோபத்தோடு வந்து கணவரின் காதைப் பிடித்தாள். "பாவங்க அந்தப்



பொண்ணுங்க... போலீஸோட விசாரணைப் பிடியில் மாட்டிகிட்டு கதி கலங்கிப் போயிருந்தாங்க. நான் மட்டும் இன்ஸ்பெக்டர்கிட்டே பேசி நிலைமையை சொல்லியிருக்காத பட்சத்தில் இன்னமும் அவங்க ஸ்டேஷன்லதான் இருந்து இருப்பாங்க."

"சரி...! ஏழு பேரும் ஹோட்டலுக்குப் போய் சேர்ந்தாச்சா இல்லையா?"

"போய் சேர்ந்தாச்சு. இப்பத்தான் போன் பண்ணிட்டு வர்றேன்..!"

"ட்ரெய்ன்ல காணாமே போன அந்த முழுமதி கிடைச்சுட்டாளாமா..? போலீஸ் என்கொய்ரி எந்த மட்டில் இருக்கு?"

"ஈரோட்டிலிருந்து கோயமுத்தூர் வரைக்கும் உள்ள எல்லா ரயில்வே ஸ்டேஷன்களையும் அலர்ட் பண்ணி, அந்தப் பெண்ணையும், அந்த மீசைக்கார இளைஞனையும் தேடும்படி ரயில்வே போலீஸுக்கு உத்தரவு போயிருக்கு. எப்படியும் விடியறதுக்குள்ளே அந்தப் பொண்ணைப் பத்தின ஏதாவது ஒரு தகவல் நமக்குக் கிடைச்சுடும்... அது தவிர..."

சத்தியவதி சொல்லி முடிக்கவில்லை, டெலிபோன் கிணுகிணுத்து கூப்பிட்டது. பக்கத்தில் இருந்த நரசிம்மன் ரிஸீவரை எடுத்தார். "எஸ்" என்றவர் காம்பௌண்ட் கேட்டிலிருந்து வாட்ச்மேன் பேசுவதைப் புரிந்து கொண்டு "என்ன.. முருகன்..?" என்று கேட்டார்.

"அய்யா..! போலீஸ் வந்து இருக்காங்க..."

"போலீஸா... எதுக்கு...?"

"தெரியல்லீங்கய்யா... ஏதோ முக்கியமான விஷயமாம். அம்மாவைப் பார்த்து பேசணுமாம்..."

நரசிம்மன் மௌனம் காத்தார்.

"அய்யா..!.. அவங்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்..?"

"உள்ளே அனுப்பு..!"

"சரிங்கய்யா..." வாட்ச்மேன் முருகன் ரிஸீவரை வைத்துவிட- நரசிம்மனும் ரிஸீவரை வைத்துவிட்டு குழப்பமாய் மனைவியைப் பார்த்தார்.

"சத்யா..! போலீஸ் வந்து இருக்காங்க... உன்னைப் பார்த்து பேசணுமாம்..."

"அதான் போன்லயே எல்லாத்தையும் பேசியாச்சே! நேர்ல இந்நேரத்துக்கு வந்து பேச இனியும் என்ன இருக்கு?"

"ஏதோ ஒரு முக்கியமான விஷயமாய் இருக்கப் போய்த்தான் போலீஸ் வந்து இருக்காங்க... வா... கீழே போவோம்."

இருவரும் மாடிப்படிகள் இறங்கி ஹாலுக்கு வந்து வாசற் கதவைத் திறந்தார்கள்.

அஸிஸ்டண்ட் போலீஸ் கமிஷனர் பரணி குமாரும் இன்ஸ்பெக்டர் நித்தியானந்தனும் வாசற் படிகளில் நின்றிருந்தார்கள்.

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்..."

"ஸோ... வாட்... ஏதோ ஒரு முக்கியமான விஷயம் இருக்கப் போய்த்தானே இந்த மிட் நைட் விசிட்... ப்ளீஸ் கெட் இன்..."

உள்ளே கூட்டிப் போனார்கள். சோபாக்களைக் காட்டி அவர்கள் உட்கார்ந்ததும் சத்தியவதி கேட்டாள்.

"என்ன விஷயம்..?"

"மேடம்..! உங்க செல் நெம்பர் என்ன..?" ஏ.சி. பரணிகுமார் கேட்டதும் அவள் திகைத்தாள்.

"அது... வந்து... என்கிட்டே மூணு செல்போன்கள் இருக்கு... நீங்க எந்த செல்போன் நெம்பரை கேட்கறீங்க...?"

"ஓ. கே! நான் இப்ப சொல்ற ஒரு செல்போன் நெம்பர் உங்களோட நெம்பரா இல்லையான்னு சொல்லுங்க..! நெம்பர் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"டபுள் நைன் டபுள் ஃபோர் நைன் த்ரீ நைன் ஒன்... ஃபைவ்... என்று ஆரம்பித்து கடைசி எண்ணை பரணிகுமார் சொல்லி முடித்ததும் பதட்டத்தோடு குறுக்கிட்டாள் சத்தியவதி.

"இ..இ... இது என்னோட நெம்பர்தான்..."

"இந்த நெம்பர் இருக்கிற செல்போன் இப்போ உங்க கிட்டதானே இருக்கு..?"

"ஆமா..."

"அந்த செல்போனை நாங்க பார்க்கணுமே?"

சத்தியவதி குழப்பமாய் ஏ.சி.யைப் பார்த்தாள். "ஸார்..! எதுக்காக இந்த செல்போன் விசாரணை..?"

"ப்ளீஸ் மேடம்... மொதல்ல அந்த செல்போனைக் கொண்டு வந்து காட்டுங்க.. அப்புறம் நீங்க கேக்கிற கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்றேன்."

சத்தியவதி குழப்பம் அதிகரித்த முகத்தோடு ஹாலின் இடதுபக்க மூலையில் இருந்த அறையை நோக்கிப் போய் அடுத்த இரண்டு நிமிஷ



நேரத்திற்குள் கையில் ஒரு செல்போனோடு வெளிப்பட்டாள். ஏ.சி.யிடம் நீட்டினாள்.

"இதுதான் நீங்க சொன்ன நெம்பர்க்குரிய செல்போன்..."

ஏ.சி. வாங்கிப் பார்த்தார்.

முழுமதியிடம் இருந்த அதே ஆப்பிள் கம்பெனியின் செல்போன். அதே நிறம். அதே பளபளப்பு.

"மேடம்..! உங்ககிட்டே மூணு செல்போன் இருக்கிறதாய் சொன்னீங்க. அந்த மூணுல எந்த செல்போனை அதிகமாய் நீங்க பயன்படுத்துவீங்க..?"

சத்தியவதி வேறொரு செல்போன் நெம்பரைச் சொன்னாள். " பெரும்பாலும் இப்ப நான் சொன்ன செல்போன் நெம்பரைத் தான் யூஸ் பண்ணுவேன். அது என் பெட்ரும்ல இருக்கு. இன்னொரு செல்போன் என் சொந்தக்காரர்களோடு பேசறதுக்கு மட்டும். மூணாவது செல்போனை பெரிய பெரிய ஃபங்க்ஷன்ஸ் நடக்கும் போது மட்டும் எடுத்துட்டுப் போவேன். அதுதான் இப்ப உங்க கையில் இருக்கிற காஸ்ட்லி செல்போன்."

"அதாவது இந்த செல்போனை அக்கேஷனலாய்த்தான் யூஸ் பண்ணுவீங்க... இல்லையா..?"

"ஆமா..."

"இந்த செல்போனை நீங்க யூஸ் பண்ணி எவ்வளவு நாட்கள் இருக்கும்?"

"பதினஞ்சு நாள்!"

"இந்த பதினஞ்சு நாளும் செல்போன் எங்கே இருந்தது?"

"என்னோட ட்ரஸ்ஸிங் டேபிளோட ட்ராயர்ல.."

"மேடம்! இப்போ நான் என்னோட செல் போனிலிருந்து உங்க ஆப்பிள் மேக் செல்போனுக்கு டயல் பண்றேன். ரிங் டோன் போதுமா போதாதா?"

"போதும்..."

"அதை டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாமா?"

"ஏன்? அதுல என்ன சந்தேகம்?"

"சந்தேகம் இருக்கப் போய்த்தானே இந்த மிட்நைட்ல உங்களைப் பார்க்க வந்திருக்கோம்?" சொன்ன ஏ.சி. பரணிகுமார் தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் நித்தியானந்தனைப் பார்க்க, அவர் தன் கையில் வைத்து இருந்த

அவருடைய செல்போனில் சத்தியவதியின் ஆப்பிள்
மேக் செல்போனின் எண்களை ஒற்றி எடுத்தார்.

சத்தியவதியின் ஆப்பிள் மேக் செல்போன் ஒரு ஊமையைப் போல் மௌனம் சாதிக்க, பரணிகுமாரின் கைப்பையில் வைத்து இருந்த முழுமதியின் போன் ரிங்டோனை வெளியிட்டது.

சத்தியவதியும் நரசிம்மனும் முகம் இருண் டார்கள். "என்ன ஏ.சி ஸார்... என்னோட செல்போனி லிருந்து ரிங் டோன் வராமே கைப்பையில் இருக்கிற செல்போனிலிருந்து ரிங்டோன் வருது?"

"மேடம்... இப்ப பிரச்னையே அதுதான். இந்த செல்போனைப் பாருங்க.." ஏ.சி. தன் கைப்பைக்குள் வைத்து இருந்த அந்த செல்போனை எடுத்துக் காட்ட லேசாய் அதிர்ந்தாள் சத்தியவதி.

"ஸார்! இது என்னுடைய செல்போன் மாதிரியே இருக்கே..."

"இதுதான் உங்களோட செல்போன். என்னா இதுலதான் நீங்க சொன்ன நெம்பரோடு கூடிய சிம்கார்டு இருக்கு. இந்த செல்போன்தான் காணாமல் போன அந்த முழுமதிகிட்டேயிருந்தது."

"எ...ப்...ப...டி..?"

"எப்படின்னு நீங்கதான் சொல்லணும்"

"எப்படின்னு நீங்கதான் சொல்லணும் இல்லாத இந்த
"சரி... என்னோட சிம் கார்டு இல்லாத இந்த செல்போன் என்னோட ட்ரஸ்ஸிங் டேபிள் ட்ராயர்க்கு எப்படி வந்தது?"

"அதையும் நீங்கதான் சொல்லணும்..."

"ஸார்! எனக்கு தலையைச் சுற்றி மயக்கம் வர்ற மாதிரி இருக்கு..."

"மேடம்..! கொஞ்சம் பதட்டப்படாமே நிதான மாய் யோசனை பண்ணுங்க... ஏதோ ஒரு சரியான காரணம் இல்லாமே இப்படியெல்லாம் நடக்க வாய்ப்பே இல்லை. அந்த முழுமதி என்கிற பெண்ணை உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?"

"தெரியாது..."

"உங்க கணவருக்கு?"

"அவர்க்கும் தெரியாது..."

"அதை அவரே சொல்லட்டும்!"

நரசிம்மன் சொன்னார்.

"எனக்கும் அந்தப் பெண்ணைத் தெரியாது ஸார். முழுமதி என்கிற பேரையே இன்னிக்குத்தான் கேள்விப்படறேன்."



"மேடம்! இப்ப பொய் சொல்லிட்டு பின்னாடி என்னதான் உண்மையைச் சொன்னாலும் அந்த உண்மை உங்களைக் காப்பாத்தாது. ஸோ முழுமதியை உங்களுக்கு முன்னாடியே தெரிஞ்சி ருந்தா அதைப் பத்தின உண்மைகளை வெளிப்படுத் திடறது நல்லது." ஏ.சி. சொல்ல நரசிம்மன் கோபமாய் குறுக்கிட்டார். "ஏ.சி.ஸார்..! நாங்க சொஸைட்டியில் வெல் நோட்டட் பர்ஸன்ஸ். நான் ஒரு ரெப்யூட்டட் கம்பெனியில் ஜி.எம்.மாய் வொர்க் பண்ணிட்டிருக் கேன். என்னோட ஒய்ஃப் சத்தியவதி பெண் அரிமா சங்கத்துக்கு பிரஸிடெண்ட். இது தவிர பல்வேறு சமூக நல அமைப்புகளில் உறுப்பினராகவும் இருக்கா. என்னோட ரெண்டு சன்களில் ஒருத்தன் அமெரிக்காவிலும் ஒருத்தன் ஜப்பானிலும் ஸாஃப்ட்வேர் என்ஜினியர்களாய் இருக்காங்க. இந்த சமூகத்தில் நல்ல மதிப்போடும் மரியாதையோடும் வாழ்ந்துட்டு இருக்கிற நாங்க யார்க்காகவும் எதுக்காவும் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. நாங்க இப்ப சொன்னதெல்லாம் உண்மை. அந்த முழுமதி யார்ன்னே எங்களுக்குத் தெரியாது."

"ஓ.கே..! நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு ஸ்ட்ராங்காய் சொல்லிட்டதாலே நாங்க இந்த கேஸை வேற ஒரு கோணத்திலிருந்து இன்வெஸ்டிகேட் பண்ணப் போறோம். உங்க டிரஸ்ஸிங் டேபிள் டிராயரில் இருந்த செல்போனிலிருந்து ஒரு சிம்கார்டு கிடைச்சிருக்கு. இந்த சிம்கார்டில் உள்ள நெம்பர் யாரோட போல இருக்குன்னு பார்த்து..." ஏ.சி. சொல்லிக் கொண்டிருக்க- அவருடைய செல்போனி லிருந்து ரிங்டோன் வந்தது.

எடுத்தார்.

கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசினார்கள்.

"ஸார். நான் சி.ஓ. பொன்வண்ணன்"

"சொல்லுங்க..."

"அந்த முழுமதி காணாமே போன இடத்தை ட்ரேஸ் பண்ணி ரயில்வே போலீஸ் தகவல் கொடுத்து இருக்காங்க ஸார்."

"எஸிட்... எந்த இடம்..?"

"ஊத்துக்குளி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கல்லுக்குழின்னு- பாறைகள் அதிகமாய் இருக்கிற ஒரு இடம். அந்த இடத்துல ரத்தக்கறை படிஞ்ச ஒரு பெண்ணோட சுடிதாரும்,





எழுத்த



உள்ளாடைகளும் கிடந்து இருக்கு...''

''ட்ரஸ் மட்டுமா?''

''ஆமா...ஸார்...''

''அந்தப் பொண்ணு முழுமதி..?''

''அந்தப் பொண்ணு முழுமதி..?''

''அவளைப் பத்தி எந்தத் தகவலும் இல்லை ஸார். அந்த பாறைகள் உள்ள ஏரியாவில் நிறைய கல்லுக் குழிகள் இருக்கிறதால அந்தக் குழிகளில் எதாவது ஒண்ணுல அவளோட டெட்பாடி கிடைக்கலாம் என்கிற கெஸ் வொர்க்கில் சர்ச் லைட்டுகளின் உதவியோடு தேடிகிட்டு இருக்காங்க ஸார்...''

''உங்களுக்குத் தகவல் கொடுத்தது யாரு?''

''ஊத்துக்குளி ரயில்லே போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள்!''

''அவரை காண்டாக்ட் பண்ணி நேரிடையா என்னோடு பேசச் சொல்லுங்க...''

''எஸ்... ஸார்...''

பரணிகுமார் தன் செல்போனை அணைத்து விட்டு சத்தியவதியிடம் நிமிர்ந்தார். ''மேடம்... முழுமதி காணாமல் போன இடத்தை போலீஸ் ட்ரேஸ் பண்ணியிருக்காங்க. அதைத் தொடர்ந்து கூடிய சீக்கிரமே ஐ...மீன் காலைப் பொழுது விடியறதுக் குள்ளேயே எல்லா உண்மை களும் வெளியே வந்துடும்ன்னு நினைக்கிறேன். அதுக்கப்புறம் உண்மையான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் போலீஸோட பார்வையிலிருந்து தப்பிக்க முடியாது.''

சத்தியவதி அவரைக் கையமர்த்தினாள்.

''ஏ.சி. ஸார்... என்னோட செல்போன் அந்தப் பொண்ணு முழுமதிகிட்டேயிருந்த ஒரே ஒரு காரணத்துக்காக நான் உங்க பார்வைக்கு ஒரு குற்றவாளியாய் தெரியறேன். நான் ஒரு சமூகநல சேவகி என்கிற காரணத்தால் என்னைப் பார்த்துப் பேசறதுக்காக நிறைய பேர் இந்த வீட்டுக்கு வருவாங்க. இந்த வாரம் பூராவும் என் வீட்ல ஒரே கும்பல்தான். காரணம்- சாவதேச அளவில் விருது பெற்ற 'ரெயின்போ' என்கிற- சமுதாய நலப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட- ஒரு அமைப்புக்கு நாளைக்கு கொடீசியா வளாகத்தில் பாராட்டு விழா ஒண்ணை நடத்தப் போறோம். நல்லது எங்கே நடந்தாலும் அதைப் பாராட்டி மகிழ்கிற குணம்தான் என்கிட்டே இருக்கிறதே தவிர ஒருத்தர்க்கு கெடுதல் செய்கிற எண்ணம் எனக்குக் கிடையாது. என்னோட



வீட்டுக்கு வந்த யாரோ, கும்பலை பயன்படுத்தி கிட்டு செல்போனை திருடிட்டுப் போயிட்டாங்க. அதுக்குப் பதிலாய் அதே மாதிரி ஒரு செல்போன் மேஜை ட்ராயர்ல இருந்ததால என்னால சந்தேகப்பட முடியலை. ஒரு ப்ரஸ்டீஜ் ஸ்டேட்டஸை மெய்ன் டைன் பண்றதுக்காக மூணு செல்போனை உபயோ கப்படுத்தினது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப புரியுது.''

சத்தியவதி புலம்பிக் கொண்டிருக்கும்போதே ஏ.சி.யின் செல்போன் சிணுங்கியது. எடுத்து ''எஸ்'' என்றார்.

மறுமுனை ''ஸார்... நான் அருள். ஊத்துக்குளி ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர்.''

''அருள்! அந்தப் பொண்ணு முழுமதி காணாமே போன இடத்தை இவ்வளவு சீக்கிரமாய் ட்ரேஸ் அவுட் பண்ணி கண்டுபிடிச்சதுக்கு என்னோட பாராட் டுதல்கள்.''

''தேங்க்யூ... ஸார்..! அந்தப் பொண்ணைக் கண்டு பிடிக்க முடியலை ஸார். பட்... அந்தப் பெண் முழுமதி அணிந்திருந்த ட்ரஸ்ஸை ரத்தக்கறைகளோடு ஒரு புதர்க்குள்ளேயிருந்து எடுத்துட்டோம்...''

''அந்த ட்ரஸ் முழுமதியோடதுதானா?''

''முழுமதியோடதுதான் ஸார்... அவளுடைய அங்க அடையாளங்கள், அணிந்திருந்த ட்ரஸ், அதனோட கலர் எல்லா விபரங்களையும் ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த பெண்கள் தெளிவாய் சொல்லி யிருந்தாங்க. நாங்க கண்டெடுத்த ட்ரஸ்ஸும் அவங்க சொன்ன டிசைன், கலர் போன்ற விவரங் களுக்கு ஒத்துப் போயிருக்கு...''

''முழுமதி என்ன ஆனாள்னு தெரியலை?''

''அந்தப் பொண்ணு உயிரோடு இருக்க வாய்ப்பில்லை ஸார். ஏன்னா அவ அணிந்திருந்த ட்ரஸ்ஸில் ரத்தக் கறைகள். இந்த ஏரியாவில் கல்லுக் குழிகள் நிறைய இருக்கிற காரணத்தால...''

அருளின் பேச்சு சட்டென்று நின்றது. சில விநாடிகளுக்கு அமைதி.

''அருள்..! என்னாச்சு... ஏன் பேச்சை நிறுத்திட்டீங்க..?''

''ஸ...ஸார்''

''என்ன..?

''முழுமதியோட டெட்பாடி கிடைச்சுடுச்சாம்...

ஒரு பாறைக் குழிக்குள்ளே போட்டு மணலை போட்டு மூடி வெச்சிருக்காங்களாம். சர்ச் ஸ்க்வாட் ஸ்பாட் அவுட்பண்ணிட்டாங்க... ஸார்."

## செல்போன் குறும்பு



பெண் 1: உங்க கூந்தல் ரொம்ப நீளமா அடர்த்தியாய் இருக்கே... எப்படி?
பெண் 2: காலையில் ஷாம்பு, சாயந்தரம் சோப்பு போடுவேன்.
பெண் 1: அப்போ ராத்திரிக்கு?
பெண் 2: கழற்றி ஆணியில் மாட்டிடுவேன்.

அஸிஸ்டண்ட் கமிஷனர் பரணிகுமார்- அருள் சொன்ன ஊத்துக்குளி ஸ்பாட்டுக்குப் போய்ச் சேர்ந்த



போது அந்த காலைப்பொழுது விடியக் காத்து இருந்தது. பெட்ரோமாக்ஸ் விளக்குகள் 'உஸ்ஸ்' என்ற சத்தத்தோடு ஒளிர்ந்து கொண்டிருக்க பனியுடன் கூடிய காற்று உடம்பில் மோதி எலும்பில் பாய்ந்தது.

அருள் எதிர்பட்டார். அவர்க்குப் பின்னால் பனியனும் காக்கி ட்ராயரும் அணிந்த நான்கைந்து போலீஸார் ஒரு குழியைச் சுற்றிலும் நின்று கொண்டு, குழிக்குள்ளே டார்ச் வெளிச்சத்தை அடித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பரணிகுமார் கேட்டார்.

"என்ன அருள்... பாடியை கல்லுக்குழியிலிருந்து இன்னமும் எடுக்கலையா?"

"இல்ல ஸார்"

"ஏன்..?"

"எடுக்க முடியலை ஸார்... முழுமதி விழுந்த கல்லுக்குழியோட விட்டம் ரொம்பவும் குறுகல் ஸார். பாடி உள்ளே போய் ஒரு ஏகு பிசகான கோணத்துல மாட்டிகிச்ச... அதை எடுக்கத் தான் போராடிக்கிட்டு இருக்காங்க...." அருள் பேசிக் கொண்டே பரணிகுமாரை அந்த கல்லுக்குழிக்குப் பக்கத்தில் கூட்டிக் கொண்டு போனார். கயிறுகளில் இரும்புக் கொக்கிகளை மாட்டி உள்ளே விட்டு மேலே இழுக்க முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.



பரணிகுமார் குழிக்குப் பக்கமாய் சென்று குனிந்து பார்த்தார். டார்ச் வெளிச்சம் உள்ளே பாய ஒரு பெண் உடலின் முதுகுப்பரப்பு தெரிந்தது. பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிள் ஒருவர் சொன்னார்.

"ரெண்டு நாளா இந்த ஏரியாவில் நல்ல மழை ஸார். அதான் கல்லுக்குழி சேறும் சகதியுமாய் இருக்கு. உடம்பு போய் சேத்தில மாட்டிகிச்சு ஸார். கொக்கியைப் போட்டு உடம்பை மேலே இழுக்க ட்ரை பண்ணிட்டிருக்கோம் ஸார்."

"எடுக்க முடியுமா?"

"கொஞ்சம் கஷ்டம் ஸார்... ஏன்னா சேறு காயாமே பசை மாதிரி இருக்கு. பயர் சர்வீஸ் ஆட்களை வரவழைச்சா பரவாயில்லை ஸார்."

பரணிகுமார் இன்ஸ்பெக்டர் அருளைப் பார்க்க, அவர், "நான் ஏற்பாடு பண்ணிடறேன் ஸார்..." என்றபடி தன்னிடம் இருந்த செல்போனை எடுத்துக் கொண்டார். பயர் சர்வீஸுக்கு போன் செய்து அவர் விபரத்தை சொல்லிக் கொண்டிருக்க, பரணிகுமார் நெற்றியைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் இருந்த ஒரு பாறையின் மேல் போய் உட்கார்ந்தார்.

'இந்தப் பெண் முழுமதியின் மேல் யார்க்கு என்ன கோபம்...? எதற்காக இப்படியொரு கோர மரணம்?'

'அவளை சென்னையிலிருந்து தூக்கிக் கொண்டு வந்த மீசைக்காரன் யார்...?'

யோசனைகளில் மூளை கொதித்துப் போய் உடம்பு முழுவதும் டென்ஷன் பரவிக் கொண்டிருக்க, பக்கவாட்டில், "எக்ஸ்க்யூஸ் மீ ஸார்..." என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்.

காமிரா, நோட்புக், பேனா சகிதம் நான்கைந்து பேர் தெரிந்தார்கள். அதில் ஒரு பெண். எல்லோருமே பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் என்பது பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்தது. பரணிகுமார் எரிச்சலானார். "ஏன்யா... நீங்களெல்லாம் தூங்கவே மாட்டீங்களா...? எப்படிய்யா உங்களுக்கு வேர்க்குது..?"

அந்தப் பெண் ரிப்போர்ட்டர் முன்னால் வந்தாள்.

"ஸாரி ஸார்... இப்படியொரு சம்பவம் நடந்து இருக்கிறது எங்களுக்குத் தெரியாது. பிரஸ் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியாவுக்கு போன் பண்ணி யாரோ சொல்லியிருக்காங்க. அவங்க எங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணினாங்க... அதான் உடனே கோய

முத்தூரிலிருந்து புறப்பட்டு வந்தோம். கல்லுக் குழியில் விழுந்து இருக்கிற பொண்ணு யார் ஸார்...?''

''முழுமதின்னு ஒரு பொண்ணு''

''என்ன பிரச்னை ஸார்...?''

''அது அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.''

''ட்ரெய்ன்ல வரும்போதே அந்தப் பொண்ணு காணாமே போயிட்டதாக 'பி.டி.ஐ' ல் சொன்னாங்க... உண்மையா ஸார்?''

பரணிகுமார் பொறுமை இழந்தவராய் அவர்க ளிடம் எரிந்து விழுந்தார். ''எவ்ரிபடி கெட் லாஸ்ட் ஃப்ரம் ஹியர்... எது பொய் எது உண்மைன்னு நாளைக்குத்தான் தெரியும்...''

''ஸார்... அது வந்து...''

''ப்ளீஸ்... ராத்திரி முழுவதும் நான் தூங்கலை. என்னை இரிடேட் பண்ணாதீங்க...''

பத்திரிகை நிருபர்கள் தயக்கத்தோடு கலைந்து போக அந்தப் பெண்ணும் இன்னொரு இளைஞனும் மட்டும் அசையாமல் அப்படியே நின்றார்கள்.

''உங்களுக்குத் தனியா சொல்லணுமா?''

''ஸார்... நாங்க 'பஞ்சதந்திரம்' பத்திரிகையி லிருந்து வர்றோம். என்னோட பேர் திரிவேணி. இவர் என்னோட கொலீக் மணிபாரதி. எங்க பத்திரிகை ஒரு டீஸண்டான பத்திரிகை. பத்திரிகை விக்கணுங்கிற துக்காக எந்த ஒரு விஷயத்தையும் பூதாகாரமாக்கி பப்ளிஷ் பண்றது இல்லை. அது உங்களுக்கே தெரியும். இந்த முழுமதி மேட்டரையும்...''

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே-

பரணிகுமாரின் செல்போன் ரிங்டோனை வெளி யிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன்!

குரலில் பதட்டம்.

''ஸார்....''

''என்ன சொல்லுங்க...''

''இங்கே ஒரு விபரீதம் ஸார்.''

''விபரீதமா..?''

''ஆமா ஸார்...! ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த ஏழு பெண்களையும் மான்செஸ்டர் ஹோட்டலில் ரூம் போட்டு தங்க வைச்சிருந்தாங்க இல்லையா ஸார்..?''

''ஆமா...''

''அந்த ஏழு பெண்களில் ஒரு பெண் இப்போ



உயிரோடு இல்லை ஸார்...''

''எ....எ... என்னது உயிரோடு இல்லையா..? என்னாச்சு? வாட் ஹேப்பண்ட் டு ஹர்..?'' பரணி குமார் அதிர்ந்து போனவராய் எழுந்தார்.

''ஸ....ஸார்... அந்த... வி...வி....விபரீதத்தை சொல்லவே என்னோட உடம்பும் மனமும் நடுங்குது.''

''நித்தியானந்தம்... நீங்க என்ன சொல்றீங்க? ஒரு போலீஸ்மேன் நீங்க. நீங்களே பயந்து நடுங்கற அளவுக்கு அப்படியென்ன விபரீதம்..?''

''ஸார்... அந்தப் பொண்ணோட உடம்பில் இருக்கிற ஒட்டு மொத்த ரத்தமும் கண், காது, மூக்கு, வாய்ன்னு எல்லா வழிகளிலும் வெளியே வந்து அவ தங்கியிருந்த ரூம் முழுக்க ரத்தமயம்... ஸார்...''

''எ...ப்...ப...டி...?''

''தெ...தெரியலை ஸார்..''

''டாக்டர்க்கு தகவல் கொடுத்தீங்களா...?''

''டாக்டர் வந்து பார்த்துட்டு அவரும் அதிர்ந்து போய்ட்டார். பாடியை பி.எம். பண்ணிப் பார்த்தாத்தான் மரணத்துக்கான காரணம் தெரியும்ன்னு சொல்லிட்டார்..!''

''இறந்து போன பொண்ணோட பேர் என்ன?''

''இன்பா...ஸார்.., அந்த ஏழு பெண்கள்ல இந்தப் பெண்தான் வயசில் சின்னவ.''

''மை குட்னஸ்...''

''ஸார்... நீங்க உடனே புறப்பட்டு வர்றீங்களா?''

''வர்றேன்... அதுக்கு முன்னாடி நீங்க ஒரு காரியம் பண்ணுங்க...

''சொல்லுங்க ஸார்...''

''அந்த ஒட்டுமொத்த மான்செஸ்டர் ஹோட்ட லையும் சீல் வையுங்க. போலீஸ் அனுமதியில்லாமே ஒரு ஈ காக்காகூட வெளியே போகக்கூடாது.''

''அந்த ஏற்பாட்டை நான் ஏற்கெனவே பண்ணிட் டேன் ஸார். அது மட்டும் இல்லாமல் அதே ஹோட்ட லில் தங்கியிருந்த ரெண்டு இளைஞர்களை சந்தேகத் தின் பேரில் கைது பண்ணி வெச்சிருக்கேன்.''

''நான் புறப்பட்டேன்...''

## செல்போன் தத்துவம்

வாழ்க்கை என்பது ஐஸ்க்ரீம் மாதிரி. சாப்பிட்டாலும் கரையும். சாப்பிடாமே விட்டாலும் கரையும். அதனால வாழ்க்கையை மிஸ் பண்ணாமே 'என்ஜாய்' பண்ணுங்க. ஒவ்வொரு நொடியும் ஐஸ்க்ரீம் மாதிரி இனிக்கும்.

ரேஸ்கோர்ஸ் ரோட்டில் இருந்த அந்த மான்செஸ்டர் ஹோட்டல் உள்ளே நடந்த விபரீதத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஒன்பது மாடிகளோடு அப்பாவித்தனமாய் நின்றிருந்தது.




ஹோட்டலின் போர்டிகோ வளாகத்தில் ஒரு போலீஸ் ஜீப்பும், வேனும், கொஞ்சம் தள்ளி ஆம்புலன்ஸும் தெரிந்தது. ஹோட்டல் மானேஜரோடு ரிசப்ஷனில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன், ஜீப்பினின்றும் இறங்கிக் கொண்டிருந்த பரணிகுமாரைப் பார்த்ததும் வேக வேகமாய் அவரை நோக்கி வந்து சல்யூட் வைத்து தளர்ந்தார்.

"ஸார்..."

"எந்த ரூம்..?"

"ஏழாவது மாடி ஸார். ரூம் நம்பர் 727"

"ஃபாரன்ஸிக் பீப்பிள் வந்துட்டாங்களா?"

"வந்து பார்த்துட்டு இருக்காங்க ஸார்...!"

"எனி ரிப்போர்ட்...?"

"அவங்க எதுவும் சொல்லலை ஸார். அந்தப் பெண் இன்பாவோட ரத்த மாதிரியை எடுத்து சோதனை பண்ணிப் பார்த்துட்டு அவங்களுக்குள்ளே ஏதோ டிஸ்கஸ் பண்ணிகிட்டாங்க."

"ஃபாரன்ஸிக் சீஃப் யாரு?"

"பரசுராம் ஸார்..."

"ஹி ஈஸ் த டேலண்ட்டட் பர்ஸன்..! நம்ம இன்வெஸ்டிகேஷனுக்கு யூஸ்ஃபுல்லாய் இருக்கிற மாதிரி அவர் ஏதாவது ரிப்போர்ட் கொடுப்பார்..!"

மாதிரி அவர் ஏதாவது ரிப்போர்ட் கொடுப்பார்..!" இருவரும் பேசிக்கொண்டே லிஃப்ட்டுக்கு வந்து ஏழாவது மாடிக்கு உயர்ந்து நிசப்தமான வராந்தாவில்



நடந்து '727' எண்ணிட்ட அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள்.

அறையின் கதவு திறந்து இருக்க, உள்ளே ஃபாரன்ஸிக் ஆட்கள் தெரிந்தார்கள். கைகளில் லென்ஸ் வைத்தபடி அறையிலிருந்த பொருள்களின் மேல் பௌடர் தூவி கைரேகைப் பதிவுகளை சேகரித்துக் கொண்டு இருந்தார்கள். மார்பிள் தரை பரப்பு முழுவதும் திட்டுத்திட்டாய் உறைந்து போன ரத்தம். செவ்வக டீபாய்க்கும், ஜன்னலுக்கும் இடையில் சுவரோரமாய் அந்தப் பெண் இன்பா மல்லாந்து தெரிந்தாள். ரத்தத்தால் மெழுகியது போன்ற முகம்.

பரணிகுமார் அதிர்ந்து போனவராய் இன்பாவையே பார்த்துக் கொண்டிருக்க- ஃபாரன்ஸிக் பரசுராமன் பக்கத்தில் வந்தார். முகத்தில் கவலையோடு கூடிய ஏமாற்றம்.

"ஸார்... இந்த மரணம் மிகப்பெரிய புதிர். எப்படி நடந்ததுன்னு ட்ரேஸ் பண்ண முடியலை. கடந்த ஒரு மணி நேரமாய் சல்லடையால் சலித்துப் பார்த்துவிட்டோம். வி குட் நாட் ஃபைண்ட் எனி ட்ரேஸ் ஆர் க்ளு... பாடியை இனியும் தாமதிக்காமல் பி. எம். முக்கு கொண்டு போயிடறது பெட்டர்."

பரணிகுமார் நித்தியானந்தத்திடம் திரும்பினார்.

"இந்த அறையில் இன்பா மட்டும்தான் தங்கியிருந்தாளா?"

"இல்ல ஸார்... இன்பாவோடு அவங்க அமைப்பைச் சேர்ந்த ஓமனா என்கிற பெண்ணும் ஸ்டே பண்ணியிருந்தா."

"அந்தப் பொண்ணு எங்கே..?"

"பக்கத்து ரூம்ல இருக்கா ஸார். இன்பாவோட மரணத்தை நேர்ல பார்த்த அவளாலே அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமே பிரமை பிடிச்ச மாதிரி இருக்கா..."

"வாங்க...! அந்தப் பொண்ணைப் பார்க்கலாம்."

பக்கத்து அறையை நோக்கிப் போனார்கள். வெறுமனே சாத்தியிருந்த அறைக்கதவை நித்தியானந்தன் தள்ள- உள்ளே ரெயின்போ அமைப்பை சேர்ந்த அந்த ஆறு பெண்களும் அழுது அழுது களைத்துப் போன முகங்களோடு மூலைக்கு ஒருவராய் உட்கார்ந்தபடி தெரிந்தார்கள். பரணிகுமாரைப் பார்த்ததும் எழுந்தார்கள். ராதிகா புதுப்

பித்துக் கொண்ட அழுகையோடு அவரை ஏறிட்டாள்.

''ஸார்..! நாங்க சென்னையிலிருந்து எந்த வேளையில் புறப்பட்டோமோ தெரியலை. நாங்க எதிர்பார்க்காத சம்பவங்களாய் நடந்துட்டு இருக்கு. எங்களோடு பயணம் பண்ணின முழுமதி என்கிற பெண் காணாமே போனதுக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதை போலீஸ்கிட்டே சொல்லி அந்தப் பிரச்னையிலிருந்து மீண்டு வர்றதுக்குள்ளே எங்களுக்குப் போதும் போதும்ன்னு ஆயிடுச்சு... அதுக்குள்ளே இன்பாவுக்கு இப்படியொரு கோர முடிவு...''

பரணிகுமார் தன் அகன்ற தோள்களைக் குலுக்கி பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டுப் பேசினார்.

''இந்த ஒரே ராத்திரியில் தொடர்ந்து நடக்கிற சம்பவங்களைப் பார்த்தா எங்களுக்கும் அதிர்ச்சியாத் தான் இருக்கு..! யார் அந்த மீசைக்காரன்..? அவங்களுக்குள்ளே என்ன பிரச்னை..? ரயில் பயணத்தின் போது முழுமதி என்கிற அந்தப் பெண் ஏன் காணாமே போகணும்...? அப்படி காணாமல் போன பெண் கொலை செய்யப்பட்டு ஏன் கல்லுக்குழியில் கிடக்கணும்..? அந்த கொலைக்கான காரணத்தையே கண்டு பிடிக்க முடியாமே திணறிட்டு இருக்கும்போது உங்க ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த பெண் கோரமான முறையில் ரத்தம் வெளிப்பட்டு இறந்து போயிருக்கா... இந்த மரணம் இயற்கையானதா இல்லையான்னு உடம்பு போஸ்ட்மார்ட்டம் பண்ணப்பட்ட பிறகுதான் தெரியும். ஒரு வேளை இதுவும் கொலையாக இருக்கும் பட்சத்தில் இந்த கொலைக்கான மோட்டிவேஷன் என்னவாய் இருக்கும் என்பதும் ஒரு விஸ்வரூபக் கேள்வி. இந்த கேள்விக்கு நீங்க சொல்லப் போகிற பதிலை வெச்சுத்தான் போலீஸ் தன்னோட இன்வெஸ்டிகேஷனை ஆரம்பிக்கணும். இறந்து போன இன்பாவோட தங்கியிருந்த ஓமனா என்கிற பெண் இங்கே யாரு...?''

''நான்தான் ஸார்..!'' பலஹீனமாய் குரல் கொடுத்துக் கொண்டே இடது பக்கமிருந்து ஒரு பெண் வந்தாள்.

பரணிகுமார் திரும்பிப் பார்த்தார்.

அழுது அழுது வீங்கிய கண்களோடு- ஒடிசலான உடம்போடு- அந்தப் பெண் தெரிந்தாள். அவர்



அவளைப் பார்வையால் ஊடுருவிக் கொண்டே கேட்டார். ''இன்பாவுக்கு எப்படி இந்த மரணம்..? என்ன நேர்ந்ததுன்னு எதையும் மறைக்காமே சொல்லம்மா...''

''ஸ... ஸ... ஸார்...'' என்று அழுகையுடன் ஆரம்பித்த ஓமனா அழுகையை ஓரளவுக்கு கட்டுக்குள் கொண்டு வந்த பின் பேச ஆரம்பித்தாள்.

''ஸ...ஸார்... நானும் இன்பாவும் ஒரே அறையில் பக்கத்து பக்கத்து கட்டிலில் படுத்து தூங்கிட்டு இருந்தோம். திடீர்ன்னு யாரோ மூச்சிறைக்கிற மாதிரி சத்தம் கேட்கவே நான் தூக்கம் கலைஞ்சு கண் முழிச்சுப் பார்த்தேன். இன்பா கட்டில்ல புரண்டு புரண்டு படுத்துட்டு இருந்தா... மூச்சு விடறதுக்கு சிரமப்பட்டா. ஏற்கெனவே அவளுக்கு 'வீஸிங்' ப்ராப்ளம் கொஞ்சம் இருந்தது. அதனால மூச்சு விடறதுக்கு சிரமப்படறாளோன்னு நினைச்சு நான் எந்திரிச்சு, அவளுக்குப் பக்கத்தில போனேன். அதே நேரத்துல அவளும் எந்திரிச்சு உட்கார்ந்து தன்னோட தலையை ரெண்டு கையாலும் பிடிச்சகிட்டு என்னமோ மாதிரி என்னைப் பார்த்தா. 'இன்பா! உனக்கு என்ன பண்ணுது'ன்னு நான் கேட்டுகிட்டு இருக்கும்போதே மொதல்ல அவளோட மூக்கிலிருந்து ரெண்டு துளி ரத்தம் வெளியே வந்தது. அப்புறம் கடைவாய் ஓரமாய் கொஞ்சம் ரத்தம். இதையெல்லாம் பார்த்து பயந்து போன நான் பக்கத்து ரூம்ல தங்கியிருந்த ராதிகாவை எழுப்ப ஓடினேன். நான் போட்ட சத்தத்துல ராதிகாவும் மத்தவங்களும் எந்திரிச்சுட்டாங்க. எல்லாரும் ஒண்ணா ஓடி வந்து பார்த்தோம். இன்பா டீபாய்க்குப் பக்கத்துல மல்லாந்து விழுந்து இருந்தா. கண், காது, மூக்கு, வாய்ன்னு எல்லாப் பக்கத்திலிருந்தும் ரத்தம் வெளியே வந்துகிட்டு இருந்தது. நாங்க பதறியடிச்சுட்டு ஹோட்டல் மானேஜர்க்கு தகவல் கொடுக்க- அவர் டாக்டரை வரவழைச்சார். டாக்டர் வந்து பார்த்துட்டு இன்பா உயிரோடு இல்லைன்னு சொல்லிட்டாங்க...''

பரணிகுமார் நித்தியானந்தத்திடம் திரும்பினார்.

''யார் அந்த டாக்டர்..? இன்பாவோட மரணம் சம்பந்தமா அவரை என்கொய்ரி பண்ணீங்களா?''

''பண்ணினேன் ஸார்... டாக்டர் பேர் செல்வ கிருஷ்ணன். அவரை என்கொய்ரி பண்ணின போது

இன்பாவோட மரணம் 'ஸீம்ஸ் டு பி அப்நார்மல்'ன்னு சொல்லிட்டார். 'மரணம் எப்படின்னு என்னால ட்ரேஸ் பண்ண முடியலை. பி.எம். பண்ணிப் பார்த்தா ஒரு வேளை மரணம் எப்படி என்கிற கேள்விக்கு பதில் கிடைக்கலாம்'ன்னு சொல்லிட்டுப் போயிட்டார்..."

"ஓ.கே.. நித்தியானந்தம்..! இன்பாவோட மரணம் கொலையா... இல்லை... இயற்கையானதான்னு தெரிஞ்ச பின்னாடிதான் கேஸை ஃபார்தரா மூவ் பண்ண முடியும். அதனால பாடியை உடனடியாய் போஸ்ட்மார்ட்டத்துக்கு அனுப்ப ஏற்பாடு பண்ணுங்க..."

"எஸ்...ஸார்..." நித்யானந்தன் நகர்ந்து போக, பரணிகுமார் ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த மற்ற பெண்களுக்கு ஆறுதலாய் சில வார்த்தைகளை பேசிவிட்டு மறுபடியும் ஃபாரன்ஸிக் ஆபீஸர் பரசுராமனைப் பார்ப்பதற்காக அடுத்த அறையை நோக்கி நடந்தார்.

செல்போன் அழைத்தது. எடுத்துப் பேசினார். மறுமுனையில் ஊத்துக்குளியிலிருந்து இன்ஸ்பெக்டர் அருள் பேசினார்.

"ஸார்... நான் அருள்!"

"சொல்லுங்க... கல்லுக்குழியில் கிடந்த முழுமதியோட பாடியை எடுத்துட்டீங்களா?"

"ஸ... ஸார்... அது வந்து..."

"என்ன அருள்.. தயங்கறீங்க..?"

"ஸார்... கல்லுக்குழியில் இருந்த பாடியை எடுத்துட்டோம் ஸார்... ஆனால்..."

"என்ன ஆனால்..?"

"அது முழுமதியோட பாடி இல்லை ஸார்!"

"பின்னே..?"

"ஒரு கிழவியோட பாடி ஸார்..."

"எ...எ... என்ன சொல்றீங்க அருள்..?"

"ஆமா ஸார்... கிழவிக்கு எழுபது வயசு இருக்கலாம்..."

"அப்படின்னா அந்த இடத்துல கிடைச்ச முழுமதியோட ட்ரஸ்...?"

"அதான் குழப்பமாய் இருக்கு ஸார்."



**செல்போன் SMS-ல் வந்த ரகசிய செய்தி**

சுவர்க்கடிகாரம் ஓடும் போது 'டிக்...டிக்'... என்ற சத்தம் கேட்கும். உண்மையில் அது 'டிக் டிக்' சத்தம் இல்லை. 'க்விக்...க்விக்' என்ற சத்தம். 'டைத்தை வேஸ்ட் செய்யாமல் சீக்கிரமாய் செயல்படு; நேரம் தங்கத்துக்கு இணையானது' என்று தெரிவிப்பதற்காகவே கடிகாரம் 'க்விக் க்விக்' என்று சொல்கிறது.




**கா**லை பதினோரு மணி.

போலீஸ் கமிஷனர் அலுவலகம் தீப்பற்றிக் கொண்ட ஒரு வீட்டைப் போல் பதட்டம் நிரம்பித் தெரிய, பரணிகுமார் ஜீப்பில் வேகமாய் வந்து இறங்கி, வராந்தாவில் துரித நடை போட்டு, எதிரே வந்த ஊழியர்களின் சல்யூட்களை இடது கையை உயர்த்தி அலட்சியமாய் ஏற்றுக் கொண்டே, மாடிப்படிகளில் ஏறி முதலில் இருந்த கமிஷனரின் அறைக்குள் நுழைந்தார்.

மேஜையின் மேல் இருந்த கம்ப்யூட்டரின் மேல் உன்னிப்பாய் பார்வையைப் போட்டிருந்த கமிஷனர்க்கு முன்பாய் போய் நின்று சல்யூட் பதித்தார்.

கமிஷனர் கம்ப்யூட்டரை அணைத்து விட்டு சலனம் இல்லாத முகத்தோடு, பரணிகுமாரை ஏறிட்டார். எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினார்.

"உட்காருங்க..."

பரணிகுமார் தொப்பியைக் கழற்றி தன் மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்.

"மிஸ்டர் பரணிகுமார்..! ராத்திரியிலிருந்து நடந்துட்டு வர்ற சம்பவங்கள் எதுவும் நம்ம டிபார்ட்மெண்ட்டுக்கு சந்தோஷத்தை தர்ற மாதிரி தெரியலையே! ட்ரெய்ன்ல வந்த பொண்ணு காணாமே போயிருக்கா. அதே ட்ரெய்னில் வந்த 'ரெயின்போ' என்கிற சமூகநல அமைப்பைச் சேர்ந்த ஏழு பெண்களில் ஒரு பெண் மர்மமான முறையில் உடம்பில் இருக்கிற ரத்தம் எல்லாம் வெளியேறி ஹோட்டல் அறையில் இறந்து போயிருக்கா. காணாமே போன முழுமதி கிட்டே பெண் அரிமா

சங்கத் தலைவி சத்தியவதியோட செல்போன் இருந்து இருக்கு. முழுமதி அணிந்திருந்த ட்ரெஸ் ஊதத்துக்குள் கல்லுக்குழி பகுதியில் கண்டெடுக்கப் பட்டு அவளுக்குப் பதிலாய் ஒரு கிழவியோட டெட்பாடி கல்லுக்குழியில் இருந்திருக்கு. ஒரே ராத்திரியில் இவ்வளவு சம்பவங்கள் நடந்து இருந்தாலும் ஒரு சம்பவத்துக்கும் இன்னொரு சம்பவத்துக்கும் தொடர்பு இல்லாதது போல் ஒரு தோற்றத்தைக் கொடுத்துட்டிருக்கு. நீங்க இதுவரைக்கும் எடுத்த ஸ்டெப்ஸ் என்ன..? இனிமே எடுக்கப்போற ஸ்டெப்ஸ் என்ன?''

''ஸார்..! முழுமதியைத் தேடிக் கண்டு பிடிக்கிறதுக்காக நேற்றைக்கே ஒரு ஸ்க்வாட் போடப் பட்டு, அந்த ஸ்க்வாட் முழுவீச்சில் செயல்பட்டுட்டு இருக்கு. இன்பாவோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் இன்னும் எனக்கு வரலை ஸார். அப்புறம் சத்தியவதி வீட்டில் கண்டெடுக்கப்பட்ட செல்போனில் வேற ஒரு எண்ணில் சிம்கார்டு இருந்தது. அது யாருடைய சிம்கார்டுன்னு கண்டுபிடிக்கிற முயற்சியில் சப்இன்ஸ்பெக்டர் தமிழரசன் ஈடுபட்டு இருக்கார். விரைவில் தகவல் வரலாம் ஸார்...''

''மிஸ்டர் பரணிகுமார்..! இதை நீங்க ஒரு சாதாரண கேஸாய் பார்த்து டீல் பண்ணிட்டிருக்க வேண்டாம். பெண் அரிமா சங்கத் தலைவி சத்தியவதிக்கு அரசியல் வட்டாரத்தில் கொஞ்சம் செல்வாக்கு இருக்கு. அந்த அம்மாவும் அந்த செல்வாக்கைப் பயன்படுத்த ஆரம்பிச்சுட்டாங்க. அதனோட விளைவு சென்னையிலிருந்து டி.ஜி.பி. எனக்கு போன் பண்ணி ஒருமணி நேரத்துக்கு ஒரு தடவை பிரச்சனை என்னாச்சுன்னு கேக்கறார். சத்தியவதியோட செல்போன் அந்த முழுமதி கிட்டே எப்படிப் போச்சுன்னு கண்டுபிடிச்சு ரிப்போர்ட் தரச் சொல்றார். பெண் அரிமா சங்கத் தலைவி சத்தியவதி நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவங்க. அவங்களை யாரோ ஏதோ ஒரு பிரச்சனையில் மாட்டி விடறதுக்காக இப்படி பண்ணியிருக்கலாம்னு டி.ஜி.பி. கெஸ்வொர்க் பண்ணியிருக்கார். நாம இந்த விஷயத்துல சீக்கிரமா உண்மைகளைக் கொண்டு வரலைன்னா, மேலிடத்திலிருந்து வர்ற டார்ச்சரை நம்மாலே தாங்கிக்க முடியாது. வெளியே பார்த்தீங்களா... ப்ரஸ் ரிப்போர்ட்டர்களை..?''



''பார்த்தேன் ஸார்...''

''அவங்களைக் கண்ட்ரோல் பண்ண என்னால முடியலை!''

''நான் அவங்களை ஹேண்டில் பண்ணிக்கறேன் ஸார்...''

''இன்னிக்கு காலையில் வந்த பேப்பர்ல நியூஸ் என்ன போட்டிருக்கான் பாத்தீங்களா?''

''காலையிலிருந்து பேப்பர் எதுவும் பார்க்கலை ஸார்...''

''இந்தப் பேப்பரைப் பாருங்க...'' சொன்ன கமிஷனர், பேப்பர் வெயிட்டுக்குக் கீழே இருந்த 'செய்திக் கடல்' என்ற பத்திரிகையைத் தூக்கிப் போட்டார். ''ரெண்டாம் பக்கம் பாருங்க...''

புரட்டிப் பார்த்தார் பரணிகுமார்.

செய்தி கண்ணில் அடித்தது.

**'ஆப்பிள் பெண்ணே! நீ யாரோ?'**
**கோவை ரயிலில் வந்த பெண் மாயம்!**
**கண்டுபிடிக்க விழி பிதுங்கும் போலீஸார்!**
**ஒரு பெரிய பெண் புள்ளிக்குத் தொடர்பா?'**

என்ற சின்னச் சின்ன தலைப்புகளுக்குக் கீழே செய்தி ஓடியிருக்க, பரணிகுமார் திகைத்தார்.

''ஸார்! இந்த சத்தியவதி மேட்டர் எல்லாம் டிபார்ட்மெண்ட்டுக்கு மட்டுமே தெரிஞ்ச விஷயம். இது எப்படி பத்திரிகைக்குப் போச்சுன்னு தெரியலை...''

''நான் அந்தப் பத்திரிகைக்கு போன் பண்ணி எடிட்டர்கிட்டே கேட்டேன். அவர் என்ன சொல்றார்ன்னு தெரியுமா பரணிகுமார்?''

''என்ன சொன்னார் ஸார்?''

''பி.டி.ஐ.யிலிருந்து யாரோ போன் பண்ணி சொன்னாங்களாம்...''

''நம்பற மாதிரி இல்லையே ஸார்...''

''நானும் அதைத்தான் அவர்கிட்டே சொன்னேன். அதுக்கு அவர் 'எங்களுக்கு போன் பண்ணிப் பேசின நபர் யார்ன்னு எங்களுக்குத் தெரியாது. பட், பி.டி.ஐ.யிலிருந்து பேசினதாய் சொன்னதால அந்தச் செய்தி உண்மையாய் இருக்கும்னு நினைச்சு போட்டோம்'னு சொல்றார்...''

''ஸார்..! அந்தப் பத்திரிகையோட எடிட்டர் சொன்னது உண்மையாய் இருக்கும் பட்சத்தில் பி.டி.ஐ.யிலிருந்து பேசினதாய் சொல்லப்படும் அந்த

நபர் ட்ரெய்னில் முழுமதியை டீஸ் பண்ணின மீசைக்கார பேர்வழியாய் ஏன் இருக்கக் கூடாது?''

''இதோ பாருங்க பரணிகுமார்..! அப்படி இருக்குமோ, இப்படி இருக்குமோன்னு ஜோஸ்யம் சொல்லிக்கிட்டு இருக்கிறதுல எந்தப் பிரயோஜனமும் இல்லை. நடந்த சம்பவங்கள் ஒவ்வொண்ணும் ஒவ்வொரு திசையைப் பார்த்துகிட்டு சம்பந்தம் இல்லாத மாதிரி தெரிஞ்சாலும் ஏதோ ஒரு நூலிழைத் தொடர்பு இருக்குன்னு என்னோட மனசுக்குப் படுது. முழுமதி காணாமே போனதுக்கும் இன்பா இறந்து போனதுக்கும் காரணம் ஒண்ணாகத்தான் இருக்க முடியும்னு நான் நினைக்கிறேன். அந்தக் காரணத்தை நோக்கி நாம வேகமாய் போகணும்...'' கமிஷனர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பரணிகுமாரின் செல்போன்- சர்ட் பாக்கெட்டிலிருந்து கூப்பிட்டது. ''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்'' சொன்னவர் செல்போனை எடுத்து டிஸ்ப்ளேயைப் பார்த்தார். லைனில் நித்தியானந்தன்.

''ஸார்...''

''சொல்லுங்க...''

''இன்பாவோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கைக்கு வந்தாச்சு ஸார்...''

''ரிப்போர்ட் என்ன சொல்லுது?''

''ஸார்... இன்பா கொலை செய்யப்படலை!''

''தென்...?''

''நேச்சுரல் டெத்! இயற்கையான முறையில் இறந்து போயிருக்கா...''

''எப்படி..? அந்தப் பெண்ணுக்கு என்ன பிராப்ளம்? இந்த சின்ன வயசுல இறந்து போற அளவுக்கு அவளுக்கு என்ன ஹெல்த் பிராப்ளம்?''

''ஸார்..! பி.எம். ரிப்போர்ட்டில் காஸ் ஆஃப் டெத்துக்கு நேராய் டாக்டர்ஸ் மென்ஷன் பண்ணியிருக்கிற வார்த்தை **அப்நார்மல் கிசஸ் ஹார்ட்... அண்ட் சிவியர் மாஸிவ் அட்டாக்...**''

''நித்தியானந்தன்..! போஸ்ட்மார்ட்டம் பண்ணின டாக்டர்கள் யார்?''

''ரெண்டு டாக்டர்கள் ஸார்... ஒருத்தர் கந்தவேல். இன்னொருத்தர் சௌந்திரபாண்டியன்...''

''ரிப்போர்ட் பற்றி டாக்டர்கள் கிட்டே பேசினீங்களா?''

''பேசினேன் ஸார். என்னோட சந்தேகத்தையும் சொன்னேன். ரெண்டு டாக்டர்ஸுமே தீர்மானமாய் இது மர்டராய் இருக்க வாய்ப்பே இல்லைன்னு சொல்லிட்டாங்க...''



''ஓ.கே..! டாக்டர்ஸ் அப்படிச் சொல்லும் போது நாம என்ன பண்ண முடியும்?''

''ஸார்..! டாக்டர்ஸ் சொன்னதை நாம ஏத்துக்கிட்டோம். ஆனா அந்த ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த பெண்களும் சத்தியவதியும் ஒத்துக்கலை. 'இன்பாவுக்கு எந்த ஒரு ஹார்ட் பிராப்ளமும் இருந்தது இல்லை. அவ இந்த சின்ன வயசில் இயற்கையாய் இறந்துபோக எந்த வாய்ப்பும் இல்லை. இன்பா ஏதோ ஒரு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இருக்கணும்'னு சொல்லி, ஹாஸ்பிட்டலுக்கு முன்னாடி இருக்கிற ரோட்ல உட்கார்ந்து மறியல் பண்ணிட்டு இருக்காங்க ஸார்...''

''இருக்கிற பிரச்னைகள் போறாதுன்னு இது வேறவா..? நீங்க அவங்களைக் கன்வின்ஸ் பண்ணலையா?''

''பண்ணினேன் ஸார். பட்... அவங்க தங்களோட கோரிக்கையில் அடமெண்ட்டா இருக்காங்க. கன்வின்ஸ் ஆகலை...''

''சரி... நான் இப்போ ஸ்பாட்டுக்கு வர்றேன்!'' சொன்னவர் செல்போனை அணைத்துவிட்டு அனல் கலந்த பெருமூச்சோடு கமிஷனரிடம் இன்பாவின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டைப் பற்றிச் சொல்ல, அவர் எரிச்சலாய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

''போங்க... போய் எதையாவது பண்ணுங்க..! இனிமே என்னை மீட் பண்றதாயிருந்தா விஷயம் பாஸிட்டிவ்வாய் இருந்தா மட்டும் வாங்க... இல்லேன்னா வரவேண்டாம். ஒரு விஷயமும் உருப்படியாய் இல்லை...''

''ஸாரி ஸார்..!'' தலைக்கு தொப்பியைக் கொடுத்த பரணிகுமார் கமிஷனருக்கு மறுபடியும் ஒரு சல்யூட்டைக் கொடுத்துவிட்டு அறையினின்றும் வெளிப்பட்டார். 'நடக்கின்ற சம்பவங்களுக்கெல்லாம் எது காரணமாய் இருக்க முடியும்?' யோசிப்போடு நடந்தவரை வெளியே மரத்துக்குக் கீழே காத்திருந்த பத்திரிகை நிருபர்கள் பாய்ந்து வந்தார்கள். மைக்குகள் அவர் முன்பாய் நீண்டன.

''ஸார்... அந்த **'ஆப்பிள் பெண்'** எங்கே

இருக்கான்னு ட்ரேஸ் பண்ணிட்டீங்களா..?''

''இல்லை...'' பரணிகுமார் நடந்து கொண்டே பேசினார்.

''அந்த இன்பா எப்படி இறந்தாள்?''

''தெரியாது...''

''ஊத்துக்குளி கல்லுக்குழியில் செத்துக் கிடந்த அந்தக் கிழவி யாரு?''

''தெரியாது...''

''சத்தியவதியோட செல்போன் விவகாரம் என்னாச்சு?''

''தெரியாது...''

''என்ன ஸார் இது..! எந்தக் கேள்வியைக் கேட்டாலும் தெரியாது, தெரியாதுன்னு சொல்லிட்டிருக்கீங்க. கேஸ் சம்பந்தமாய் ஏதாவது சொன்னாத் தானே ஸார் பரபரப்பா ஏதாவது நியூஸ் போட முடியும்..?''

''பரபரப்பாய் நீங்க நியூஸ் போடறதுக்காக நான் ஏதாவது ஒண்ணைச் சொல்ல முடியுமா? எல்லாரும் போய்ட்டு, ரெண்டு நாள் கழிச்சு வாங்க. அந்த கேஸ் பத்தின எல்லா விபரங்களையும் சொல்றேன். இப்ப கூட்டம் போட்டு டிஸ்டர்ப் பண்ணாமே போயிடுங்க...''

பரணிகுமார் போட்ட சத்தத்தில் எல்லோரும் கலைந்துபோக, 'பஞ்ச தந்திரம்' பத்திரிக்கையின் நிருபர்களான திரிவேணியும் மணிபாரதியும் தயக்கத்தோடு நின்றார்கள்.

''என்ன... உங்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னேன். காதுல விழலையா?''

திரிவேணி சொன்னாள். ''ஸார்! நாங்க இங்கே நியூஸ் கேதர் பண்றதுக்காக வரலை. உங்களுக்கு ஒரு நியூஸைக் கொடுத்துட்டுப் போகலாம்னு வந்தோம்...''

''நீங்க நியூஸ் கொடுக்க வந்தீங்களா?''

''ஆமா...''

''என்ன நியூஸ்..?''

''ஸார்! ட்ரெய்ன்ல வரும்போது காணாமல் போனதாய் சொல்லப்படுகிற பெண் முழுமதி பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி எங்க பத்திரிகையின் எடிட்டர் சுந்தரேசனுக்கு ஒரு லெட்டர் போட்டிருக்கா. இன்னிக்கு காலையில் ஆபீஸுக்குப் போனபோதுதான் எடிட்டர் இந்த விஷயத்தைச்



சொல்லி அந்த லெட்டரையும் காட்டினார்...''

''அது என்ன லெட்டர்?''

திரிவேணி தன் கைப்பையில் பத்திரப்படுத்தி வைத்து இருந்த அந்தக் கவரை எடுத்து பரணி குமாரிடம் நீட்ட, அவர் வாங்கிப் பிரித்துப் பார்த்தார்.

தமிழில் டைப் செய்யப்பட்ட கடிதம் அது. படித்தார்.

'அன்புக்குரிய 'பஞ்சதந்திரம்' பத்திரிகையின் ஆசிரியர் சுந்தரேசன் அவர்களுக்கு,

வணக்கம். நான் சென்னையைச் சேர்ந்தவள். என் பெயர் முழுமதி. முழுமதி என்ற என் பெயரைப் படித்ததுமே நான் அழகாக இருப்பேன் என்று கற்பனை செய்து கொள்ள வேண்டாம். நான் அழகாக இருக்க மாட்டேன். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பதால் என்னைப் பெற்றவர்கள் எனக்கு முழுமதி என்று பெயரிட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டார்கள். இப்போது சந்தோஷப்பட அவர்களும் உயிரோடு இல்லை. நான் 'ஷைனிங் ஸ்டார்ஸ்' என்ற மெட்ரிகுலேஷன் பள்ளியில் மேத்ஸ் டீச்சராய் பணியாற்றி வருகிறேன். பள்ளிக்கரணையில் எனக்கு வீடு. சரி! என் சொந்தக் கதை போதும். நான் கடிதத்தில் சொல்ல வந்த விஷயத்துக்கு வருகிறேன். எனக்கு உங்களுடைய பத்திரிகை பிடிக்கும். எந்தக் கட்சியின் வாலையும் பிடித்துக் கொள்ளாமல், ஆளும் கட்சிக்கு ஜால்ரா தட்டாமல் நடுநிலைமையோடு நின்று நீங்கள் சொல்லும் கருத்துக்கள் எனக்கு ரொம்பவே பிடிக்கும். அதிலும் **'தமிழகத்தின் கரும்புள்ளிகள்'** என்ற தலைப்பில் நீங்கள் ஞாயிறுதோறும் எழுதி வரும் கட்டுரைத் தொடர் அருமையிலும் அருமை. அந்தப் பகுதியில் ஒழுக்கமில்லாத அரசியல் தலைவர்களையும், சினிமா நடிகர்களையும், பெரிய தொழில் அதிபர்களையும் பெயர்களைக் குறிப்பிடாமல் சாடும் அழகே அழகு. அந்தக் கட்டுரையைப் படித்து அதில் சம்பந்தப் பட்டவர்கள் தங்களைத் திருத்திக் கொள்கிறார்களோ இல்லையோ... மற்றவர்கள் எந்த தப்பான ஒரு வழிக்கும் போகாமல் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ நினைப்பார்கள். இந்த விஷயத்தில் நானும் உங்களுக்கு ஒரு வகையில் உதவி செய்யலாம் என்று எண்ணுகிறேன். என் உதவி உங்களுக்கு தேவைப்படுமா என்று எனக்குத் தெரியவில்லை. நான் உங்களை சந்திக்க விரும்புகின் றேன். நீங்கள் என்னை சந்திக்க விருப்பப்பட்டால் நான்

பணிபுரியும் பள்ளி முகவரிக்கு கடிதம் எழுதவும். உங்களிடம் இருந்து கடிதம் வராத பட்சத்தில் உங்களுக்கு என் உதவி தேவையில்லை என்று நினைத்து நானும் என்னுடைய விருப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொள்வேன். ஒரு வார காலத்துக்குள் உங்களிடம் இருந்து பதிலை எதிர்பார்க்கின்றேன்.

இப்படிக்கு, உங்கள் பத்திரிகையின் தீவிர வாசகி,
முழுமதி.'

பரணிகுமார் கடிதத்தை முழுவதுமாய்ப் படித்து விட்டு கேஸில் ஒரு வெளிச்சம் கிடைத்த சந்தோஷத்தில் திரிவேணியையும், மணிபாரதியையும் ஏறிட்டார்.

''இந்தக் கடிதம் எத்தனை நாளைக்கு முன்னாடி வந்ததாய் சொன்னீங்க..?''

''பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி அந்த முழுமதி எங்க பத்திரிகையின் ஆசிரியர் சுந்தரேசனுக்கு லெட்டர் போட்டிருக்கா ஸார். ஆசிரியர் இந்தக் கடிதத்தைப் படிச்சுட்டு அந்த முழுமதிக்கு பதில்போட விருப்பம் இல்லாமே மேஜை மேல் அப்படியே வெச்சுட்டு இருந்திருக்கார். இன்னிக்குக் காலையில் நாங்க வழக்கமாய் ஆசிரியரைப் பார்த்து எடிட்டோரியல் சம்பந்தமாய் பேசப் போனபோது ட்ரெய்னில் காணாமல் போன முழுமதியைப் பற்றிச் சொன்னோம். அவர் பதட்டமாகி மேஜை மேல் இருந்து ஒரு கடிதக் கட்டை எடுத்து, அதிலிருந்து இந்தக் கடிதத்தை தேடிக் கொடுத்தார். நாங்க லெட்டரைப் படிச்சுப் பார்த்தோம். காணாமல் போன முழுமதிதான் இந்த லெட்டரை எழுதியிருக்கா என்ற முடிவுக்கு வந்து உங்களை உடனே பார்க்க வந்தோம்...''

பரணிகுமார் கடிதக் கவரைத் திருப்பி அதில் விழுந்து இருந்த தபால் முத்திரையைப் பார்த்தார். பதினைந்து நாட்களுக்கு முன்பு இருந்த தேதியும், பள்ளிக்கரணை P.O. என்ற எழுத்துக்களும் தெளிவாய் தெரிந்தன.

''உங்க பத்திரிகையின் ஆசிரியர் சுந்தரேசன் ஏன் முழுமதிக்கு பதில் லெட்டர் போடலை?''

''இதே கேள்வியை ஆசிரியர் கிட்டே கேட்டோம் ஸார்...''



''அவர் என்ன சொன்னார்?''

''அந்தப் பொண்ணு கடிதம் எழுதின முறையும் அவள் பயன்படுத்திய வாசகங்களும் எனக்குப் பிடிக்கலை. 'விருப்பம் இருந்தால் கடிதம் எழுதவும்... ஒரு வாரத்திற்குள் கடிதம் எழுதவும்' போன்ற வரிகள் ஏதோ கட்டளையிடுகிற தொனியில்இருந்ததால் அந்தப் பெண்ணுக்கு கடிதம் எழுத விரும்பலைன்னு சொன்னார்.''

''உங்க பத்திரிக்கையில் 'தமிழகத்தின் கரும் புள்ளிகள்' என்ற தலைப்பில் கட்டுரை வந்துட்டு இருக்கிறதாய் அந்தப் பெண் முழுமதி குறிப்பிட்டு இருக்கா... அது எதுமாதிரியான கட்டுரை?''

''ஸார்... அது வந்து... தமிழ்நாட்டில் இருக்கிற ஒழுக்கம் இல்லாத சில விஐபிக்களின் நிஜ முகங்களை உரித்துக் காட்டுகிற ஒரு கட்டுரை. அந்தக் கட்டுரையை எங்க ஆசிரியர்தான் 'ஜடாயூ' என்கிற புனை பெயரில் எழுதிட்டு வர்றார். இந்தக் கட்டுரைக்கு வாசகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு..! அந்தக் கட்டுரையைத்தான் பாராட்டியிருக்கா முழும்தி. பாராட்டியதோடு இல்லாமே 'இந்த விஷயத்தில் நானும் உங்களுக்கு ஒருவகையில் உதவி செய்யலாம்ன்னு நினைக்கிறேன்'னு லெட்டர்ல மென்ஷன் பண்ணியிருக்கா''.

''அதை வெச்சு பார்க்கும் போது முழுமதியும் யாரோ ஒரு வி.ஐ.பி.யைப் பற்றின தகவல்களை உங்க எடிட்டர்கிட்டே சொல்ல நினைச்சு இருக்கலாம் இல்லையா?''

''மே...பி...ஸார்..! எங்களோட கெஸ் ஒர்க்கும் அதுதான் ஸார்...''

''முழுமதியோட எண்ணம் அதுவாயிருந்தால் அவ காணாமல் போனதுக்கும் அந்த வி.ஐ.பி. யே கூட காரணமாய் இருக்கலாம். அந்த வி.ஐ.பி. யார்ன்னு கண்டுபிடிச்சா இந்த கேஸை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துடலாம்.'' பரணிகுமார் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சப்-இன்ஸ்பெக்டர் தமிழரசன் மரத்தடியில் பைக்கை நிறுத்திவிட்டு வேக நடையில் பக்கத்தில் வந்தார். சல்யூட்டை பதித்துவிட்டு ''ஸார்...! ஒரு முக்கியமான விஷயம்...'' என்றார்.

''என்ன...?'' என்றவர் திரிவேணியையும் மணி பாரதியையும் பார்க்க- அவர்கள் ''நாங்க வர்றோம்

ஸார்'' என்று சொல்லி நகர்ந்து போனார்கள்.

பரணிகுமார், தமிழரசனை மறுபடியும் பார்த்தார்:

''சொல்லுங்க... தமிழரசன்...''

''ஸார்..! பெண் அரிமா சங்கத் தலைவி சத்தியவதி வீட்ல கண்டு எடுக்கப்பட்ட செல்போனில் இருந்த சிம்கார்டு யாரோடதுன்னு மொபைல் கம்பெனி ட்ரேஸ் பண்ணிக் கொடுத்துட்டாங்க ஸார்.''

''எனிட்...? யாரோட சிம்கார்டு அது..?''

''அதுவும் ஒரு பொண்ணுதான் ஸார். பேரு மணிமாலா. ஒரு கம்பெனியில் ரிசப்ஷனிஸ்டாய் வேலை பார்த்த அந்தப் பொண்ணு இப்ப உயிரோடு இல்ல ஸார்...'' தமிழரசன் சொன்னதைக் கேட்டு பரணிகுமார் அதிர்ந்தார்.

''ஏ... ஏன்... என்னாச்சு?''

''மர்டர் ஸார். போன மாசம் டாடாபாத் ரெண்டாவது குறுக்குத் தெருவில் ஒரு தோழியைப் பார்க்கிறதுக்காக ராத்திரி ஒன்பது மணி அளவில் நடந்து போய்ட்டு இருக்கும்போது அடையாளம் தெரியாத ஒரு நபரால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கா ஸார்.''

''எஸ்...எஸ்... இப்ப ஞாபகத்துக்கு வருது. க்ரைம் அக்கரன்ஸ் ஃபைலில் அந்தக் கேஸைப் பற்றி படித்த ஞாபகம் இருக்கு...''

''கொலையாளி யார்ன்னு இதுவரைக்கும் கண்டுபிடிக்க முடியாமே டிபார்ட்மெண்ட் திணறிட்டு இருக்கு ஸார்!''

''மணிமாலாவோட செல்போன் சிம்கார்ட் சத்தியவதியின் செல்போனுக்குள் இருக்க என்ன காரணம்? மணிமாலாவுக்கும் சத்தியவதிக்கும் என்ன தொடர்பு?''

''ஸார்... நான் இப்ப மணிமாலாவோட வீட்டுக்குப் போய் அவளோட பேரண்ட்ஸ்கிட்ட பேசிட்டுதான் ஸார் வர்றேன். சத்தியவதியோட பேரைச் சொல்லி 'உங்களுக்கு அந்த அம்மாவை தெரியுமா'ன்னு கேட்டதுக்கு தெரியாதுன்னு சொல்லிட்டாங்க.''

''ஒரு வேளை சத்தியவதிக்கு மணிமாலா யார் என்கிற விபரம் தெரிஞ்சு இருக்கலாம். தமிழரசன்! நீங்க இப்ப ஃப்ரீதானே?''

''ஃப்ரீதான் ஸார்''

''சரி, வாங்க என்கூட! அந்த சத்தியவதியும் ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த ஆறு பெண்களும்



இன்பாவோட மரணத்தைக் காரணம் காட்டி ஹாஸ்பிட்டலுக்கு முன்னால் ரோடு மறியல் பண்ணிட்டு இருக்காங்களாம். அந்தப் பிரச்னையைப் போய் சால்வ் பண்ணிட்டு அப்படியே சத்தியவதிகிட்டே மணிமாலாவைப் பற்றி கேட்டுப் பார்க்கலாம்.''

இருவரும் புறப்பட்டார்கள்.

ஜீப்பில் சில நிமிஷப் பயணம்.

ஹாஸ்பிட்டல் வந்தது. ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் நெருக்கியடித்துக் கொண்டு நின்றிருக்க, ரோட்டின் மையத்தில் சத்தியவதியும், ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த ராதிகா, ஆர்த்தி, நீரஜா, பூமா, ஓமனா, வஹிதாவும் படுத்துக் கொண்டு கோஷம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

*''இன்பாவின் மரணத்தில் நீதி வேண்டும்!''*

*''படுகொலையை மறைக்காதே! பாவத்துக்குத் துணைபோகாதே!''*

*''வேண்டும்... வேண்டும்!''*

*''உண்மையான போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வேண்டும்!''*

பரணிகுமார் ரோட்டோரமாய் காரை நிறுத்தி விட்டு மறியல் செய்பவர்களிடம் ஓடினார். சத்தியவதியிடம் குனிந்து பேசினார்.

''இதோ பாருங்க மேடம்...! நீங்க படிச்சவங்க. டீஸண்டான ஃபேமிலியைச் சேர்ந்தவங்க. பிரச்னை எதுவாக இருந்தாலும் இப்படியெல்லாம் ரோட்ல படுத்துகிட்டு மறியல் பண்ணக்கூடாது. வாங்க... பேசித் தீர்த்துக்கலாம்''

சத்தியவதி படுத்துக்கொண்டே சீறினாள்.

''என்னது...! பேசித் தீர்த்துக்கிறதா..? பேசித் தீர்க்க இது என்ன போனஸ் பிரச்னையா? உயிர் பிரச்னை ஸார்... உயிர் பிரச்னை!''

பக்கத்தில் படுத்து இருந்த ராதிகாவும் தன் பங்குக்கு சீறினாள். ''இன்பாவுக்கு எந்தவிதமான ஹெல்த் பிராப்ளமும் இல்லை. அஞ்சு வருஷமாய் உயிர்க்கு உயிராய் பழகிட்டு வர்றோம். அவ மருந்து மாத்திரை சாப்பிட்டு நான் பார்த்தது இல்லை. அவளோட மரணம் எப்படி இயற்கையான மரணமாய் இருக்க முடியும்...? போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் எதற்காக குளறுபடி..? யாரைக் காப்பாற்ற இவ்வளவு பெரிய பொய்?''

பரணிகுமார் பெருமூச்சொன்றை வெளியேற்றி விட்டுப் பேசினார் "நீங்க இன்பாவோட மரணத்தை தப்பான ஒரு கோணத்திலேயே பார்த்துட்டு இருக்கீங்க. அவளோட உடலை போஸ்ட் மார்ட்டம் செய்த ரெண்டு டாக்டர்களும் ஜென்யூன் பர்சன்ஸ். அவங்க கொடுத்த பி.எம். ரிப்போர்ட்களை வைச்சு எவ்வளவோ கொலையாளிகளை ட்ரேஸ் பண்ணி கைது பண்ணியிருக்கோம். அந்த டாக்டர்ஸ் கொடுத்த பி.எம். ரிப்போர்ட்டைப் பத்தி உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா ரீ - போஸ்ட்மார்ட்டம் பண்ணனும்ன்னு கோர்ட்டுக்குப் போங்க. நீங்க எந்த டாக்டர்களை சொல்றீங்களோ அவங்களே போஸ்ட் மார்ட்டம் பண்ணட்டும்."

பரணிகுமார் பேசிக் கொண்டிருக்கும் போதே நீரஜா என்ற அந்தப் பெண் வீறிட்டாள்.

"ரா...ரா... ராதிகா...! பூமாவைப் பாரு.... எந்திரிச்சு உட்கார்ந்து தலையை ரெண்டு கையாலும் பிடிச்சுட்டு என்னமோ மாதிரி பார்க்கிறா..."

எல்லோருடைய பார்வைகளும் சரேலென்று திரும்பி அந்தப் பெண் பூமாவின் மேல் நிலைத்தது.

பூமா இரண்டு கைகளாலும் தலையை அழுத்திப் பற்றிக் கொண்டு வாயைத் திறந்து ஏதோ பேச முயன்றாள். முடியவில்லை.

ராதிகா அவளைப் பதட்டமாய் தாங்கிப் பிடித்தாள். "பூ...பூமா..! ஏன்... இப்படி... தலையைப் பிடிச்சுட்டிருக்கே..? உன் உடம்புக்கு என்ன பண்ணுது..?"

பூமா மூச்சுத்திணறலோடு பேச முயற்சித்த விநாடி அவளுடைய மூக்குத் துவாரங்களில் இருந்து இரண்டு துளி ரத்தம் மெல்ல எட்டிப் பார்த்தது. அதைத் தொடர்ந்து கடைவாயில் ரத்தம் ஒரு நூலிழை மாதிரி வழிய- ராதிகா வீறிட்டாள்.

"பூமா...ஆ...ஆ...ஆ...ஆ..!"

பரணிகுமார் வேகமாய் பக்கத்தில் வந்தார். "பூமாவை ஹாஸ்பிட்டலுக்கு கொண்டு போயிட லாம்..! தூக்குங்க!"

பூமாவின் தோள்பட்டைகளைப் பிடித்து தூக்க முயன்ற விநாடி அந்த விபரீதம் நேர்ந்தது.

பூமாவின் உடம்புக்குள் 'ப்ளக்' என்று எதுவோ வெடித்தது போல் சத்தம். சத்தம் கேட்ட அடுத்த விநாடியிலிருந்து ரத்தம் அவளுடைய கண், காது,



மூக்கு, வாய் என்று எல்லா உறுப்புகளிலிருந்தும் வேகமாய் ரத்த ஓடைகள் மாதிரி வழிய ஆரம்பித்தது.

**செல்போன் தத்துவம்**



★ புரியாத பிரியம் பிரியும்போது புரியும்.
★ வாழ்க்கையில் சில வாய்ப்புகள் வரும். சில வாய்ப்புகள் வாழ்க்கையைத் தரும்.

டாக்டர்கள் கந்தவேலும், சவுந்திர பாண்டியனும் ஒருமித்த குரலில் தீர்க்கமாய் சொன்னார்கள்.

"ஸார்...! நாங்க... பூமாவை முழுமையாக டெஸ்ட் பண்ணிப் பார்த்துட்டோம். இன்பா எப்படி உடம்பில் இருக்கும் ரத்தம் முழுவதும் வெளியேறி இறந்து போனாளோ அதே மாதிரிதான் பூமாவும் ரத்தம் வெளியேறி இறந்து போயிருக்கா... அளவுக்கு மிஞ்சின ஹைபர்டென்ஷன் காரணமாய் உடம்பில் இருக்கிற ரத்த நாளங்கள் வெடிச்சிருக்கு... அதனால மரணம்."



டாக்டர்களுக்கு எதிரே உட்கார்ந்திருந்த பரணிகுமார் வியர்த்துப் போயிருந்த தன் முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே கேட்டார்.

"டாக்டர்..! போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி இன்பாவோட மரணத்தை இயற்கையான மரணம்ன்னு சொன்னீங்க. அதே மாதிரி பூமாவும் இறந்து போயிருக்கா. ஸோ இது ஏன் கொலைகளாய் இருக்கக்கூடாது?"

"அந்த ரெண்டு பேரும் கொலை செய்யப் பட்டாங்கன்னு போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் சொல்லலையே? இறந்து போன ரெண்டு பேர் உடம்பிலேயும் ரத்தக் காயம் இல்லை. விஷ உணவு சாப்பிட்டதற்கான அடையாளங்களும் இல்லை. எந்த ஒரு ஃபோர்ஸும் அவங்களோட உயிர்களைப் பறிக்காதபோது அதைக் கொலைகள்ன்னு எப்படி சொல்ல முடியும்..?"

"டாக்டர்... ப்ளீஸ்! கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. அடுத்தடுத்து ரெண்டு மரணங் களும் ஒரே மாதிரி நடந்திருக்கிறதால இவைகள் ஏன்

கொலைகளாய் இருக்கக்கூடாதுன்னு வேறு ஒரு கோணத்தில் திங்க் பண்ணிப் பாருங்களேன். ஏன்னா நிலைமை அப்படி..! சத்தியவதியும் 'ரெயின்போ' அமைப்பைச் சேர்ந்த பெண்களும் உச்சகட்ட கோபத்தில் இருக்காங்க. போலீஸ் கமிஷனர்க்கு மேலிடத்திலிருந்து ப்ரஷர். அந்த கோபத்தை அவர் என் மேல காட்டறார். நான் யார் மேலேயும் கோபத்தைக் காட்ட முடியாது. ஸோ... ப்ளீஸ் டூ ஸம்திங் ஃபேவர் மீ..!"

டாக்டர் கந்தவேல் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பேச்சை ஆரம்பித்தார்.

"ஸார்... உங்க நிலைமை எனக்குப் புரியுது. பட் மெடிக்கலி வீ ஆர் ஹெல்ப்லஸ். இருந்தாலும் நீங்க இவ்வளவு தூரம் சொல்றதால நடந்த இறப்புகள் கொலைகளா இல்லையான்னு கண்டு பிடிக்க மெடிக்கல் ரீதியாய் ஒரு வழியிருக்கு. டெல்லியில் இருக்கிற **இண்ட்டர்நேஷனல் மெடிக்கல் சயின்ஸ் ஆஃப் பீரோவில் 'டாக்ஸிகாலஜி'** டிபார்ட்மெண்ட்னு ஒண்ணு இருக்கு. அந்த டிபார்ட் மெண்ட்டோட H.O.D. பேர் அகர்வால். அவரோட செல்போன் நெம்பரை உங்களுக்குத் தர்றேன். அவர் கிட்டே பேசுங்க. நடந்த சம்பவங்களை சொல்லுங்க. அவர் உங்களுக்கு கைடு பண்ணுவார்..." சொன்ன டாக்டர் ஒரு துண்டு சீட்டை எடுத்து அகர்வாலின் செல்போன் நெம்பரை எழுதிக்கொடுத்தார். வாங்கிக் கொண்ட பரணிகுமார் தயக்கமாய்க் கேட்டார்.

"டாக்டர்..! நீங்க சொன்ன அந்த டாக்ஸிகாலஜி ங்கறது விஷங்கள் சம்பந்தப்பட்ட படிப்புதானே?"

"எஸ்..! உலகத்தில் எத்தனை வகையான விஷம் இருக்கிறதோ அத்தனை வகை விஷங்களையும் பற்றி அறிந்து வைத்திருக்கிற ஒரு துறைதான் டாக்ஸிகாலஜி டிபார்ட்மெண்ட். இன்பாவும், பூமாவும் ஒரே மாதிரியாய் இறந்து போனதுக்குக் காரணம் ஏதாவது ஒரு விஷமாகக்கூட இருக்கலாம். நீங்கள் H.O.D. அகர்வாலிடம் பேசிப்பாருங்கள்."

"தேங்க் யூ டாக்டர்..." பரணிகுமார் டாக்டர்களின் கைகளைப் பற்றிக் குலுக்கிவிட்டு அறையினின்றும் வெளிப்பட்டார்.

வராந்தாவில் போடப்பட்டு இருந்த பாலிவினைல் நாற்காலிகளில் கவலையும் கோபமும் கலந்த முகங்களோடு காத்திருந்த சத்தியவதி, ராதிகா,



நீரஜா, ஆர்த்தி, ஓமனா, வஹிதா- ஒரே நேர்க்கோடு மாதிரி எழுந்தார்கள்.

பரணிகுமாரை நோக்கி வந்தார்கள். சத்தியவதி ஆவேசக் குரலில் அனல் தெறிக்கக் கேட்டாள்.

"என்ன சொல்றாங்க அந்த டாக்டர்ஸ்..? அதே பழைய பாட்டுத்தானா..?"

"இல்லை..!. அவங்களுக்கும் இப்போ லேசாய் சந்தேகம்."

"இன்பா, பூமா மரணங்கள் இயற்கையானது இல்லைன்னு ஒத்துகிட்டாங்களா?"

"அவங்க ஒத்துக்கலை..."

"பின்னே..?"

"டெல்லியில் இருக்கிற இண்ட்டர்நேஷனல் மெடிக்கல் சயின்ஸ் ஆஃப் பீரோ- டாக்ஸிகாலஜி டிபார்ட்மெண்ட்டின் H.O.D. அகர்வால் கிட்டே இது பற்றிப் பேசச் சொன்னாங்க..."

"இந்த கண்துடைப்பு வேலையெல்லாம் என்கிட்டே வேண்டாம் ஏ.ஸி. ஸார்."

"நோ...நோ... இது கண்துடைப்பு வேலை இல்லை. சின்சியராய் முயற்சி பண்றோம். இதோ... டாக்டர் எழுதிக் கொடுத்த H.O.D. அகர்வாலின் செல்போன் நெம்பர்...! இப்ப உங்களுக்கு முன்னா டியே அகர்வாலுக்கு போன் பண்ணிப் பேசறேன். அவர் இது விஷயமாய் என்ன சொல்றார்ன்னு பார்ப்போம்." சொன்ன பரணிகுமார், அகர்வாலின் செல்போன் எண்களை தன் செல்போனில் டயல் செய்தார். மறுமுனையில் ரிங்டோன் போய் அடுத்த சில விநாடிகளில் ஒரு ஆண்குரல் கேட்டது.

"எஸ்."

"மிஸ்டர் அகர்வால்?"

"ஸ்பீக்கிங்..."

"ஸார்... அ'யாம் பரணிகுமார். அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ். ஸ்பீக்கிங் ஃப்ரம் தமிழ்நாடு."

"சொல்லுங்கள்... என்ன விஷயம்?"

பரணிகுமார் தெளிவான ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். இன்பாவும், பூமாவும் ஒரே மாதிரியாய் இறந்துபோன சம்பவங்களை விவரித்தார். எல்லாவற் றையும் கவனமாய்க் கேட்டுக் கொண்ட அகர்வால் மறுமுனையில் அதிர்ந்து போனவராய் "திஸ் ஈஸ் ஹைலி பேதடிக்!" என்றார்.

''போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர்கள் அவர்கள் இறந்து போனதை 'நேச்சுரல் டெத்' என்று சொல்கிறார்கள். அப்படித்தானே?''

''ஆமாம்...ஸார்...''

''அந்த ரெயின்போ என்ற அமைப்பில் இருந்த ஏழு பெண்களில் இரண்டு பெண்கள் இப்போது உயிரோடு இல்லை என்பதும், அந்த இரண்டு பேரும் ஒரே மாதிரியாய் இறந்து போனதும் சாதாரண விஷயம் இல்லை. அவர்களோடு பயணம் செய்த முழுமதி என்கிற பெண்ணும் காணாமல் போயிருக்கிறாள். இந்த சம்பவங்களையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது இன்பாவும் பூமாவும் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்கிற முடிவுக்குத்தான் என்னால் வர முடிகிறது.''

''கொலையாளி பக்கத்தில் வராமல் அது எப்படி ஸார் சாத்தியம்?''

''கொலையாளி அந்தப் பெண்களின் உடம்புக் குள்ளேயே ஒளிந்திருந்து காரியத்தை முடித்து இருக்கலாமே?''

''ஸார்... நீங்கள் பேசுவது எனக்குப் புரியவில்லை. கொலையாளி உடம்புக்குள் எப்படி ஒளிந்து இருக்க முடியும்?''

''நான் சொன்ன கொலையாளி நபர் இல்லை!''

''பின்னே?''

''பாய்ஸன்! இன்பாவும், பூமாவும் சாப்பிட்ட உண வில் யாரோ பாய்ஸனைக் கலந்து இருக்கிறார்கள்.''

''அப்படி பாய்ஸன் கலந்து இருந்தால் இரண்டு பேரும் ஒரே நேரத்தில்தானே இறந்து போயிருக்க வேண்டும். இன்பா இன்று அதிகாலையில் இறந்து போனாள். பூமாவோ பல மணி நேரம் கழித்து முற்பகலில் ரோட்டில் உட்கார்ந்து மறியல் செய்யும்போது இறந்து போனாள். இதில் இன்னொரு விஷயம் 'ரெயின்போ' அமைப்பைச் சேர்ந்த ஏழு பெண்களும் நேற்று இரவு ரயில் பயணத்தின் போது உணவு சாப்பிட்டதோடு சரி. ஹோட்டலுக்கு வந்த பிறகும் அவர்கள் எதுவும் சாப்பிடாமல் படுத்துக் கொண்டார்கள். அதிகாலையில் இன்பா இறந்து போன அதிர்ச்சியில் அவர்கள் காலை உணவும் சாப்பிடவில்லை...''

''அப்படியானால் நேற்று இரவு ரயில் பயணத்தின் போது அந்த ஏழு பேர்களும் என்னென்ன உணவு



சாப்பிட்டார்கள் என்று தெரிந்தால்தான் மேற் கொண்டு நாம் பேச முடியும்.''

''ஒரு நிமிஷம் லைனில் இருங்கள் ஸார். அந்தப் பெண்கள் என் பக்கத்தில்தான் இருக்கிறார்கள். கேட்டுச் சொல்கிறேன்.''

''ஓ...கே...! அவர்களிடம் பேசுங்கள். நான் லைனில் காத்து இருக்கிறேன்..!''

பரணிகுமார் செல்போன் பிடித்து இருந்த கையைத் தாழ்த்திக் கொண்டு அந்த ஐந்து பெண்களையும் பார்த்தபடி கேட்டார்.

''நேற்றைக்கு ரயிலில் ஏழு பேரும் என்ன சாப்பிட்டீங்க?''

''புரோட்டாவும் தோசையும்.''

''எந்த ஸ்டேஷன்ல சாப்பிட்டீங்க?''

''ஈரோடு ஸ்டேஷனில்... ட்ரெய்ன் நின்ன போது ஒரு ப்ளாட்பார ஸ்டாலுக்குப் போய், ஃபுட் பாக்கெட்ஸ் வாங்கிட்டு வந்து சாப்பிட்டோம்.''

''அதுக்கப்புறம் வேற எதுவும் சாப்பிடலை?''

''இல்லை...''

பரணிகுமார் பேச்சை முடித்துக் கொண்டு மறுபடியும் செல்போனில் அகர்வாலிடம் பேசினார். ஏழு பெண்களும் ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில் புரோட்டா, தோசை சாப்பிட்ட விபரத்தை சொன்னார். அகர்வால் செவிமடுத்து விட்டு குரல் கொடுத்தார்.

''மிஸ்டர் பரணிகுமார்! நீங்கள் சிரமம் பார்க்காமல் ஒரு வேலை செய்ய முடியுமா?''

''சொல்லுங்கள் ஸார்.''

''இறந்து போன இன்பா, பூமா இரண்டு பேர்களின் உடல்களை போஸ்ட்மார்ட்டம் செய்த டாக்டர்க ளிடம் பேசி உடனடியாய் அந்தப் பெண்களின் இதயப்பகுதியையும், குடல்பகுதியையும் 'ஃபூரோ பாலின்' என்ற திரவத்தில் போட்டு பத்திரமாக டெல்லிக்கு கொண்டு வர முடியுமா...?''

''உடனே புறப்பட்டு வருகிறேன் ஸார்!''

''இன்று இரவுக்குள் வந்து சேர்ந்து விடுவீர்கள் அல்லவா?''

''நிச்சயமாய் ஸார்!'' சொல்லி செல்போனை அணைத்த பரணிகுமார், சத்தியவதியை ஏறிட்டார்.

''இறந்து போன இன்பா, பூமா ரெண்டு பேரோட உடல் உள்ளுறுப்புகளையும் சோதனை பண்றதுக் காக அகர்வால் என்னை டெல்லி வரச்

சொல்லிட்டார். நான் டாக்டர்களிடம் பேசிட்டு உடனே கிளம்பறேன். டெல்லியிலிருந்து நான் வரும்போது உண்மைகளோடு வருவேன். இந்த மரணங்களுக்குக் காரணமாய் இருந்தவங்க யாரும் தப்பிக்க முடியாது!''

சத்தியவதி நிமிர்ந்தாள். ''ஏ.சி. ஸார்! உங்ககிட்டே நாங்க இப்ப பார்க்கிற உறுதி கடைசி வரைக்கும் இருக்கணும்...''

''இருக்கும்..! பை..த...வே... உங்க கிட்டே ஒரு சின்ன என்கொய்ரி...''

''ப்ளீஸ்...''

''மணிமாலா என்கிற பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?''

''மணிமாலாவா..? யாரது..?''

''அவளுக்கு வீடு டாட்டாபாத்தில். ஒரு கம்பெனியில் ரிசப்ஷனிஸ்ட்டா வேலை பார்த்துட்டு இருந்தா.''

''எனக்குத் தெரியாது.''

''உங்களுக்குத் தெரியாதுன்னு நீங்க சொல்றீங்க. ஆனா அவளோட செல்போனில் இருந்த சிம்கார்டு தான் உங்க வீட்ல இருந்த செல்போன்ல இருந்தது.''

''மைகுட்னஸ்! எப்படி...?''

''அதுதான் புதிர்...''

''என்ன புதிர்..? அந்த மணிமாலாகிட்டேயே கேட்டுட வேண்டியதுதானே?''

''கேட்க முடியாது...''

''ஏன்..?''

''அவதான் உயிரோடு இல்லையே!''

''என்னது? உயிரோடு இல்லையா?''

''எஸ்! போன மாசம் டாடாபாத் ரெண்டாவது குறுக்குத் தெருவில் ஒரு தோழியைப் பார்க்கிறதுக்காக ராத்திரி ஒன்பது மணி அளவில் மணிமாலா நடந்து போய்ட்டு இருக்கும்போது அடையாளம் தெரியாத ஒரு நபரால் குத்திக் கொலை செய்யப் பட்டிருக்கா. கொலையாளி யார்ன்னு இதுவரைக்கும் கண்டுபிடிக்க முடியலை..''

''கடவுளே!'' சத்தியவதி முகம் வெளுத்து தன் நெற்றியை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு அப்படியே உட்கார்ந்தாள்.

''என்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னே தெரியலையே! இந்த 'ரெயின்போ' சமூக நல தொண்டு அமைப்பைச் சேர்ந்த பெண்களுக்கு ஒரு பாராட்டு



விழா நடத்த நினைச்சேன். அதுக்காகத்தான் அவங்களை சென்னையிலிருந்து கோவைக்கு வரவழைச்சேன். அது தப்பா..? யார், எதுக்காக இப்படியெல்லாம் பண்ணிட்டு இருக்காங்கன்னு தெரியலையே..!''

''மேடம்... டோண்ட் வொர்ரி... பி.. ரிலாக்ஸ். ஒரு ரெண்டு நாள் பொறுங்க. எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்துடலாம்.'' பரணிகுமார் பேசிவிட்டு வராந்தாவைக் கடந்து வெளியே வந்தார். 'டாக்டர்கள் கந்தவேலையும் சௌந்தர பாண்டியனையும் பார்த்து அகர்வாலின் கோரிக்கையை சொல்ல வேண்டும். நான் சத்தியவதியிடம் பேசிக் கொண்டிருந்த போது இந்த வழியாகத்தான் போனார்கள். இப்போது எங்கே இருப்பார்கள்? எதிரே வரும் அந்த நர்ஸிடம் விசாரிக்கலாமா?'

இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன் வாசற்படிகள் ஏறிஒரு துப்பாக்கித் தோட்டாவைப் போல் வேகமாய் வந்து கொண்டிருந்தார். குழப்பமான பார்வையோடு பரணிகுமார் நின்றார்.

''ஸார்!'' சல்யூட்டோடு எதிரில் வந்து நின்ற நித்தியானந்தத்தை வியப்போடு ஏறிட்டார்.

''எனிதிங் இம்பார்ட்டன்ஸ்?''

''எஸ்...ஸார்''

''சொல்லுங்க...''

''சென்னையில் இருக்கும் 'ஷைனிங் ஸ்டார்ஸ்' மெட்ரிகுலேஷன் ஸ்கூலில் முழுமதி மேத்ஸ் டீச்சராய் வேலை பார்க்கிறதாய் நமக்குக் கிடைச்ச தகவல் பொய் ஸார்.''

''பொய்யா?''

''ஆமா... ஸார்! நாம கொடுத்த இன்ஸ்ட்ரக்ஷன் படி சென்னை க்ரைம்ப்ராஞ்ச் இன்ஸ்பெக்டர் முகுந்தன் நேரிடையாய் அந்தப் பள்ளிக்கு போய் விசாரணை பண்ணியிருக்கார். முழுமதி என்கிற பேர்ல வேற ஒரு பெண் அங்கே மேத்ஸ் டீச்சராய் ஒர்க் பண்ணிட்டு இருந்திருக்கா.''

''மைகுட்னஸ்! அப்படீன்னா ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த பெண்கள்கிட்டே காணாமல் போன முழுமதி, தான் ஒரு மேத்ஸ் டீச்சர்ன்னு பொய் சொல்லியிருக்கா?''

''எஸ்...ஸார்..!'' என்று சொன்ன நித்தியானந்தம் குரலைத் தாழ்த்தினார். ''ஸார்... முழுமதி சொன்ன இந்த பொய்யை வெச்சு பார்க்கும்போது நடந்த சம்பவங்க

ளுக்கெல்லாம் அவதான் காரணமாய் இருக்கனும்...''

''அவ காணாமே போயிருக்காளே...?''

''அவ காணாமே போகலை ஸார். அவளே தலைமறைவாயிட்டா. தன்னோட ரத்தம் தோய்ந்த உடைகளை ஊத்துக்குளிக்குப் பக்கத்தில் இருக்கிற கல்லுக்குழியருகே போட்டு தனக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டமாதிரி சீன் க்ரியேட் பண்ணியிருக்கா... அந்தக் கல்லுக்குழியில் கிடந்த கிழவியோட டெட்பாடியைக் கைப்பற்றி இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருக்கிற இன்ஸ்பெக்டர் அருள் கொஞ்ச நேரத்துக்கு முந்தி எனக்கு போன் பண்ணிப் பேசினார். அந்தக் கிழவியோட பேரு வீரம்மா. ஆடுகளை மேய்ப்பவளாம். பார்வை குறைபாடு வேறு உண்டாம். ஆடுகளை மேய்ச்சிட்டு வரும் போது கல்லுக்குழியில் விழுந்து இறந்து இருக்க லாம்ன்னு சொன்னார். மற்றபடி கிழவியோட மரணத்துக்கும் முழுமதிக்கும் எந்த தொடர்பும் இருக்க வாய்ப்பில்லைங்கிறது அவரோட கருத்து.''

கொஞ்சம் யோசனையோடு நெற்றியைத் தேய்த்த பரணிகுமார் ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

''அப்போ.. அந்த ட்ரெய்னில் வந்த மீசைக்கார பேர்வழி யாரு..?''

''அவன் முழுமதியோட பார்ட்னராய் இருக்கலாம் ஸார்...''

''மீசைக்காரன் அவளை டீஸ் பண்ணி இருக்கானே?''

''அது நடிப்பாய் இருக்கலாமே ஸார்? ரெண்டு பேரும் ஏதோ திட்டத்தோடுதான் ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த பெண்களோடு ட்ராவல் பண்ணியிருக்காங்க. இன்பா, பூமா ரெண்டு பேரும் இறந்து போனதுக்குக் கூட அவங்கதான் காரணமாய் இருக்க முடியும்.''

''மோட்டிவேஷன்?''

''வி ஹேவ் டு ஃபைண்ட் அவுட் ஸார்!''

''ஓ.கே.. நித்தியானந்தன்...! நான் ஒரு முக்கிய மான விஷயமாய் இன்னிக்கு டெல்லி கிளம்பறேன். நீங்க இன்வெஸ்டிகேஷனை கண்டினியூ பண் ணுங்க. ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை என்னை செல்லில் காண்டாக்ட் பண்ணிப் பேசுங்க..''

''எஸ்...ஸார்.''

''அப்புறம்... அந்த மணிமாலா மேட்டர்?''



''நான் பார்த்துக்கிறேன் ஸார்!''

''மணிமாலா யார்ன்னே தெரியாதுன்னு சத்தியவதி சொல்லிட்டாங்க. பட் மணிமாலாவோட சிம்கார்டு சத்தியவதி கிட்டயிருந்த செல்போனுக்கு எப்படி போச்சுன்னு தெரியலை.. சத்தியவதிக்கு சொந்த மான செல்போன் முழுமதிகிட்டே எப்படி போச்சுன் னும் தெரியலை. இந்த கேஸ்ல எந்த இடத்தைத் தொட்டாலும் குழப்பமாவேயிருக்கு..''

''ஸார்...! நீங்க டெல்லி போயிட்டு எப்ப வருவீங்க..?''

''நான் போறது ஒரு முக்கியமான வேலைக்காக. அந்த வேலை எப்ப முடியும்ன்னு எனக்குத் தெரி யாது. அந்த வேலை முடிஞ்சதும் உங்களுக்கு போன் பண்றேன். இப்ப நான் டாக்டர்களைப் பார்க்கணும்...!''

பரணிகுமார் சொல்லிவிட்டு நடந்தார் வேக வேகமாய்.

**செல்போனில் வந்த ஒரு தெளிவான குழப்பச் செய்தி! நிறுத்தி நிதானமாய் படியுங்கள்!**

நேசித்தவர்களை நேசிக்காமல் விட்டால்
நேசித்தவர்கள் நம்மை யோசித்து, பின்
நேசிக்காமல் விட்டுவிடுவார்கள்.
எனவே–
நேசித்தவர்களை யோசிக்காமல் நேசிப்போம்!

டெல்லி.

பாதுஷா ரோட்டின் கடைசியில் இருந்த இண்ட்டர்நேஷனல் மெடிக்கல் சயின்ஸ் ஆஃப்



பீரோவின் பிரம்மாண்டமான கட்டிடத்தைப் பார்த்துப் பிரமித்துப் போன பரணிகுமார், வரவேற்பறையில் இருந்த பெண்ணைப் பார்த்துப் பேசி புரபசர் அகர்வாலின் டாக்ஸிகாலஜி டிபார்ட்மெண்டைக் கண்டு பிடித்து அவரைப் பார்க்க அரைமணி நேரம் பிடித்தது.

அகர்வால் ரிடையர்மெண்ட் வாங்கப் போகும் பக்குவத்தில் இருந்தார். ஆனால் பேச்சில்- சுறுசுறுப் பில் ஒரு இளைஞனைக் கண்ணுக்கு முன்பாய் கொண்டு வந்து காட்டினார்.

பரணிகுமார் கொண்டுவந்த ஸ்பெசிமன்

க்ரூப்ஸை உடனடியாய் லேபுக்கு அனுப்பிவிட்டு தன் செல்போன் மூலமாக யார்க்கோ கட்டளையையும் பிறப்பித்தார்.

"மிஸ்டர் கோர்தன்..! இது ஒரு அவசரமான பணி. சமூக நல அமைப்பைச் சேர்ந்த ஏழு பெண்களில் இரண்டு பெண்கள் அப் நார்மலாய் ரத்தம் சிந்தி இறந்து போயிருக்கிறார்கள். அந்த உடல்களை போஸ்ட்மார்ட்டம் செய்த டாக்டர்கள் அதை இயற்கையான மரணம் என்று குறிப்பிட்டு ரிப்போர்ட் கொடுத்துள்ளார்கள், அந்த ரிப்போர்ட் உண்மையா பொய்யா என்று கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது. இறந்து போன பெண்களின் உள்ளுறுப்புகளின் மாதிரிகளை சோதனைக்கு உட்படுத்துங்கள்..."

மறுமுனையில் பேசிய நபர் ஏதோ சந்தேகம் ஒன்றைக் கேட்க, அகர்வால் சற்றே கோபத்துடன் சொன்னார்.

"எஸ்..! முதலில் பெர்ரிலியம் டெஸ்ட். பிறகு நெக்கோ நைட்... இறுதியாய் டார்-டர் எமிடிக் டெஸ்ட். இந்த மூன்று டெஸ்ட்கள் செய்தாலே போதும்... அது இயற்கையான மரணமா இல்லையா என்பது தெரிந்துவிடும். எனக்கு ஒரு மணி நேரத்திற்குள் ரிப்போர்ட் வேண்டும்." பேசிவிட்டு செல்போனை அணைத்த அகர்வால் பரணிகுமாரை ஏறிட்டார்.

"மிஸ்டர் பரணிகுமார்..! இன்னும் ஒருமணி நேரத்திற்குள் லேபிலிருந்து ஸ்பெசிமன் ரிப்போர்ட் வந்துவிடும். ரிப்போர்ட் இயற்கை மரணம் என்று சொல்லிவிட்டால் பிரச்னையில்லை. அதற்கு மாறான ரிப்போர்ட் வந்துவிட்டால் இந்த பிரச்னை பூதாகரமாய் உருவெடுத்து விடும்."

பரணிகுமார் நெற்றியில் அதிர்ச்சிக் கோடுகள் வரிவரியாய் விழுந்தன.

"ஸார்..! நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை."

"புரியும்படியாகவே சொல்லிவிடுகின்றேன். வரப்போகிற லேப் ரிசல்ட் அந்த இரண்டு பெண்களின் மரணத்தை விஷத்தின் காரணமாய் ஏற்பட்ட மரணம் என்று சொல்லிவிட்டால் 'ரெயின்போ' அமைப்பில் இருக்கின்ற மற்ற ஐந்து பெண்களின் உயிர்க்கும் ஆபத்து இருக்கின்றது என்று அர்த்தம்.



ஏனென்றால் ட்ரெய்னில் வரும் போது ஏழு பேரும் ஒரே மாதிரியான உணவைத்தான் சாப்பிட்டிருக்கிறார்கள். எனவே அவர்களின் உடம்பிலும் விஷம் கலந்து இருக்கலாம். அந்த விஷம் எந்த நேரத்திலும் தன்னுடைய வேலையைக் காட்டலாம்."

பரணிகுமாரின் நெற்றி வியர்வையில் பிசுபிசுத்துப் போயிற்று.

"ஸ..ஸார்...! நீங்கள் சொல்வது உண்மையா..?"

"நூறு சதவீத உண்மை!"

"ஸார்... நீங்கள் சொல்வது உண்மையாய் இருக்கும் பட்சத்தில்- அவர்கள் சாப்பிட்ட உணவில் விஷம் கலந்து இருந்தால் ஏழு பேர்க்கும் ஒரே நேரத்தில்தானே விஷம் வேலை செய்து உயிரைப் பறிக்க வேண்டும்? இன்பா இறந்து போனதுக்கும் பூமா இறந்து போனதுக்கும் இடையில் பலமணி நேர வித்தியாசம். இவ்வளவு பெரிய வித்தியாசத்திற்கு என்ன காரணம்?"

"அதுக்கான காரணத்தையும் அந்த லேப் ரிப்போர்ட் சொல்லிவிடும்."

"லேப் ரிப்போர்ட் எப்போது கைக்கு கிடைக்கும் ஸார்..?"

"எப்படியும் ஒரு மணி நேரமாகிவிடும். அது வரைக்கும் நாம் ஒரு காப்பி சாப்பிட்டுக் கொண்டே ஏதாவது பேசிக் கொண்டு இருப்போமா...?"

பரணிகுமார் அடிவயிற்றில் புரண்ட திகிலோடு தலையாட்டி வைத்தார்.

**செல்போன் SMSல் வந்த 1331வது குறள்:**

செங்கல்லால் பட்ட அடி உள்ளாறும் ஆறாதே
பெண்களால் பட்ட அடி.
இப்படிக்கு, ஜூனியர் வள்ளுவர்.



இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன் அந்த மத்தியான வேளையில் டாட்டாபாத்தில் இருந்த மணிமாலாவின் வீட்டுக்குப் போய் சேர்ந்த போது அந்தத் தெருவே நிசப்தத்தில் இருந்தது. பிளாஸ்டிக் பக்கெட்டுகளை விற்கும் ஒரு வியாபாரி மட்டும்

தள்ளுவண்டியோடு கூடிய சைக்கிளில் போய்க் கொண்டு இருந்தான்.

நித்தியானந்தன் கேட்டில் கை வைத்ததும் உள்ளே கட்டிப் போட்டிருந்த பாமரேனியன் நாய் எம்பி எம்பிக் குரைத்தது.

நாயின் குரைப்பைத் தொடர்ந்து ஜன்னலில் ஒரு பெண்ணின் முகம் எட்டிப் பார்த்தது. நடுத்தர வயது. நித்தியானந்தத்தின் போலீஸ் யூனிபார்மைப் பார்த்ததும் முகம் மாறினாள். கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள். குரைக்கும் நாயை அதட்டி விட்டு நித்தியானந்தத்தைப் பார்க்க, அவர் கேட்டார்.

''மணிமாலாவோட வீடு இதுதானே?''

''ஆமா...''

''நீங்க..?''

''அவளோட அம்மா..''

''நான் பி5 போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர். போன மாசம் கொலை செயயப்பட்ட உங்க பொண்ணு மணிமாலா சம்பந்தமாய் ஒரு சின்ன என்கொய்ரி...''

''உள்ளே வாங்க..!'' அந்த அம்மாள் சொல்லிவிட்டு உள்ளே போக, நித்தியானந்தன் பின் தொடர்ந்தார்.

சிறிய வீடு என்றாலும் சுத்தமாய் இருந்தது. அந்த அம்மாள் உள்ளே போய் ''என்னங்க... ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து இருக்கார். நம்ம பொண்ணு கொலை செய்யப்பட்ட விஷயமாய் ஏதோ விசாரிக்க ணுமாம். கொஞ்சம் வந்து பார்க்கறீங்களா..?'' என்று சொல்வது நித்யானந்தத்தின் காதுகளில் விழுந்தது.

''என்னத்தை விசாரிச்சு என்னாகப் போகுது..? போலீசுக்கு பொழுது போகலைன்னா நம்ம வீட்டுக்கு வந்துடுவாங்க..!'' என்று கோபமாய் முனகிக் கொண்டே ஐம்பது வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் உள்ளறையிலிருந்து வெளிப்பட்டார். நல்ல தூக்கத்தில் இருந்தார் என்பதற்கு அடையாளமாய் கண்கள் சிவந்து போயிருந்தது. அரைக்கை பனியனும் லுங்கியும் அணிந்திருந்த அந்த நபர் நித்தியானந்தத்தை சலனம் இல்லாத ஒரு பார்வையில் நனைத்தபடியே எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

''சொல்லுங்க இன்ஸ்பெக்டர்... என்ன விஷயம்?''



''உங்க பொண்ணு மணிமாலா மர்டர் சம்பந்தப்பட்ட விஷயம்தான்..!''

''புதுசா சொல்ல என்ன இருக்கு ஸார்?''

''இருக்கு... உங்க பெண்ணைக் கத்தியால் குத்திக் கொலை செய்த இளைஞனைக் கைது பண்ணிட்டோம்.''

''யா...யா... யாரவன்..?''

''அவன் பேரு நந்தகுமார். உங்க பெண் படிச்ச அதே காலேஜில் படிச்சவனாம். மணிமாலாவை அவன் ஒருதலைபட்சமாய் லவ் பண்ணியிருக்கான். பட் மணிமாலா அவனோட காதலை ஏத்துக்கலை. 'நீ என்னைக் காதலிக்கலைன்னா கொலை பண்ணிடு வேன்'னு மிரட்டியிருக்கான். அவனோட மிரட்டலை மணிமாலா ஒரு பெரிய விஷயமாய் எடுத்துக்கலை.

சம்பவம் நடந்த அன்னிக்கு நந்தகுமார் குடி போதையில் வந்து ரோட்ல நடந்து போயிட்டிருந்த மணிமாலாகிட்டே தகராறு பண்ணியிருக்கான். மணிமாலா அவனைக் கடுமையான வார்த்தைகளால் பேச, ஆத்திரமடைஞ்ச அவன் கத்தியால குத்தியிருககான். கத்திக்குத்து வாங்கி மணிமாலா கீழே விழுந்ததும் பைக்ல ஏறி வேகமாய் விரட்டி தப்பிச்சுட்டான்.

ஒரு மணி நேரத்துக்கு முந்தி காஞ்சிபுரம் ஏழாம் நெம்பர் வீதியில் இருந்த ஒரு டாஸ்மாக் கடை 'பார்'ல உட்கார்ந்து நந்தகுமார் மது குடிச்சிட்டு இருந்த போது போதை தலைக்கேறி தனக்குப் பக்கத்தில் இருந்த ஃப்ரண்ட் கிட்டே மணிமாலாவைப் பத்தி பேசியிருக்கான். பேச்சுவாக்கில் 'அவளைத் தீர்த்துக் கட்டினது நான்தான்..! கையாலாகாத போலீஸாலே இன்னமும் கண்டு பிடிக்க முடியலை'ன்னு கேலி பேசியிருக்கான்.

டாஸ்மாக் கடையில் வேலை பார்க்கும் லாரன்ஸ் என்கிற ஊழியர் அதைக் கேட்டுட்டு உடனடியாய் போலீஸுக்கு இன்ஃபார்ம் பண்ணிட்டார். போலீஸ் உடனே கிளம்பிப் போய் நந்தகுமாரைக் கைது பண்ணி லாக்கப்புக்கு கொண்டு போய் வெச்சு விசாரித்த போது எல்லா உண்மைகளும் வெளியே வந்துடுச்சு...'' நித்தியானந்தன பேசப்பேச- மணிமாலாவின் அம்மா பெரிய குரல எடுத்து அழ ஆரம்பித்தாள்.

"அய்யா..! எம் பெண்ணைக் கொன்ன பாவியை எந்த விசாரணையையும் பண்ணாமே தூக்குல போடுங்கய்யா! இல்லேன்னா என்கிட்டே அவனை ஒப்படைங்க... அந்த நாயை என் கையாலேயே துண்டுதுண்டாய் வெட்டிப் போடறேன்."

நித்தியானந்தன் கையமர்த்தினார்.

"அம்மா..! அவன் சட்டத்தோட பிடியிலிருந்து தப்பிக்க முடியாது. ஏன்னா அவனுக்கு எதிரான சாட்சியங்கள் பலமாவே இருக்கு. அவனுக்கு மரண தண்டனை நிச்சயம்... இப்போ நான் இங்கே வந்தது இந்த விஷயத்தை சொல்றதுக்காகவும், இன்னொரு விஷயத்தைப் பத்தி பேசறதுக்காகவும்தான்!"

"இன்னொரு விஷயம்ன்னா... என்ன..?" மணிமாலாவின் அப்பா கேட்டார்.

"சத்தியவதியை உங்களுக்குத் தெரியுமா?"

"எந்த சத்தியவதி?"

"கோவையின் பெண் அரிமா சங்கத் தலைவி!"

"தெரியாது... இப்படியொரு பேரை இன்னிக்குத் தான் நாங்க கேள்விப்படறோம்."

"சரி... நான் இப்போ கேட்கப் போகிற கேள்விக்குக் கொஞ்சம் யோசனை பண்ணி பதில் சொல்ல முடியுமா?"

"என்ன கேட்கப் போறீங்க ஸார்?"

"மணிமாலாவோட செல்போன்! அவள் கொலை செய்யப்பட்டபோது செல்போனை அவ வீட்லேயே விட்டுட்டுப் போயிருந்தா இல்லையா..?"

"ஆமா..."

"அவ ஏன் செல்போனை எடுத்துட்டுப் போகலை?"

"பொதுவா அந்த செல்போன் வீட்டு உபயோகத்துக்காக வாங்கப்பட்டது. மணிமாலா வெளியே போகும்போது எடுத்துட்டு போகிற வழக்கம் இல்லை... ஸார். கொலை செய்யப்பட்ட அன்னிக்கு வீட்ல செல்போன் இருந்தது. அதற்கு அடுத்த நாள் இந்த ஏரியா இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்து செல்போனைக் கேட்டார். செல்போனில் பதிவாகியிருக்கிற எண்களையும் தகவல்களையும் வெச்சு கொலையாளியை நெருங்க முடியும்ன்னு சொன்னார். நாங்க உள்ளறையில் மேஜை மேல் இருந்த செல்போனை எடுக்கப் போனோம். அந்த



இடத்துல செல்போன் இல்லை. வேற எங்கேயாவது மறதியாய் வெச்சட்டோமோன்னு வீடு பூராவும் தேடிப் பார்த்தோம். செல்போன் கிடைக்கவே யில்லை. அது எப்படியோ காணாமே போயிடுச்சு..."

"காணாமே போயிடுச்சா... இல்லை திருட்டுப் போயிடுச்சா..?"

"தெரியலை ஸார்."

"மணிமாலா கொலை செய்யப்பட்ட முதல் நாள் வீட்ல செல்போன் இருந்தது. ரெண்டாவது நாள் போலீஸ் வந்து கேட்கும் போது இல்லை. அப்படித்தானே?"

"ஆமா... ஸார்."

"சரி... ரெண்டாவது நாள் உங்க வீட்டுக்கு யார் யார் வந்தாங்க..?"

"துக்கம் விசாரிக்கிறதுக்காக நிறைய உறவினர்களும் நண்பர்களும் வந்தாங்க ஸார்."

"அவங்கள்ல யாராவது செல்போனை எடுத்து இருக்கலாமோ?"

"எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை. வந்தவங்க எல்லாருமே டீஸண்ட் பேர்வழிகள்தான். நாம யாரை ஸார் சந்தேகப்பட முடியும்?"

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் அழுது கொண்டிருந்த மணிமாலாவின் அம்மா இப்போது சேலைத்தலைப்பால் கண்ணீரை ஒற்றிக் கொண்டே நித்தியானந்தனை ஏறிட்டாள்.

"அய்யா..! நான் உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லலாமா?"

"சொல்லுங்கம்மா..!"

"எங்க பொண்ணு மணிமாலாவே எங்களை விட்டுப் போனபிறகு அற்பப் பொருள் செல்போனை யார் எடுத்துட்டு போனா என்னான்னு நான் அதைப் பத்தி நினைக்காமே இருந்தேன். இப்போ இதுல சத்தியவதி பிரச்னை வேற வர்றதால நான் என் மனசுல இருக்கிற ஒரு சந்தேகத்தை சொல்ல லாம்ன்னு இருக்கேன். அந்த செல்போன் காணாமல் போனதுக்குக் காரணம் எங்க வீட்டு உறவினர்களோ நண்பர்களோ இல்லை..."

"பின்னே?"

அந்த அம்மாள் சொல்ல ஆரம்பித்தாள்.

**செல்போனில்வந்த ஒரு 'ஜொள்ளு' தகவல்**

பெண்களுக்கு சுடிதாரைக் கண்டு பிடித்தவன் வாழ்க! ஆனால் துப்பட் டாவைக் கண்டுபிடித்தவன் ஒழிக!
(அட பைக் சக்கரத்துல துப்பட்டா சிக்குதப்பா. ஒரு செக்கண்ட்ல என்னைத் தப்பா நினைச்சுட்டீங்களே!)

டெல்லி.

சரியாய் ஒரு மணி நேரம் முடிந்து இருந்த போது அகர்வாலின் கைக்கு அந்த லேப் ரிப்போர்ட் வந்து சேர்ந்தது.

படித்துப் பார்த்த அகர்வாலின் நெற்றி சுருக்கங் களுக்கு உட்பட்டது. நிறம் இழந்த முகத்தோடும் ஒரு பெருமூச்சோடும் பரணி குமாரிடம் நிமிர்ந்தார்.



"ஸாரி மிஸ்டர் பரணிகுமார். உங்களுக்கு என்னால் ஒரு சாதகமான தகவலைச்சொல்ல முடியவில்லை..."

"ஸார்..! எஸ் தேர் எனிதிங் ராங்..?"

"எஸ்...! அந்த இரண்டு பெண்களின் மரணங்களும் இயற்கையானது அல்ல. விஷம் கொடுத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்த விஷத்தின் பெயர் **டார்-டர் எமிடிக் (TARTAR EMETIC )** அபூர்வமான வகையைச் சேர்ந்த விஷம். பொதுவாய் எல்லா விஷங்களுமே ஏதாவது ஒரு தனிப்பட்ட தன்மையில் தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளும். அதாவது நிறம், சுவை, வாசனை இந்த தன்மைகளில் ஏதாவது ஒன்றில் அந்த விஷத்தின் பெயர் வெளிப்பட்டுவிடும். ஆனால் இந்த டார்டர் எமிடிக் விஷம் மட்டும் தன்னை எந்த ஒரு தன்மை யிலும் வெளிப்படுத்திக் கொள்ளாது. ஏனென்றால் அந்த விஷத்துக்கு சுவையோ, நிறமோ, வாசனையோ கிடையாது. இதன் காரணமாகவே பலர் தங்களுக்கு வேண்டாத நபர்களைத் தீர்த்துக் கட்டுவதற்காக இந்த டார்டர் எமிடிக் விஷத்தைப் பயன்படுத்துவார்கள். இன்பாவும், பூமாவும் அந்த வகையான விஷத்துக்குத் தான் பலியாகியிருக்கிறார்கள்."

அதிர்ச்சியிலிருந்து மீள பரணிகுமார்க்கு சில



விநாடிகள் தேவைப்பட்டது. பிறகு கேட்டார்.

"ஸார்..! இரண்டு பேர்களும் ஒரே வகை விஷத்தால்தானே கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்?"

"ஆமாம்..."

"அப்படியிருந்தால் நேர வித்தியாசம் ஏன்..? இன்பா விடியற்காலையில் இறந்தாள்! பூமா காலை பதினோரு மணி அளவில் இறந்து போனாள். காரணம் என்ன?"

"விஷத்தோட பிக்கோ க்ராம்ஸ்" **(PICOGARMS)**

"பிக்கோ க்ராம்ஸ்?..... அப்படியென்றால்..?"

"சர்க்கரை, அரிசி போன்றவைகளை அளந்து பார்த்து இத்தனை கிலோ என்றும், பால், தண்ணீர் போன்றவைகளை அளந்து பார்த்து இத்தனை லிட்டர் என்றும் நாம் தெரிந்து கொள்கிறோம் இல்லையா? அதைப் போலவே விஷத்தை அளக்க 'பிக்கோ க்ராம்ஸ்' என்ற அளவு முறை உள்ளது. எத்தனை பிக்கோ க்ராம்ஸ் கொடுத்தால் மனித உயிர் பிரியும் என்று ஒவ்வொரு விஷத்துக்கும் தனி அட்ட வணையே உண்டு. அதே போல் இந்த டார்டர் எமிடிக் விஷத்துக்கும் ஒரு அட்டவணை உண்டு. விஷத்தின் பிக்கோக்ராம்ஸ் அளவு குறையக் குறைய மரணத்தின் நேரமும் தள்ளிப் போகும். இன்பா முதலில் இறந்து போயிருக்கிறாள் என்றால் அவள் சாப்பிட்ட விஷத்தின் அளவு கூடுதலான பிக்கோ க்ராம்களை கொண்டதாக இருந்திருக்கும். அதன் பிறகு கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் கழித்து பூமா இறந்து போயிருக்கிறாள். அவள் சாப்பிட்ட விஷத் தின் அளவு அதைவிட குறைந்த பிக்கோக்ராம்களை கொண்டதாக இருந்திருக்கும்." சொல்லிக் கொண்டே வந்த அகர்வால் சட்டென்று குரலைத் தாழ்த்தினார்.

"மிஸ்டர் பரணிகுமார்..! இந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டு இருக்கும் இன்னொரு விஷயம் 'டார்-டர் எமிடிக்' பாய்ஸன் இன்பா, பூமா இரண்டு பேர்க்கும் பிஸ்கெட்டில் வைத்து கொடுக்கப்பட்டு இருக்கிறது. பிஸ்கெட்டில் ஒரு வசதி என்னவென் றால் ஒவ்வொரு பிஸ்கெட்டிலும் தேவையான அளவு 'பிக்கோ கிராம்ஸ்' கொண்ட விஷத்தை சேர்க்கலாம்."

"பிஸ்கெட்டில் விஷமா..?"

"எஸ்..! ரிப்போர்ட் அப்படித்தான் சொல்கிறது!"

''அவர்கள் சாப்பிட்டது புரோட்டா, குருமா தானே?''

''அதற்குப் பிறகு அவர்களுக்கு யாராவது பிஸ்கெட் கொடுத்து இருக்கலாமே?''

''ஒரு நிமிஷம் ஸார்...! நீங்கள் இப்போது சொன்ன தகவலை உறுதி செய்து கொள்கிறேன்!'' என்று சொன்ன பரணிகுமார் தன்னுடைய செல்போனில் 'ரெயின்போ' அமைப்பைச் சேர்ந்த ராதிகாவுக்கு எண்களை அழுத்தினார்.

மறுமுனையில் ரிங் டோன் போய் ராதிகாவின் குரல் கேட்டது. ''யாரு...?''

''ராதிகா! நான் பரணிகுமார், அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ், டெல்லியிலிருந்து பேசறேன்..!''

''ஓ... நீங்களா... ஸார்...? அகர்வாலைப் பார்த்து பேசிட்டீங்களா...? ஸ்பெசிமன் டெஸ்ட் முடிஞ்சு ரிப்போர்ட் பார்த்துட்டீங்களா..?''

''ராதிகா! அதைப்பற்றி அப்புறமா சொல்றேன். மொதல்ல நான் இப்ப கேட்கப் போகிற கேள்விகளுக்கு யோசனை பண்ணி பதில் சொல்லுங்க...''

''என்ன கேட்கப் போறீங்க ஸார்?''

''நீங்க ட்ரெய்ன்ல வரும்போது இன்பாவும் பூமாவும் பிஸ்கெட் சாப்பிட்டாங்களா..?''

''பிஸ்கெட்..?''

''ஆமா..?''

''ம்... சாப்பிட்டாங்க...''

''அந்த பிஸ்கெட்டை அவங்களுக்கு சாப்பிடக் கொடுத்தது யாரு...?''

''முழுமதிதான்...!''

''மை குட்னஸ்...''

''ஏன் ஸார்?''

''சொல்றேன்..! அந்த பிஸ்கெட்டை வேற யார் யாரெல்லாம் சாப்பிட்டாங்க...?''

''என்னைத் தவிர மத்தவங்க எல்லாருமே சாப்பிட்டாங்க. எனக்கு பிஸ்கெட் பிடிக்காதுங்கிறதால நான் சாப்பிடலை!''

''ஓ... காட்...''

''என்ன ஸார்... அதிர்ச்சியாயிட்டீங்க..? சாப்பிட்ட அந்த பிஸ்கெட்ல ஏதாவது பிரச்னையா?''

''பிரச்னைதான்...! ராதிகா... நான் இப்ப சொல்றதைக் கேட்டு பதட்டப்படாதீங்க...! பக்கத்துல யாராவது இருக்காங்களா?''



''இ..இல்ல ஸார்...''

''நான் சொல்றதை நல்லா கவனிங்க... 'ரெயின்போ' என்ற அமைப்பைச் சேர்ந்த உங்க ஏழு பேரையும் தீர்த்துக் கட்டறதுதான் முழுமதியோட நோக்கம். அதுக்காகத்தான் அவ உங்களோடு ட்ராவல் பண்ணியிருக்கா. 'டார்டர் எமிடிக்' என்ற நிறம், வாசனை, ருசியில்லாத விஷத்தை பிஸ்கெட்ல விதவிதமான அளவுகளில் கலந்து கொடுத்து இருக்கா. அதிக அளவு விஷம் கலக்கப்பட்ட பிஸ்கெட்டை சாப்பிட்டதால இன்பா முதல் பலி. அதற்கு அடுத்த அளவு விஷம் கலக்கப்பட்ட பிஸ்கெட்டை பூமா சாப்பிட்டதால பூமா இறந்து போயிருக்கா!''

''அய்யய்யோ...! மத்தவங்களும் பிஸ்கெட் சாப்பிட்டு இருக்காங்களே... ஸார்..?'' ராதிகா அழுகையோடு பதற, பரணிகுமார் குறுக்கிட்டார்.

''இதோ பாருங்க... ராதிகா... பதட்டப்படறதுக்கு இது நேரம் கிடையாது. இந்த பிஸ்கெட் விஷயம் ஆர்த்தி, நீரஜா, ஓமனா, வஹிதா... யார்க்கும் தெரிய வேண்டாம். ஈரோட்டில் சாப்பிட்ட புரோட்டா ஃபுட் பாய்ஸ் ஆகியிருக்கலாம்ன்னு சொல்லி அந்த நாலு பேரையும் உடனடியாய் ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணுங்க. நான் டாக்டர்ஸ்கிட்டே உண்மையான நிலவரத்தைச் சொல்லி ட்ரீட்மெண்ட் தரச் சொல்றேன்.''

''ஸ...ஸார்... அதுக்குள்ளே அந்த நாலுபேர்க்கும் ஏதாவது ஆயிட்டா..?''

''லேட் பண்ணினால்தான் பிரச்னை. உடனடியாய் ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணுங்க. நான் டாக்டர்கள் கிட்டே பேசிடறேன்...''

''ஸ...ஸார்... அந்த முழுமதி யாரு...? அவளுக்கு நாங்க என்ன கெடுதல் பண்ணினோம்?''

''அவ கைக்குக் கிடைச்ச பின்னாடிதான் தெரியும். எப்படியும் ரெண்டு நாள்ல பிடிச்சுடுவோம். நீங்க மொதல்ல ஆர்த்தி, நீரஜா, ஓமனா, வஹிதாவை ஹாஸ்பிட்டலைஸ் பண்ணுங்க. நான் அகர்வால் கிட்டே ஃபோர்தாய் பேசிட்டு அடுத்த ஃப்ளைட்டைப் பிடிச்சு சென்னைக்கு வந்துடறேன்!''

''ப்ளீஸ்...! சீக்கிரமாய் வாங்க ஸார். எனக்கு பயமாய் இருக்கு..!''

**செல்போன் SMS-ல் வந்த ஒரு ஜோக்**

**மனைவி:** எத்தனை தடவை சொல்றது... வேலை செய்யும் போது என் இடுப்பைக் கிள்ளாதீங்கனு?
**வேலைக்காரி:** நல்லா சொல்லுங்கம்மா... நானும் சொல்லி சொல்லி அலுத்துப் போயிட்டேன்.

மணிமாலாவின் அம்மா அழுகை அடைத்துக் கொண்ட குரலில் பேச ஆரம்பித்தாள்.

"அய்யா! என்னோட மகள் மணிமாலா கொலை செய்யப்பட்ட ரெண்டாவது நாள் பத்திரிக்கை நிருபர்களும் வந்து இருந்தாங்க... ஏதேதோ கேள்வி கேட்டாங்க... போட்டோ எடுத்துகிட்டாங்க. எனக்கு அவங்களைப் பார்க்க கோபம் வந்தது. 'எல்லாரும் இங்கிருந்து போங்க'ன்னு கத்தினேன். என்னோட கோபத்தைப் பார்த்துட்டு பெரும்பாலானவங்க போயிட்டாங்க. கடைசியில் ரெண்டே பேர் மட்டும் நின்னுட்டு இருந்தாங்க. எனக்கு கோபம் அதிகமாகி 'நீங்க மட்டும் ஏன் நின்னுட்டு இருக்கீங்க... போங்க வெளியே'ன்னு சத்தம் போட்டேன். அதுக்கு அவங்க 'உள்ளறை மேஜை மேல் எங்க காமிரா இருக்கு... எடுக்கணும்'ன்னு சொன்னாங்க. 'எடுத்துட்டு போங்க'ன்னு சொல்லிட்டு நான் அழுதுகிட்டே சமையலறைக்குள்ளே போயிட்டேன். அவங்க காமிராலவ எடுத்துட்டுப் போயிட்டாங்க. இப்ப நீங்க சொல்றதை வெச்சுப் பார்க்கும் போது செல் போனையும் அவங்கதான் எடுத்துட்டுப் போயிருக்க ணும்ன்னு என்னோட மனசுக்குப் படுது."



"அவங்க எப்படி இருந்தாங்கன்னு சொல்ல முடியுமா?"

"சம்பவம் நடந்து கிட்டதட்ட ஒரு மாசம் ஆயிட்டதால அவங்க முகங்கள் சரியா ஞாபகத்துக்கு வரல்லைங்கய்யா"

"சரி... அவங்க எந்த பத்திரிகையைச் சேர்ந்தவங்க?"

"அதுவும் தெரியல்லீங்கய்யா..."



நித்தியானந்தன் மணிமாலாவின் அப்பாவை ஏறிட்டார். மெல்லிய குரலில் கேட்டார். "நீங்க அந்த பத்திரிகைக்காரங்களைப் பார்த்தீங்களா?"

"பார்க்கலை...! ஆனா.. என்னோட மனைவி சொன்னதைக் கேட்டபோது என் மனசுக்குள்ளே சின்னதாய் ஒரு ஞாபகம்"

"சொல்லுங்க..."

"அந்த ரெண்டு பேர்ல ஒருத்தர் பெண்..."

**செல்போன் SMS-ல் வந்த பெரியாரின் பொன்மொழி**

கடவுளை நம்பினால் அது நம்பிக்கை!
கடவுளை மட்டுமே நம்பினால்
அது மூட நம்பிக்கை!

டெல்லி ஏர்போர்ட்டில் பரணிகுமார் சென்னை செல்லும் விமானத்திற்காகக் காத்துக் கொண்டிருந்த போது ராதிகாவிடமிருந்து போன் வந்தது.



"ஸார்... நான் ராதிகா..."

"சொல்லுங்க ராதிகா..."

"ஸார்... நீங்க சொல்லிய படியே நாலு பேரையும் ஹாஸ்பிட்டலைஸ் பண்ணிட்டேன். டாக்டர்ஸ் ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டு இருக்காங்க... இருந்தாலும் எனக்கு பயம்மாயிருக்கு ஸார்."

"நோ... நோ... இனிமே பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை. 'டார்டர் எமிடிக்' பாய்ஸன் அந்த நாலுபேர் உடம்பில் கலந்திருந்தால் அதை முறியடிக்கக்கூடிய மாற்று மருந்து எதுங்கிறதையும் அகர்வால் சென்னை டாக்டர்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்து இருக்கார்... இனிமே பயமில்லை. நல்ல வேளையாய் அந்த முழுமதி எல்லா பிஸ்கெட்டுக்களிலேயும் ஒரே அளவு பிக்கோ க்ராம்ஸ் கொண்ட 'டார்-டர் எமிடிக்' பாய்ஸனை சேர்க்கலை. அப்படி சேர்த்திருந்தா இன்பா உயிர்விட்ட அதே நேரத்துல எல்லாரும் இறந்து போயிருப்பாங்க. அந்த முழுமதியோட திட்டம் சில மணி இடைவெளி நேரங்களில் ஒவ்வொருத்தரா சாகணும்ங்கிறதுதான். அதுக்குள்ளே நல்ல வேளையாய் நாம தடுத்துட்டோம். பை...த...பை...

ராதிகா... ஒரு பெண் உங்களை இப்படிப் பழி வாங்க என்ன காரணம்?''

''தெரியலையே ஸார்..! எங்க 'ரெயின்போ' அமைப்பு சென்னையில் மிகவும் பிரபலமான சமூக நல அமைப்பு. தமிழ் நாட்டின் எந்தப் பகுதியில் என்ன இயற்கை இடையூறுகள் ஏற்பட்டாலும் நாங்க ஏழு பேரும் யாரையும் எதிர்பார்க்காமே- யார் கட்டளைக்கும் காத்திருக்காமே உடனே புறப்பட்டுப் போய் சமூக சேவை செய்வோம். 2004-ம் ஆண்டு தமிழ்நாட்டை சுனாமி தாக்கியபோது கடலின் பரப்பு ஊருக்குள் நீண்டது. ஆயிரக்கணக்கான வீடுகள் கடல் நீரிலே கரைந்து போயிற்று. பல்லாயிரக் கணக்கான மக்கள் உயிரோடு ஜலசமாதியானார்கள். அந்த நேரத்தில் நாங்கள் முழு மூச்சாய் கடலோர மாவட்டங்களுக்குப் போய் மீட்புப் பணிகளை மேற்கொண்டோம். எங்களோட சீரிய பணியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு கூட விருது கொடுத்தது. இப்படி பொதுநலசேவையில் ஈடுபடற எங்கள் மீது யார்க்கு என்ன கோபம் இருக்கமுடியும்ன்னு தெரியலை. எங்களுக்கு திருமணம்ன்னு ஒண்ணு நடந்தா அது எங்களுடைய பொதுநலப் பணிகளை பாதிக்கும் என்கிற காரணத்துக்காகவே நாங்க திருமணமே பண்ணிக்கிறதில்லை என்கிற முடிவோடு இருக்கோம். இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணத்தோடு இருக்கிற எங்க மேல யார்க்கு என்ன கோபம்? நாங்க உயிரோடு இருந்தா யார்க்கு என்ன நஷ்டம்?''

''கவலைப்படாதீங்க ராதிகா...! உண்மையோட விளிம்புக்கு வந்துட்டோம். கூடிய சீக்கிரமே கொலையாளியைக் கண்டுபிடிச்சுடுவோம். நான் சென்னைக்கு வந்ததும் உங்களை மீட் பண்றேன்.''

''ஸார்..! உங்களுக்கு என்னோட நன்றி!''

''எதுக்கு நன்றி?''

''மிகச் சரியான நேரத்தில் டெல்லிக்கு புறப்பட்டு போய் எங்களோட அமைப்பைச் சேர்ந்த நாலு பெண்களோட உயிரைக் காப்பாத்தியிருக்கீங்க. இந்த உதவியை நாங்க என்னிக்குமே மறக்க மாட்டோம்...''

பரணிகுமார் சிரித்தார். ''ஒரு போலீஸ் அதிகாரிக்கு உண்டான கடமை எதுவோ அதைத்தான் நான் பண்ணியிருக்கேன்...! இன்பா இறந்த போதே இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை எடுத்து இருந்தால் பூமாவோட உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்.''



''ரெண்டு பேரை மிஸ் பண்ணணும்ன்னு விதி இருக்கும் போது நாம என்ன ஸார் பண்ண முடியும்?''

''ஓ.கே... ராதிகா... எனக்கு ஏதோ கால் வருது. சென்னை வந்து பேசுவோம்..!'' சொல்லிவிட்டு செல்போனை அணைத்த பரணிகுமார் அழைத்தது யார் என்று மிஸ்டு காலில் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன்.

ஆப்ஷன் பட்டனை அழுத்திப் பேசினார்.

''என்ன நித்தியானந்தன்?''

''ஸார்..! முழுமதி யார்ங்கிறதை ட்ரேஸ் பண்ணிட்டேன். அவனை 'ட்ராப்' பண்ணத்தான் மஃப்டி ஸ்க்வாடோடு போயிட்டிருக்கேன்!''

''யார் அந்த முழுமதி?''

''திரிவேணி ஸார்! 'பஞ்ச தந்திரம்' பத்திரிகையின் ரிப்போர்ட்டர்..!''

**செல்போன் SMS-ல் வந்த ஒரு பிரம்மச்சாரி இளைஞனின் தீர்க்கதரிசனம்!**

லவ் மேரேஜ்ஜைவிட அரேன்ஜ்ட் மேரேஜே நல்லது. ஏன் தெரியுமா? தெரிஞ்ச பிசாசைவிட தெரியாத குட்டிச்சாத்தானே பெட்டர்.

'Be Strong In Your Decisions either it gives Victory or Failure. But it Will teach you a Lesson whether todo or not todo' என்ற வாக்கியத்தை ஒரு தடவைக்கு இரு தடவை படித்துக் கொண்டிருந்த திரிவேணி தன்னுடைய பத்திரிகை அலுவலக அறைக்குள் யாரோ நுழைவதை உணர்ந்ததும் புத்தகத்தைத் தாழ்த்திக் கொண்டு நிமிர்ந்தாள்.



இன்ஸ்பெக்டர் நித்தியானந்தன் ஒயிட் பேண்ட் ஒயிட் சர்ட்டில் தெரிந்தார்.

திரிவேணி மலர்ந்தாள்.

''ஓ..! காவல் துறை...! வாங்க ஸார்.. வாங்க. என்னுடைய மத்தியான வணக்கம்!''

''உட்காரலாமா?''

''என்ன ஸார் இது அனுமதி கேட்டுகிட்டு... உட்காருங்க ஸார்!''

நித்தியானந்தன் உட்கார்ந்து கொண்டே கேட்டார். "எப்படியிருக்க முழுமதி..?"

திரிவேணி புத்தகத்தை மூடிவைத்துவிட்டுப் புன்னகைத்தாள். "''கங்கிராட்ஸ்...! கடைசியில் நான்தான் முழுமதின்னு கண்டுபிடிச்சு என் முன்னாடியே வந்து உட்கார்ந்துட்டீங்க..! சும்மா சொல்லக்கூடாது... சென்னை போலீஸ் சென்னை போலீஸ்தான்..!"

நித்தியானந்தன் கையமர்த்தினார்.

"பாராட்டு போதும்..! எதுக்காக இதெல்லாம்..? அந்த 'ரெயின்போ' அமைப்பு பெண்கள் உனக்கு என்ன கெடுதல் பண்ணினாங்கன்னு இவ்வளவு பெரிய தண்டனை...?"

திரிவேணியின் புன்னகை பெரிதாயிற்று. "இப்படி ஒரு கேள்விக்காகத்தான் இத்தனை நாட்களாய் காத்துகிட்டு இருந்தேன். போலீஸ்ல மாட்டிக்கிட்டோமே என்கிற பயம் எனக்குக் கொஞ்சம் கூட இல்லை. ஏன்னா அந்த 'ரெயின்போ' அமைப்பைச் சேர்ந்த ஏழு பேரோட கதையையும் முடிச்ச பிறகு நானே போலீஸ்ல வந்து சரணடையலாம்ன்னு இருந்தேன். அதுக்குள்ளே நீங்களே ஸ்மெல் பண்ணிட்டீங்க. அந்த ஏழு பேரோட உயிர்க்கு நான் ஏன் குறி வைக்கணும்? இதுதானே உங்க கேள்வி?"

"ஆமா..."

"அப்படீன்னா இந்த அறிக்கையைப் படிங்க." சொன்ன திரிவேணி தன் மேஜையின் டிராயரைத் திறந்து கற்றையாய் சில பேப்பர்களைக் கொடுத்தாள். நித்தியானந்தன் வாங்கிப் பார்த்தார். வார்த்தைகள் கண்ணில் பட்டது.

***முன்னாள் நீதிபதி ஆதிசேஷன் கமிஷன் சுனாமி நிதி முறைகேடு பற்றிய உண்மைகளைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட கமிஷனின் அறிக்கை:***

இயற்கைப் , பேரழிவுகளில் பூகம்பம் கொடியது. அதைக் காட்டிலும் கொடுமையானது இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்த போது 2004-ல் சுனாமி என்ற பெயரில் ஒரு கொடுமை விஸ்வரூபம், எடுத்து கடல் அரக்கன் படையெடுத்து வந்து சில நொடிகளிலேயே பல்லாயிரக்கணக்கான உயிர்களை விழுங்கி தன் பசியைத் தீர்த்துக் கொண்டான். இந்த உச்சபட்சக்



கொடுமையைப் பார்த்து உலகமே மிரண்டு போயிற்று. நம் பகை நாடுகளும் கூட பதறிக் கொண்டு உதவி செய்ய முன்வந்தன. நட்பு நாடுகளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். இந்தியாவின் மேல் பரிவும் பாசமும் கொண்ட நாடுகள் கோடிக்கணக்கில் பணத்தைக் கொண்டு வந்து கொட்டியது. ரெண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரஸ்ட் மற்றும் தொண்டு நிறுவனங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய ஓடோடி வந்தன. வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க போர்க்கால வேகத்தில் திட்டங்கள் போடப்பட்டன. அதுவரையிலும் மக்கள் தங்குவதற்கு டெண்ட்டுகள் அமைக்கப்பட்டன. உடுக்க உடைகளும் வேளா வேளைக்கு உண்ண தரமான உணவும் கொடுக்கப்பட்டது. மருத்துவ வசதிகள் பெரிய அளவுக்கு செய்து கொடுக்கப் பட்டது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு கோடிக்கணக்கில் நிதிகளை வழங்கியது. ஆனால் அப்படிக் கிடைத்த கோடிக்கணக்கான பணம் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக போய்க்கிடைத்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 5139 தொண்டு நிறுவனங்கள் உள்ளன. அதில் 36 தொண்டு நிறுவனங்கள்தான் நல்ல முறையில் செயல்பட்டு வந்தது என்பது இந்த விசாரணைக் கமிஷன் மூலம் தெரிய வந்தது. வெளிநாட்டிலிருந்து வந்த பணத்தை நெஞ்சில் ஈரம் இல்லாமல் நிலை கெட்ட சில மனிதர்கள் சுரண்டி சுயநலத்திற்கு பயன்படுத்திக் கொண்ட கொடுமையையும் தமிழகம் கண்டது. சுனாமி தாக்குதலுக்குப் பிறகு சமூக நல அமைப்புகள் என்று சொல்லிக் கொண்டு நூற்றுக் கணக்கான சமூக நல அமைப்புகள் காளான்களைப் போல் முளைத்தன. அப்படி முளைத்த காளான்கள் சுனாமி நிதியைக் கோடிக்கணக்கில் சுருட்டிக் கொண்டதாகவும் அந்தப் பணத்தைக் கொண்டு சொத்துக்கள் வாங்கிக் குவித்ததாகவும் புகார்கள் எழுந்தன.

அந்தப் புகார்கள் எல்லாம் உண்மையா பொய்யா என்று இந்த விசாரணைக் கமிஷன் விசாரித்தபோது அது எல்லாமே பொய் சிறிதும் கலக்காத அக்மார்க் உண்மைகள் என்று தெரிய வந்தது.''

நித்யானந்தன் அந்த அறிக்கையைப் படிப்பதை நிறுத்தி திரிவேணியைப் பார்த்தார்.

''இந்த அறிக்கைக்கும் நடந்த சம்பவங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் இருக்கு ஸார்... சம்பந்தம் இருக்கப் போய்த்தானே உங்களைப் படிக்கச் சொன்னேன்! ஸார்..! நீதிபதி ஆதிசேஷன் தன்னுடைய விசாரணைக் கமிஷன் அறிக்கையில் சுனாமி நிதியைக் கோடிக்கணக்கில் சுருட்டிய காளான்களைப் பற்றி சொல்லியிருக்கார் இல்லையா? அந்தக் காளான்களில் ஒண்ணுதான் அந்த **'ரெயின்போ' சமூக நல அமைப்பு**. சாதாரண காளான் இல்லை. விஷக் காளான். அந்த அமைப்பில் இருக்கிற ஏழு பெண்களும் கடந்த ஐந்து வருஷங்களுக்கு முந்தி கொல்கொத்தா சிவப்பு விளக்குப் பகுதியில் ஆண்களுக்கு சேவை பண்ணிட்டு- சென்னைக்கு வந்து பிழைக்க என்ன வழி என்று யோசித்து பிறகு சுனாமியைக் கையில் எடுத்துக் கொண்டவர்கள். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கிறேன் என்று கிளம்பிய இவர்கள் ரெயின்போ சமூக நல அமைப்பு என்று ஒன்றை உருவாக்கிக் கொண்டு வெளிநாட்டிலிருந்து வந்த பணத்தை கோடிக்கணக்கில் கொள்ளையடித்துள்ளார்கள். அமெரிக்காவைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான **ஈ.ஆர்.டி.** சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய ரெயின்போ அமைப்பு மூலம் பதினேழு கோடி ரூபாய் அளித்தது. அதில் பாதி பணத்தைக் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு செலவழிக்காமல் அப்படியே பதுக்கிக் கொண்டார்கள். பணத்தைப் பதுக்கிக் கொண்டால் கூடப் பரவாயில்லை. இவர்களோட அட்டூழியத்தை தெரிந்து போலீஸில் புகார் செய்ய முயற்சி பண்ணின ரெண்டு மீனவப் பெண்களைத் தீர்த்துக் கட்டியிருக்காங்க. எல்லாத்துக்கும் மேலாய்- சுனாமியில் பெற்றோர்களை இழந்துட்டு என்ன செய்யறதுன்னு தனி மரமாய் நின்ற இளம்பெண்களை வேலைக்கு



சேர்த்து விடறேன்னு சொல்லி மும்பைக்கு கூட்டிட்டு போய் சிவப்பு விளக்குப் பகுதியில் விற்ற கொடுமையையும் பண்ணியிருக்காங்க. இப்படிப் பட்ட 'ரெயின்போ' அமைப்புக்கு அரசாங்கத்தில் இருக்கிற சில உயர் அதிகாரிகளும் துணை போயிருக்காங்க. ராதிகா, ஆர்த்தி, இன்பா, நீரஜா, பூமா, ஓமனா, வஹிதா என்கிற இந்த ஏழு பேரும் பெண் இனத்தின் அவமானச் சின்னங்கள். அந்த அவமானச் சின்னங்களை அழிக்கத்தான் முழுமதி என்கிற பேரில் அவதாரம் எடுத்தேன். என்னோட அப்பா ஹரிபாபு சினிஃபீல்டில் மேக்கப் மேனாய் இருந்தவர். ரெண்டு வருஷங்களுக்கு முன்னாடிதான் அவர் இறந்து போனார். எனக்கும் ஓரளவுக்கு மேக்கப் கலை தெரியும். அந்தக் கலையைப் பயன்படுத்தி என்னோட முகத்தை யார்க்கும் அடையாளம் தெரியாதபடிக்கு அவலட்சணமாய் மாத்திகிட்டு முழுமதி என்கிற பேர்ல விஷம் தோய்ந்த பிஸ்கெட் பாக்கெட்டோடு சென்னையிலிருந்து கோவைக்குப் பயணம் பண்ணினேன். என்னோட திட்டத்துக்கு உதவியாய் இருந்தவர் என்னுடைய கோ-ரிப்போர்ட்டர் மணிபாரதி. ட்ரெய்னில் மீசைக்காரனாய் வந்து என்னை டீஸ் பண்ற மாதிரி நடிச்சது அவர்தான். அந்த நடிப்பை நிஜம்ன்னு நம்பிய ரெயின்போ கோஷ்டி எனக்கு அடைக்கலம் கொடுத்து தங்களுக்குப் பக்கத்துல உட்கார வெச்சுட்டாங்க... கொஞ்ச நேரம் போனதும் நான் பிஸ்கெட் பாக்கெட்டைப் பிரிச்சு விஷம் கலக்காத பிஸ்கெட்டை நான் எடுத்துகிட்டு மற்ற பிஸ்கெட்டுகளை அவங்களுக்குக் கொடுத்தேன். ராதிகாவைத் தவிர மத்தவங்க எல்லோரும் பிஸ்கெட்டுகளை எடுத்து சாப்பிட்டாங்க. நான் ராதிகாவை சாப்பிட வைக்க எவ்வளவோ முயற்சி பண்ணினேன் முடியலை.''

நித்தியானந்தன் இடைமறித்தார்.

''சரி...! ரெயின்போ கோஷ்டி மேல் உனக்குள்ள கோபம் நியாயமானது. பட் சத்தியவதி என்ன பண்ணினாங்க...? அவங்களுக்கு ஏன் இத்தனை டார்ச்சர்..?''

''சத்தியவதியின் மேல் எனக்கு கோபம் வந்ததுக்கு காரணம்- அவங்க இந்த கோவையில் ரெயின்போ கோஷ்டிக்கு பாராட்டு விழா நடத்த

ஏற்பாடு பண்ணினதுதான். அதுவும் இல்லாமே ரெயின்போ கோஷ்டி அடிக்கிற கொள்ளையில் அந்த அம்மாவுக்கும் பங்கு இருக்கலாமோன்னு ஒரு சந்தேகம் வந்ததுதான். அதனால சத்தியவதியை டார்ச்சர் பண்றதுக்காக அவங்க செல்போனைத் திருடினேன்.''

''திருடினது எப்படி..?''

''சத்தியவதிக்கு விளம்பரம்ன்னா பிடிக்கும். ஏதாவது ஒரு காரணத்துக்காக அவங்க வீட்ல அடிக்கடி பிரஸ்மீட் நடத்துவாங்க. ரெண்டு வாரத்துக்கு முந்தி ரெயின்போ கோஷ்டியைப் பாராட்டறது சம்பந்தமாய் ஒரு பிரஸ் மீட் கண்டக்ட் பண்ணினாங்க. நானும் மணிபாரதியும் போயிருந்தோம். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி செல்போனை எடுத்துட்டு அதே மாதிரி ஏற்கனவே வாங்கி வெச்சிருந்த செல்போனை அங்க வெச்சோம். அந்த செல்போன்லதான் மணிமாலாவோட சிம்கார்டு இருந்தது. சத்தியவதியை போலீஸ் டார்ச்சர் பண்ணனும். அதே நேரத்துல கொலைகளுக்கான மோட்டீவ் எதுன்னு தெரியாமே போலீஸ் திணறணும். இதுதான் எங்களோட நோக்கமாய் இருந்தது.''

''சரி...! முழுமதின்னு ஒரு பொண்ணு உண்மையாவே 'ஷைனிங் ஸ்டார்ஸ்' என்கிற பள்ளியில் மேத்ஸ் டீச்சராய் இருக்கா. அந்தப் பொண்ணோட பேரை நீ தேர்ந்து எடுக்க என்ன காரணம்?''

''ஒரு காரணமும் இல்லை ஸார்...! ரெயின்போ கோஷ்டி ஒரு உஷாரான பார்ட்டி. என்னோட நடவடிக்கைகளில் அவங்களுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டு அந்த ஸ்கூலுக்கு போன் பண்ணிக் கேட்டாலும் முழுமதி என்கிற பேர்ல ஒரு டீச்சர் அங்கே இருக்காங்கன்னு தெரிஞ்சுட்டா என்மேல அவங்களுக்கு எந்த சந்தேகமும் வராதே!''

''அந்த முழுமதி உனக்குத் தெரிஞ்ச பெண்ணா?''

''இல்ல ஸார்... ஒரு தடவை நான் சென்னைக்குப் போயிருந்தபோது ஒரு பேட்டி எடுக்கிற விஷயமாய் அந்த ஸ்கூலுக்குப் போயிருந்தேன். அப்போ ஒரு டீச்சர் இன்னொரு டீச்சரைப் பார்த்து 'முழுமதி'ன்னு கூப்பிட்டு பேசிட்டிருந்தாங்க. அந்த முழுமதி என்கிற பேர் அழகாகவும் கொஞ்சம் வித்தியாசமாகவும் இருந்ததால அந்தப் பேரை உபயோகப் படுத்திகிட்டேன்.''



''அந்த டார்டர் எமிடிக் விஷம் எப்படி கிடைச்சது?''

''ஆந்திராவில் 'ஹனம்கொண்டா'ன்னு ஒரு இடம். அங்கே போனா- குண்டூசியிலிருந்து பொக்ரான் அணுகுண்டு வரை- பணத்தை வீசினா எல்லாமே கிடைக்கும்.''

''உன்னோட மணிபாரதி எங்கே?''

''பயப்படாதீங்க ஸார்...! மணிபாரதி தன் சொந்த வேலையாய் திருச்சிவரை போயிருக்கார். பத்திரிகை ஆசிரியர் டெல்லியில் இருக்கார். அவர்க்கு இந்த விஷயமெல்லாம் தெரியாது. அநாவசியமாய் அவர் மேல் சந்தேகப்பட வேண்டாம். மணிபாரதி வந்ததும் கைது பண்ணுங்க. என்னை இப்ப கைது பண்ணுங்க...'' திரிவேணி சொல்லிக் கொண்டிருக்கும் போதே நித்தியானந்தத்தின் செல்போன் சிணுங்கியது.

எடுத்தார்.

மறுமுனையில் சப் - இன்ஸ்பெக்டர் தமிழரசன்.

''சொல்லுங்க தமிழரசன்..!''

''ஸார்... எதிர்பாராத விதமாய்... ஒரு மோசமான சம்பவம்''

''என்ன..?''

**திரிவேணியின் செல்போனில் இருந்த ஒரு ஆங்கில வாசகம்!**

When your commitment is deeper than Sea, and your Ambition is higher than Sky, then Your future will be brighter than Sun. So, Think always Positive... and Eradicate Evil Things!

நித்யானந்தன் பதட்டமாய்க் கேட்டார்.




''என்ன தமிழரசன்... வாட் ஹேப்பண்ட்..?''

''ஸார்... அந்த ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த ராதிகா என்கிற பெண் ஹாஸ்பிட்டல் மேல் மாடியிலிருந்து கீழே குதிச்சு தற்கொலை பண்ணிக்கிட்டா... இங்கே ஒரே

டென்ஷனாய் இருக்கு ஸார்.''

''சம்பவம் எப்ப நடந்தது..?''

''பத்து நிமிஷத்துக்கு முந்தி ஸார்.''

''தற்கொலைதானா?''

''ஆமா... ஸார்... தற்கொலைதான்...! அந்தப் பெண் தனக்கு வந்த ஒரு செல்போன் செய்தியைக் கேட்டுட்டு மொட்டை மாடிக்கு ஓடிப் போனதை டாக்டர்களும் நர்ஸ்களும் பார்த்து இருக்காங்க. எதுக்காக ஓடறான்னு பார்த்துட்டு இருக்கும்போதே மேலிருந்து கீழே குதிச்சிருக்கா... விழுந்ததுமே ஸ்பாட்ல டெத்...! தற்கொலைக்கு என்ன காரணம்ன்னு தெரியலை ஸார்.''

''காரணம் எனக்குத் தெரியும் தமிழரசன்! வந்து சொல்றேன்... நீங்க உடனடியாய் ஒரு வேலை பண்ணனும்.''

''சொல்லுங்க ஸார்.''

''ராதிகாவோட செல்போன் சேதம் ஆகியிருக்காத பட்சத்தில் அந்த ஃபோனையும், தவிர ஹாஸ்பிட்டலில் விஷ முறிவுக்காக ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டு இருக்கும் ஆர்த்தி, நீரஜா, ஓமனா, வஹிதா, இவங்ககிட்டே இருக்கிற செல்போன்களையும் உடனடியாய் கைப்பற்றி பாதுகாப்பாய் வையுங்க...!''

''எஸ், ஸார்..!''

''நான் இன்னும் கொஞ்ச நேரத்துல ஸ்பாட்டுக்கு வர்றேன்'' சொல்லி செல்போனை அணைத்தவர் திரிவேணியை ஏறிட்டார். அவள் புன்னகைத்தாள்.

''என்ன ஸார்... ஏதோ வேண்டாத செய்தி போலிருக்கு?''

''எஸ்...''

''என்னான்னு தெரிஞ்சுக்கலாமா ஸார்?''

நித்தியானந்தம் சொன்னார். திரிவேணி அதைக் கேட்டுவிட்டு சிரித்தாள், ''அந்தக் கடவுளுக்கு நன்றி..! ரெயின்போவில் இருந்த ஏழு நிறங்களில் மூன்று சாயம் போய்விட்டது. மீதி இருக்கும் நான்கு நிறங்களும் சாயம் போக சட்டம் தன்னோட கடமையைச் செய்யணும் ஸார்.''

''செய்யும்'' என்றார் நித்தியானந்தன்.



**செல்போன் SMS தத்துவங்களிலேயே முத்தான தத்துவம் இது!**



மனிதன் எப்படி வாழ்வது என்று
ஒவ்வொரு நாளும்
கற்றுக்கொண்டுதான் இருக்கிறான்.
ஆனால் –
ஒரு நாளும் வாழ்வதில்லை!

இரண்டு நாட்கள் கழித்து பிரஸ்மீட் ஒன்றில் பரணிகுமார் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.



''ஸார்..! இவ்வளவு பெரிய அளவில் கோடிக்கணக்கான ரூபாய்களில் சுனாமி மோசடி நடந்து இருக்கிறது. இது எப்படி அரசுக்குத் தெரியாமல் போயிற்று..?''

''இது அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்வி!''

''சத்தியவதிக்கு இந்த சுனாமி ஊழலில் பங்கு இருக்கிறதா, இல்லையா?''

''இல்லை என்பது முதல்கட்ட விசாரணையிலேயே தெரிந்து விட்டது. சத்தியவதி தன் அரிமா சங்கம் சார்பில் ரெயின்போ அமைப்புக்குப் பாராட்டு விழா நடத்த நினைத்ததை திரிவேணியும், மணிபாரதியும் தப்பாக நினைத்து விட்டார்கள்...''

''ரெயின்போ அமைப்பைச் சேர்ந்த ஏழு பெண்களும் கொல்கத்தா சிவப்பு விளக்குப் பகுதியில் இருந்தவர்கள் என்பது உண்மையா?''

''உண்மைதான்..! அதை இப்போது உயிரோடு இருக்கும் மற்ற நான்கு பெண்களும் ஒப்புக் கொண்டு விட்டார்கள். அவர்கள் சூறையாடிய கோடிக்கணக்கான பணத்தை எங்கெங்கே முதலீடு செய்துள்ளார்கள் என்பதையும் லிஸ்ட் செய்து கொடுத்து விட்டார்கள்...''

''ஸார்..! திரிவேணியும், மணிபாரதியும் செய்தது சட்டத்தின் பார்வைக்கு அநியாயமாய்த் தெரிந்

தாலும், மக்களின் பார்வைக்கு நியாயமாய்ப் பட்டு அவர்களைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இது பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''சட்டத்தை யார் கையில் எடுத்துக் கொண்டாலும் அது மிகப் பெரிய தவறான ஒன்று. பாமர மக்களுக்கும் சட்டம் பற்றிய ஞானம் இல்லாதவர் களுக்கும் திரிவேணி, மணிபாரதி செயல்கள் மகிழ்ச்சியைத் தரலாம். அது நியாயமான மகிழ்ச்சி யல்ல. யார் என்ன தவறு செய்தாலும் அதைக்கண்டிக் கவும், தண்டிக்கவும் சட்ட அமைப்பு இருக்கிறது...''

''இப்போதைய சட்டம் என்பது கொலுவில் வைத்து இருக்கும் அலங்கார பொம்மையைப் போன்றதுன்னு திரிவேணியும், மணிபாரதியும் சொல்லியிருக்காங்களே...?''

''வசனம் நல்லாயிருக்கு. சினிமாவில் நடிக்கும் ஹீரோ பேசினால் கை தட்டல் கிடைக்கும்...''

''உங்களுடைய அடுத்தகட்ட நடவடிக்கை எது?''

''சுனாமி பணத்தை சூறையாடிய மற்ற சமூகநல அமைப்புகள் எது எதுன்னு ஸ்மெல் செய்து கொண்டு இருக்கிறோம். சரியான ஆதாரங்கள் கிடைத்ததும் கடுமையான நடவடிக்கை எடுத்து எல்லாப் பணத்தையும் மீட்டு உரியவர்களுக்கு போய்ச் சேரும் படியாய் செய்வதுதான் அடுத்தகட்டப் பணி...'' சொல்லிவிட்டு நாற்காலியினின்றும் எழுந்தார் பரணிகுமார்.

''பேட்டியை முடித்துக் கொள்ளலாமா?''

முணுமுணுப்புகளோடு எல்லோரும் கலைந்து போக-

ஒரே ஒரு பெண் நிருபர் மட்டும் அசையாமல் நின்றார்.

''ஸார்..!''

''என்னம்மா..?''

''ஒரே ஒரு கேள்வி ஸார்...''

''ப்ளீஸ்...''

''திரிவேணி, மணிபாரதி செய்தது சரின்னு நான் நினைக்கிறேன். நீங்க உங்க போலீஸ் யூனிஃபார்மை



மறந்துட்டு பதில் சொல்லுங்க. அவங்க செய்தது சரியா?''

''அவசியம் பதில் சொல்லணுமா?''

''ரொம்ப ரொம்ப அவசியம்!''

பரணிகுமார் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய ஆட்டோகிராப் டயரியை எடுத்தார். சொன்னார்.

''இதில் நான் ரொம்பவும் மதிக்கிற எல்லாரோட கையெழுத்துக்களும் இருக்கு. கடைசிப்பக்கம் யார்கிட்டே கையெழுத்து வாங்கியிருக்கேன்னு பாருங்க...''

அந்தப் பெண் நிருபர் பார்த்தாள்.




- முற்றும் -

**அர்த்தமுள்ள அரட்டை 17ம் பக்கத் தொடர்ச்சி...**

பிரச்னை இருந்து அது பேச்சுவார்த்தையின் மூலம் சரி செய்யப்பட்டது.''

''பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டு இருப்பது எங்கே? தமிழ்நாட்டிலா... கேரளாவிலா?''

ரூபலா கேட்ட கேள்விக்கு விவேக் பதில் சொல்வதற்குள்...

**வா**சகர்களே.!

பதில் உங்களுக்குத் தெரியுமா..? தெரிந்தால் ஒரு தபால் கார்டை எடுத்து பதில் எழுதி *15-12-2009* தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சரியான பதில் எழுதும் 5 வாசகர்களுக்கு புத்தகம் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**அர்த்தமுள்ள அரட்டை,**
**க்ரைம் நாவல்,**
**ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

**இனி சென்ற மாத அர்த்தமுள்ள அரட்டையில் கேட்கப்பட்ட கேள்வியும் அதற்கான பதிலும்:**

**கேள்வி:** நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ராமகிருஷ்ணனுக்கு நோபல் பரிசுத் தொகையாய் எவ்வளவு பணம் கிடைக்கும்?

**பதில்:** நோபல் பரிசின் மொத்த தொகை 7 கோடி ரூபாய். வேதியியல் துறையில் ராமகிருஷ்ணன் உட்பட 3 பேர்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. எனவே 7 கோடி ரூபாய் 3 பங்காக பிரிக்கப்பட்டு 2 கோடியே 33 லட்சத்து 33 ஆயிரம் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

**சரியான பதில் எழுதிய 5 வாசகர்கள்**

1. எஸ். குமாரகுரு. - சுந்தரபாண்டியம், நெல்லை.
2. எம். போஜராஜன் - மசினகுடி. (நீலகிரி)
3. பி.ஆர் தருண் - இந்திரா நகர், பெங்களூர்.
4. வெ. தர்மராஜன் - பணகுடி.
5. கவிஞர் சேக்கிழார் - மேட்டுத்துறை.



# ஹைக்கூ போட்டி

க்ரைம் நாவல் - 251 ஆவது இதழில் அறிவிக்கப்பட்டிருந்த 'ஹைக் கூ' போட்டி 2-ல் தேர்ந்தெடுக்கப்பட்டவை.

## முதல் பரிசு

பெண் கேட்பார்களா
பொன் இல்லாமல்?
ஆசையில் முதிர்கன்னி

- ரா.சதீஷ், அன்னியூர்.

## ஆறுதல் பரிசுகள்

1. பெண் எடுக்கும் இடத்தில்
பொன் நகைக் குவியலுக்கு
ஆசை வைக்காதவனே ஆண்மகன்
-கே.வெங்கடேசன், தோட்டப்பாளையம்.

2. பெண் மோகம் கொண்டவன் பித்தன்!
பொன் ஆசை கொண்டவன் எத்தன்!
ஆசைகளைத் துறந்தவனே புத்தன்!
- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

# ஹைக்கூ போட்டி - 3

விதி ..............................
மதி ..............................
சதி ..............................

விடுபட்ட இடங்களில் வார்த்தைகள் போட்டு ஹைக் கூ கவிதை ஆக்குங்கள். பரிசு உண்டு!

**போட்டிக் கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

**ஹைக்கூ போட்டி-3**
**க்ரைம் நாவல்,**
ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணிநெடுஞ்சாலை,
சென்னை - 5.